உதயன்
ரூபா 15.00
www.uthayan.com
சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 13 ஞாயிற்றுக்கிழமை (27.06.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 213

### தளபதி ஜகத் ஜயசூரியா மகாநாயக்கர்களிடம் எடுத்துரைப்பு

# வடக்கு, கிழக்கில் நிரந்தர இராணுவக் குடியிருப்புக்கள்

## வீடுகளில் வசித்து விவசாயம் செய்யவும் வசதி வழங்கப்படும்

கண்டி,ஜூன்27

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிரந்தர இராணுவக் குடியிருப்புக்களை நிறுவவும், அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடும் படையினருக்கு நிரந்தர வீடுகள் கட்டிக்கொடுக்கவும், அந்தந்தப் பகுதிகளில் அவர்கள் நெல் உற்பத்தி மற்றும் விவசாயம் செய்யவும் வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படும்.

இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கிறார் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரியா.

பொசன் விழாவை முன்னிட்டு இராணுவத் தளபதி மல்வத்த மற்றும் அஸ்கிரிய மகாநாயக்கர்களைச் சந்தித்து அவர்களிடம் ஆசிபெற்றார். அதன்பின்னரான கலந்துரையாடல்களிலேயே மேற்கண்ட புதிய தகவல்களை அவர்களிடம் எடுத்துக்கூறினார் (28ஆம் பக்கம் பார்க்க)



## திடீரென ஒன்றுகூடியுள்ள தமிழ்க் கட்சியினர் எம்முடன் பேச எண்ணுவதுதான் என்ன?



### விவரம் தெரிந்தால் ஆராய்வோம் என்கிறார் சுரேஷ்

கொழும்பு,ஜூன்27

தற்சமயம் திடீரென ஒன்றுகூடியுள்ள தமிழ்க் கட்சிகள் எம்முடன் என்ன விடயங்கள் தொடர்பாக பேச விரும்புகிறார்கள் - எண்ணுகிறார்கள் என்பதனை அறிவித்தால் அவர்களுடன் பேசுவது குறித்து கூட்டமைப்பு ஆராய்ந்து முடிவு செய்யும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் முதலாம் திகதி தமிழ்க் கட்சிகளின் கூட்டம் இடம்பெறும் என்றும் அக்கூட்டத்துக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் அழைப்பு விடுக்கப்படும் என்றும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தார். அது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே சுரேஷ் பிரேமச் (28ஆம் பக்கம் பார்க்க)

### பிரிட்டனின் துணைத் தூதுவர் நாளை யாழ்.வருகிறார்

யாழ்ப்பாணம்,ஜூன்27

குடாநாட்டின் தற்போதைய நிலைமைகளை நேரில் அறிந்துகொள்வதற்காக இலங்கைக்கான பிரிட்டனின் துணைத் தூதுவர் நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணம், வருகின்றார்.

காலையில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் (28ஆம் பக்கம் பார்க்க)

## எந்தவிடயத்திலும் இணக்கம் எட்டப்படாமல் முடிவுற்ற மன்னார் மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டம்

### உறுதியான பதில் கிடைக்காமல் கூட்டமைப்பு எம்.பிக்கள் விசனம்

மன்னார்,ஜூன்27

மன்னார் மாவட்டத்துக்கான இணைப்புக் குழுவின் கூட்டம் நேற்று இடம்பெற்றபோதும் எந்த விடயத்திலும் இணக்கமோ முடிவோ எட்டப்படவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மேற்கண்டவாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

மன்னார் செயலகத்தில் மன்னார் மாவட்டத்துக்கான இணைப்புக் குழுக் கூட்டம் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, அமைச்சர் ரிசாத் பதியுதீன் ஆகியோர் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோ நோதராதலிங்கம்,சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நேற்றைய கூட்டத்தில் எந்தவொரு விடயத்துக்கும் அரச தரப்பில் இருந்து உறுதியான தகுந்த பதில் கிடைக்காததால் கூட்டமைப்பு எம்.பிக்கள் வெறுப்படைத்தனர்.

இந்தக் கூட்டம் தொடர்பாக செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தவை வருமாறு:-


மக்களின் மீள்குடியமர்வு, சுகாதாரம், கல்வி, கடற்றொழில், விவசாயம் ஆகிய விடயங்கள் குறித்து மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கூட்டத்தில் மிக விரிவாக எடுத்துரைத்தோம் அவற்றில் எந்த விடயம் (28ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. விசேட நிபுணர் குழு நியமனத்துக்கு ரஷ்யா, சீனா, அணிசேரா இயக்கம் எதிர்ப்பு

கொழும்பு,ஜூன்27

இலங்கையில் போர்க்குற்றம் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக் குறித்து தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ-மூன் விசேட நிபுணர் குழு ஒன்றை நியமித்திருப்பதற்கு ரஷ்யா, சீனா மற்றும் அணிசேரா நாடுகள் இயக்கம் என்பன அதிருப்தி வெளியிட்டுள்ளன.

(28ஆம் பக்கம் பார்க்க)



நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் அடகுச்சேவை

- 365 நாள் வங்கிச் சேவை
- நீடித்த வங்கி நேரங்கள்
- அதிகபட்ச பாதுகாப்பும் நம்பகத்தன்மையும்
- முன்னறிவித்தல் இன்றி மீட்கலாம்
- பகுதி பகுதியான மீட்பு வசதி

யாழ்ப்பாணக் கிளை: 35, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 4 920 283 - 5
அடகுச்சேவை வவுனியா மற்றும் மட்டக்களப்பிலும் பெற்றுக்கொள்ளலாம்

Nations Trust Bank
Nations
Gold Advances

HAYLEYS
හේලීස් ஹேலீஸ்
පොහොර உரம்
புதிய எதிர்பார்ப்பு
ஹேலீஸ் அக்ரோ காட்சியறை
74, பலாலி வீதி,
கோண்டாவில். தொ.பே: 0777284330



விவசாயப் பெருமக்களே...!
உலகத்தரம் வாய்ந்த ஹேலீஸ் உரத்தினைப் பாவித்துப் பயன்பெறுங்கள்.
அனைத்து விவசாய உள்ளீடுகள் விற்பனை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.
அமோக விளைச்சலுக்கு நிகரான பெறுமதிமிக்க எதிர்பார்ப்பு வேறெதுவுமில்லை.

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் மீது சவாரி செய்யும் தமிழக போட்டி அரசியல்

## இந்துஸ்தான் பத்திரிகை சாடல்

கொழும்பு, ஜூன் 27

இலங்கைத் தமிழர்களின் நிலைமையானது ஒரு விவகாரமாக இப்போதும் தொடர்ந்து இருந்து வருகின்றபோதும் தமிழகத்தின் போட்டி அரசியலில் முக்கியமான விடயமாகத் தமிழ்மொழியை மேம்படுத்தும் விவகாரம் தோற்றம் பெற்று வருகிறது.

எதிர்வரும் மே மாதம் தமிழக சட்டசபைத் தேர்தல் இடம்பெறவுள்ளது. இந்நிலையில், தமிழுக்காக முதலமைச்சர் கருணாநிதி சிறியளவிலேயே நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார் எனவும் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் அதிலும் பார்க்கச் சொற்பமான அளவே செய்திருக்கிறார் எனவும் எதிரணியினர் குற்றஞ்சாட்டி வரும் நிலையில் நான்கு நாள்கள் இடம்பெறும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடானது வலுவான அரசியல் பங்களிப்பைச் செலுத்தக்கூடியதாகக் காணப்படுகின்றது.

- இவ்வாறு இந்துஸ்தான் பத்திரிகை கடந்த வியாழக்கிழமை தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

சென்னை மேல் நீதிமன்றத்தில் தமிழை உத்தியோகபூர்வ மொழியாக்குமாறு ஜனாதிபதி பிரதீபா பட்டீலை நான்கு நாள்களுக்கு முன்னர் அ.தி.மு.க. தலைவர்கள் சந்தித்துக் கோரிக்கை விடுத்திருந்தனர். ஆனால், இது தொடர்பாக தான் ஏற்கனவே மத்திய சட்டத்துறை அமைச்சர் எம்.வீரப்பமொய்லியுடன் கதைத் திருக்கிறார் என கருணாநிதி கூறியுள்ளார்.

தி.மு.கவானது ஹிந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்ட நாள் தொடக்கம் அந்த எதிர்ப்புகள் 1967 தேர்தலில் காங்கிரஸ் கட்சியை தமிழக ஆட்சியிலிருந்தும் அகற்றுவதற்கு உதவியாக அமைந்தன. சகல உள்ளூர் தலைவர்களும் தமிழ்மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கும் விதத்தில் பகிரங்கமாக ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ள ஆரம்பித்தனர்.

தமிழ்மொழிக்கு கலைஞரால் செய்யக்கூடிய அளவுக்கு எவராலும் அதனை மேற்கொள்ள முடியாது என்பதை வெளிப்படுத்துவதாக செம்மொழி மாநாடு அமைந்திருப்பதாக தி.மு.கவின் சிரேஷ்ட தலைவர்கள் கூறியுள்ளனர். 1960 களில் தமிழின் பெருமைக்கான போராட்டங்களை தி.மு.க. மேற்கொண்டது. கருணாநிதியின் பேச்சு, எழுத்துத் திறமை, அரசியல் ரீதியாக அவர் மேலெழுந்து வருவதற்குப் பங்களிப்புச் செலுத்தின.

2010 இற்கான நிகழ்ச்சியை அவர் தனது கடைசியான காட்சியாகப் பார்க்கிறார். அதனாலேயே மாநிலத் தேர்தலுக்கு முன்னராக இதனை நடத்துவதற்குத் தீர்மானித்தார் என்று கோயம்புத்தூர் மாநாட்டுக்குச் செல்வதற்கு முன்னர் தி.மு.க.வைச் சேர்ந்த ஒரு பிரமுகர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வானது அதிகளவுக்குப் பிரபல்யத்தைப் பெற்றுக்கொள்வதையிட்டு குழம்பியிருக்கும் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா, இதனைக் கருணாநிதியின் குடும்ப ஆட்சியென சாடியுள்ளார். தான் உட்பட முன்னைய முதலமைச்சர்கள் 8 சர்வதேச மாநாடுகளை ஏற்பாடு செய்திருந்தனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

மாநிலத் தேர்தலுக்கு தான் அமைக்கவுள்ள கூட்டணி இந்த மாதிரியாகத் தான் அமையும் என்பதைக் காண் பிக்கும் விதத்தில் இந்த நிகழ்வை கருணாநிதி உறுதிப்படுத்தியிருக்கிறார். இந்திய மத்திய அமைச்சரவையின் முக்கிய உறுப்பினர்களான ப.சிதம்பரம், பிரணாப் முகர்ஜி மற்றும் சீத்தாராம் ஜெச்சூரி, டி.ராஜா போன்ற அரசியல் தலைவர்கள் செம்மொழி மாநாட்டில் கலந்துகொண்டுள்ளனர்.

- இப்படி அந்த பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

யாழ். இந்துக் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் நேற்று யாழ். இந்துக் கல்லூரியில் கொண்டாடப்பட்ட போது எடுக்கப்படட படங்கள் இவை.

நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட உயர்நீதிமன்ற நீதியரசர் ஸ்ரீபவன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் செ.இராகவன் ஆகியோர் வரவேற்கப்படுவதையும் -

கல்லூரி நுழைவாயில் அலங்கார வளைவினை நீதியரசர் ஸ்ரீபன் நாடா வெட்டித் திறந்து வைப்பதனையும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியர் வி.சிவசுப்பிரமணியம் எழுதிய எனது 'ஆசிரியப் பணியின் நினைவுகள்' எனும் நூலை ஓய்வுபெற்ற ஆசிரியர் தி.சோமசுந்தரம் வெளியிட்டு வைக்க அதனை திருமதி இராகவன் பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: கவிநேசன்)*


**WWW.JAFFNAONLINE.INFO**
யாழ் வியாபார விபரக்கொத்து
வியாபாரங்களையும் சேவைகளையும் தேடுங்கள்

**விற்பனைக்கு**
PROJECTION-T.V.-43" புறஜெக்ஸ்சன்-ரி.வி.-43"
(PANASONIC) விற்பனைக்குண்டு.
I.MURUGIAH, உரும்பிராய் வடக்கு,
பலாலி வீதி, மடத்தடி. T.P.: 0777322338

**கணனிக் கல்வி**
* Ms office * DTP * Hardware * Web Design
* Computerized Accounting * Graphic Design
* Internet & E-mail * Kids Program
அனைத்துக் கற்கை நெறிகளும் தனிப் பட்ட கவனிப்புடன் கற்பிக்கப்படும்.
*Sky Computer (pvt) Ltd*
162, Main Steet, Jaffna. Tel: 0212221417

**கார் விற்பனை**
ஆங்கில தொடரிலக்கமுடைய NISSAN SUNNY-N16 கார் Silvar Colour விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு:-0212228984, 0773747825

முருகன் துணை
**இணுவில் கந்தசுவாமி கோயில்**
**உலகப் பெரு மஞ்சத் திருவிழா**







(மகோற்சவம்: 12 ஆம் நாள்)
காலம்: நாளை (28.06.2010) திங்கட்கிழமை
காலை 8.30 மணி 1008 சங்காபிஷேகம்
முற்பகல் 11.30 மணி வசந்த மண்டபப் பூசை
மாலை 6.30 மணி வசந்த மண்டபப் பூசை, சண்முகர் அர்ச்சனை
முன்னிரவு: 8 மணி உலகப் பெரு மஞ்சம் வீதியுலா
அடியார்கள் எம்பெருமானை தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இங்ஙனம்
12ஆம் திருவிழா உபயகாரர்களும்,
தர்மகர்த்தா சபையினரும்.

**கல்வி**
STUDY & WORK IN UK
துரித கதியில்
STUDENT VISAவில்
செல்வதற்கான
ஆலோசனை,
ஆவணங்கள் தயார்
செய்தல் Reapply
அனுமதி மற்றும்
Financial Sponsorship
என்பன
யாழ் தொடர்பு இலக்கம்
011 3042949
077 9218444

**BAIRAHA**
* புறோயிலர் கோழி இறைச்சி
* Sausages Items
* Spicy Thigh
* Spicy whole Leg
* Spicy Drumstick
* Chicken meat Balls
* Breast
யாழ். முகவர்:
Multi Distributors Pvt.Ltd.
56,Clock Tower Lane, Jaffna.
T.P.: 0771093300





**வீடு வாடகைக்கு**
இல. 11/4, பெந்தகோஸ்தே லேன், கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:-0212223994

**வேலையாள் தேவை**
* தொலைத் தொடர்பு நிலையத்திற்கு கணனி அறிவுடைய ஈமெயில், நெற், கொம்பியூட்டர் வரைப் செற்றிங் தெரிந்த பெண் தேவை.
* ஓட்டோ சாரதி அனுமதிப்பத்திரம் உடையோர் தேவை.
* அலுவலக உதவியாளர் தேவை. ஆண் - பெண்.
தொடர்புகளுக்கு: 0789147363 / 0212224404

**தொட்டில்கள் விற்பனைக்குண்டு**
பாவித்த நல்ல நிலையிலுள்ள குழந்தைகளுக்கான தொட்டில்கள் (2) விற்பனைக்குண்டு. தொடர்பு:-0212226236, 0777246723


## மரண அறிவித்தல்

### *றம்மியல் தேவசகாயம்*



உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், தற்போது புத்தளத்தை வதிவிடமாகவும் கொண்ட இளைப்பாறிய பொலிஸ் அதிகாரி (I.P) றம்மியல் தேவசகாயம் நேற்று முன் தினம் (25.06.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான றம்மியல் - இன்னேசம் தம்பதிகளின் பாசமிகு ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான டானியேல் - ஆரோக்கியம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற எலிசபெத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராஜமணி, விக்றோறியா, சேசலியா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற அமிர்தநாதன் (மணி)யின் பாசமிகு மைத்துனரும், அன்ரனற் (நோனா-ஜேர்மனி), மாகிறேற் (சரோஜா), திரேசா பாலராணி, மற்றில்டா, அமிர்தராஜா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருச்செல்வம் (இளைப்பாறிய ஆசிரியர் - ஜேர்மனி), ஞானசீலன் (இளைப் பாறிய பிரதம தபால் அதிபர் - யாழ்ப் பாணம்), மரியதாஸ் (நில அளவையாளர் - புத்தளம்), பொப்சி (ஜேர் மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், திருமாவளவன், திருமகள், றஞ்சிலா, வேந்தன், வேணி, சுகி, சுகந்தி, காண்டீபன், குயினி, குயின்ரன், குயின்ரி, ஸ்ரெபான் ஆகியோரின் பாசமிகு பேரனும், எலனி, மெலனி, சுஜன், சிறோணி, ஜெரோணி, காவியா, வேணுகா, கீர்த்தனா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.06.2010) ஞாயிற்றுக்கிழமை புத்தளம் தில்லையடி சேமக்காலையில் பிற்பகல் 4 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஞானசீலன் (மருமகன்),
உயரப்புலம், ஆனைக்கோட்டை.

T.P. 0322266658
(புத்தளம்)

(99955)


**DHL**
WORLDWIDE EXPRESS
யாழ் குடாநாட்டிலிருந்து உலக நாடுகளுக்கு DHL சேவையினைப் பெற்றுக்கொள்ள!
உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை
குறிப்பிட்ட சில நாட்களுக்கு விசேட விலைக்கழிவு
உள்நாடு வெளிநாடுகளுக்குத் கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்
தற்பொழுது 24மணி நேர உள்நாட்டிக்கான தபால்கள் பொதிகள் சேவை (சனி ஞாயிறு தினங்கள் தவிர்ந்த)
குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.
லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா விதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம்பெறும்
திருமுருகன் கொம் நெற்
259,கே.கே.எஸ்,வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் முன்பாக)
(ப.நோ.சங்கம் முன்பாக)
நஷனல் வங்கிக்கு அருகாமையில்)
குடாநாட்டில் முகவர்கள் தேவை
TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறிகண்டியில் தரிக்காமல் போகும் “ஹயஸ்” நில்லு...! அதன் காரணம் தான் என்னவென்று சொல்லு...!!



ஓளண்யன்

நிலைமை கட்டுமீறிக் கொண்டிருந்தது. இனியும் அடக்க முடியாத அவஸ்தை. என்ன செய்வதென்று தெரியவில்லை. என்னுடைய எந்த அவஸ்தையையும் கூடப் பயணிப்போர் கண்டுகொள்வதாகத் தெரியவில்லை. எனது பிரச்சினையை அவர்களிடம் சொல்ல ‘ஹயஸ்’ வாகனம் ஏ9 வீதியின் பள்ளம் மேடுகளில் ஏறிக்குதித்து விளையாடியபடி விரைகையில் எனக்கு உயிர் போய் வந்துகொண்டிருந்தது. ‘முறிகண்டி எப்போது வரப்போகிறது?’ என்ற ஒரே ஒரு தேடலே மனதை ஆக்கிரமித்திருந்தது. முறிகண்டி வந்தால் என்னுடைய பிரச்சினைக்கும் முடிவு வந்துவிடும். தூரத்தே புள்ளியாய் முறிகண்டிப் பிள்ளையார் கோயில் தெரிந்தது. ‘அப்பாடா! ஒருவாறு இவ்வளவு நேரமும் பட்ட அவஸ்தை முடிவுக்கு வரப்போகிறது.’ என்று நிம்மதிப் பெருமூச்சொன்றை நான் விட்டு முடிப்பதற்கிடையில் முறிகண்டியைக் கடந்து மின்னலாய் பறந்து கொண்டிருந்தது ‘ஹயஸ்’. எனக்கு ஐந்தும் கெட்டு அறிவும் கெட்டுவிட்டது. இனியும் அடக்க முடியாது. ‘ஹயஸின்’ வேகத்துக்கு ‘‘அண்ணை! வானை ஒருக்கா நிப்பாட்டுங்கோ!’’ என்ற என்னுடைய குரல் தடைபோட்டது. என்னவோ ஏதோ என்ற ஏக்கத்தோடு ‘கிறீச்’ என்று ஒலி எழுப்பியவாறு சடாரென பிரேக் பிடித்து ‘ஹயஸை’ நிறுத்தினார் சாரதி. அது நின்றது தான் தாமதம். வில்லிலிருந்து புறப்பட்ட அம்பாக வானில் இருந்து இறங்கி ஓடினேன். வீதியின் அருகே இருந்த மரத்தின் மறைவில், இத்தனை நேரமும் என்னை அவஸ்தைக்குள் ஆழ்த்திய ‘நம்பர் வன்’ பிரச்சினையை வெளியேற்றினேன். இப்போது உடம்பு லேசாக இருந்தது. இன்னும் கொஞ்ச நேரம் சென்றிருந்தால் போக்கிரி படத்தில் வருகின்ற வடிவேலு போல எனக்கும் ‘யூரின் டாங்க்’ வெடித்திருக்கும் என்று நினைத்தேன். மெதுவாக வாகனத்தில் ஏறியபடி ‘ஏன் அண்ணை இப்ப முறிகண்டியில நிப்பாட்டுறேல்ல?’ என்று சாரதியைக் கேட்டேன்.

‘அங்க கடையள் முந்தினமாதிரி இல்லை. அங்கால ஆமீன்ர ‘கன்ரீன்’ இருக்கு. அதிலதான் இப்ப நான் நிப்பாட்டுறனான்.’ என்று பதில் சொல்லிவிட்டு வாகனத்தைச் செலுத்தத் தொடங்கினார் அவர்.

முறிகண்டி என்பது ஒரு பிள்ளையார் ஆலயம் என்பதையும் தாண்டி பல்வேறு வகைகளில் நம்முடன் ஊடாட்டம் கொண்டுள்ள ஒரு விடயம். குறிப்பாக ஏ9 வீதியூடாக பயணம் செய்யும் எல்லோருமே தவறாமல் முறிகண்டியில் இறங்குவது எழுதப்படாத சட்டம் போல இத்தனை நாளும் பின்பற்றப்பட்டு வந்தது. அதற்கு நிறையக் காரணங்களும் உண்டு.

பொதுவாகவே தமிழ் மக்களிடையே பல்வேறு செயற்பாடுகளுக்கும் தனித் தனியே ஐதீகங்கள் நிறைய உண்டு. ‘முழுவியளம் பார்த்தல்’, பூனை குறுக்கே ஓடினால் பயணத்தை நிறுத்துதல், ராசியான உடைகளை அணிதல், உணவுப் பொருள்களோடு கரித்துண்டையும் சேர்த்து எடுத்துச் செல்லுதல் என்பன போன்ற பல நடைமுறைகளை நம்மவர்கள் பிரயாணம் செய்யும் போது இன்றளவும் கைக்கொண்டு வருகின்றார்கள். குறித்த மதத்தினர் என்றில்லாமல் எல்லோருமே இவற்றினை பின்பற்றுவதுண்டு. இத்தகைய மரபார்ந்த செயற்பாடுகளில் ஒன்றே கண்டி வீதியூடான பயணத்தில் முறிகண்டியில் சிறிது நேரம் தரித்து நிற்பது. இது கால்நடையாக கதிர்காமத்திற்கு யாத்திரை செய்யும் பக்தர்களிடமிருந்து உருப்பெற்றிருக்கலாம் என்று சொல்லப்படுகின்றது. ஆனாலும் இத்தகைய - முறிகண்டிப்பிள்ளையாரில் நின்று செல்லும் - வழக்கம் எப்போது ஆரம்பமானது என்று எவருக்குமே சொல்லத் தெரியவில்லை.

## பல்முக முக்கியத்துவம் வாய்ந்த இடமல்லவா அது?

வடக்கு - தெற்குப் பகுதிகளுக்கான ‘‘தொப்புள் கொடி’’யாக ஏ9 வீதியே இருக்கிறது. எனவே ஏ9 வீதியூடாகப் பயணிப்போரில் பெரும்பாலானோர் மிக அதிகமான தொலைவினைக் கடக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இந்த வீதியூடான பயணத்தின் போது குறைந்தது அவர்கள் 200, 300 கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற ஏனைய மாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணத்துக்கோ அல்லது யாழ்ப்பாணத்தில் இருந்து மேற்குறிப்பிட்ட பகுதிகளுக்கோ செல்வதாயின் ஏறக்குறைய 12 மணித்தியாலங்களுக்கும் அதிகமாகத் தேவைப்படும். இந்த 12 மணித்தியாலங்களும் வாகனத்தில் ஏறி, சீற்றில் குந்தியிருந்தபடி ஒரேயடியாக பிரயாணிப்பதென்பது உடல் நிலைக்கு ஒவ்வாத விடயம். எனவே இத்தகைய நீண்ட தூரப்பிரயாணங்களின் போது இடையிடையே இறங்கிநின்று, பயணக் களைப்பை நீக்கி, தம்மை ஆசுவாசப்படுத்திக் கொண்டு தொடர்ந்து பிரயாணிப்பதற்குரிய தெம்பை உடலுக்கு ஏற்றிக்கொண்டு பயணிப்பதே உடல் ஆரோக்கியத்தை இத்தகைய பயணங்களின் போது தக்க வைத்துக் கொள்ள உதவுகின்றது. அதனடிப்படையிலேயே தொலைதூரப் பிரயாணங்களின் போது சில குறிப்பிட்ட தலங்களில் வாகனங்களை சாரதிகள் கட்டாயமாக நிறுத்திச் செல்வது தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

வல்லை முனியப்பர், கைதடிப்பிள்ளையார், சுட்டிபுரம் அம்மன் போன்ற ஆலயங்களின் வரிசையில் முறிகண்டிப்பிள்ளையாரும் பிரயாணத்துக்குரிய கடவுளர்களின் தலங்களாக நம்மவர்களால் தொடர்ந்து பேணப்பட்டு வருகின்றது. எனவே பிரயாணங்களின் போது இந்த இடங்களில் இறங்கி நின்று ஆலய தரிசனம் செய்கின்ற அதே வேளை இவ்வளவு நேரமும் பயணித்ததால் நொந்துபோய்கிடக்கும் உடல் அலுப்பையும் ஒரு சில கணங்களில் போக்கிக் கொண்டு மீண்டும் பழைய உற்சாகத்தோடு புறப்படுவார்கள். இது காலப் போக்கில் ஒரு கட்டாயக் கடமை யாகவும் மாறிப்போனது. இந்து மதத்தினர் மாத்திரமல்லாது எல்லோருமே இந்த கோயில்களில் இறங்கிச் செல்வது இன்னொரு விஷேசம்.

ஒருமுறை - இரவு கழிவதற்கிடையில் கொழும்புக்குச் சென்றாக வேண்டிய கட்டாயம் இருந்ததால் முறிகண்டிப் பிள்ளையாரின் தரித்து [illegible] வணங்காமல் தன்னுடைய [illegible] வேகமாக செலுத்திய சாரதி ஒரு சில கணங்களிலேயே தன்னுடைய பயணத்தை இடைநிறுத்த வேண்டி வந்துவிட்டது. லொறியின் இயந்திரம் சாரதியின் பேச்சைக் கேட்கவில்லை. என்னவெல்லாமோ செய்தும் அது தொழிற்பட மாட்டேன் என்று முரண்டு பிடித்தது. கடைசியாக முறிகண்டிப் பிள்ளையாருக்கு நடந்து சென்ற சாரதி அங்கு சிதறுதேங்காய் அடித்து விட்டு வந்தபின்னர், லொறியை இயக்கிய போது அது ஒரு செல்லப்பிராணி போல எந்தவித இடையூறும் இல்லாமல் கண்டி வீதி வழியே தன்னுடைய பயணத்தைத் தொடரமுடிந்ததாம். இப்படி முறிகண்டிப் பிள்ளையாரின் அற்புதங்களைக் கூறுகின்ற கதைகள் நிறைய உண்டு. இந்தக் கதைகளில் உள்ள நம்பகத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாவிட்டாலும் ஏ9 வீதியூடாகப் பயணிக்கும் வாகனங்களின் சாரதிகள் என்ன தான் அவசரம் என்றாலும் முறிகண்டிப் பிள்ளையாரில் தமது வாகனத்தைத் தரிப்பதற்கு மறந்ததே இல்லை என்பதையே இக் கதைகள் ஊடாக உணரமுடிகின்றது.

வெறுமனே பயணக் களைப்பைப் போக்குவதற்காகவோ அல்லது மத வழிபாட்டை நிறைவேற்றுவதற்காகவோ மட்டுமே முறிகண்டிப் பிள்ளையார் கோயிலில் வாகனங்கள் நிறுத்தப்படுவதில்லை. இதை விடவும் இன்னொரு ‘முக்கிய’ விடயத்தை நிறைவேற்றுவதும் ஒரு நோக்கம் தான். அது தான் ‘நம்பர் வன், நம்பர் ரூ’ பிரச்சினைகளை இல்லாமல் செய்வது. கட்டணத்தைச் செலுத்தி இயற்கைக் கடன்களை நிறைவேற்றக்கூடிய வசதி முறிகண்டியில் செய்யப்பட்டிருந்தது. கட்டணக் கழிப்பறை என்பதால் அவை ஏனைய இடங்களில் உள்ளது போல அருவருப்பை ஊட்டுபவையாக அல்லாமல் எப்போதுமே சுத்தமாகவே வைக்கப்பட்டிருக்கும். எனவே முறிகண்டிப்பிள்ளையாரைக் கும்பிடும் சாக்கில் தமது இயற்கைக் கடன்களையும் பயணிகள் போக்கிக் கொள்ள முடிந்தது. குறிப்பாக பெண்கள் தமக்குரிய இயல்பான வெட்க சுபாவத்தால் பயணங்களின் போது தமக்கேற்படுகின்ற இயற்கை உபாதைப் பிரச்சினைகளை வெளிப்படுத்தத் தயங்குவார்கள். அவர்களுக்கும் முறிகண்டிதான் நம்பிக்கை நட்சத்திரம். எல்லோரையும் போலவே அவர்களும் சுவாமி தரிசனம் செய்வது போல வாகனத்தில் இருந்து இறங்கி யாருக்குமே தெரியாமல் கழிப்பறைக்குச் சென்று இத்தகைய பிரச்சினைகளை நீக்கிக் கொள்ள முடிந்தது.

வன்னி பெருநிலப் பரப்பின் உள்ளூர் உற்பத்திகளின் மிகப் பிரதானமான வியாபார ஸ்தலமாகவும் முறிகண்டி மாறியிருந்தது. எப்போது பார்த்தாலும் பயணிகளால் நிரம்பி வழிந்து கொண்டிருக்கும் முறிகண்டியில் வன்னியின் பிரசித்தமான கச்சான், கடலை, தேன், பாலைப்பழம், என்பவற்றை கூவிக் கூவி விற்பனை செய்பவர்களையும், தாச்சிச் சட்டியில் ஒலி எழும் வண்ணம் சுடு கச்சான்களை [illegible] ஆண்டுகளில் ஏ9 வீதியூடாகப் பயணிக்கும் போது நீங்கள் கண்டிருக்கக் கூடும். கொழும்பில் இருந்து வருபவர்கள் அப்பிள், ஒரேஞ்ச் முதலியவற்றோடு முறிகண்டிக் கச்சானையும் மறவாது வாங்கி வருவார்கள். முறிகண்டிக் கச்சானுக்கென்றே தனி ருசி இருந்ததால் அதற்கு சுவைஞர்களும் அதிகம்.

ஆனால் இப்போது சாரதிகளின் மனப்போக்கில் பெரும் மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. பெரும்பாலான ‘ஹயஸ்’ சாரதிகளும், தனியார் பஸ் சாரதிகளும் முறிகண்டிப் பிள்ளையாரில் தமது வாகனங்களை நிறுத்தாமல் மாங்குளத்திலோ அல்லது கிளிநொச்சிக்கு அருகாமையில் உள்ள இராணுவ உணவகத்திலோ தமது பயணிகளை இறக்குகிறார்கள். இவ்வாறு முறிகண்டியில் தமது வாகனங்களை நிறுத்தாமைக்குரிய காரணங்களை பல சாரதிகள் சொல்வதில்லை. குறித்த இடங்களில் உணவகங்களில் சாரதிகளுக்கென ‘தனியான கவனிப்பு’ இருப்பதாலேயே அப் பகுதிகளில் மட்டும் நிறுத்துவதாகச் சொல்லப்படுகின்றது. இதனால் இது வரையும் சொல் லப்பட்ட பல நன்மைகளை பயணிகள் இழக்க வேண்டி ஏற்படுகின்றது.

முறிகண்டிப்பிள்ளையாரைக் கும்பிட்ட பின்னே பயணத்தைத் தொடர வேண்டும் என்ற பலரது ஆத்மார்த்த நம்பிக்கையை நிறைவேற்ற முடியாமல் போய்விடுகின்றது. அண்மையில் உரும்பிராயில் இருந்து கொழும்புக்குப் புறப்பட்ட ஒரு முதியவர் முறிகண்டிப் பிள்ளையாருக்கு சிதறு தேங்காய் அடிக்கவென கொண்டு சென்ற வீட்டுத் தேங்காயை, முறிகண்டியில் அவர் சென்ற வாகனம் நிற்காததால் கடைசியில் அவர் பம்பலப்பிட்டி கதிரேசன் கோயிலில் (அதுவும் பிள்ளையார் தானே) அடித்த ‘‘புதுநேர்த்தி’’ நிகழ்ந்திருக்கிறது. இது தவிர நீண்ட நேரப் பயணத்தால் முட்டிவழியும் சிறுநீர்ப் பிரச்சினையை தீர்த்துக்கொள்ள வழி தெரியாமல் பலர் அவஸ்தைப்பட்டு வருகின்றனர். இத்தகைய இயற்கை உபாதைப் பிரச்சினைகளை எப்படி சாரதிகளுக்குச் சொல்லி வாகனத்தை நிறுத்தமுடியும்? தம்முடைய கூச்ச சுபாவத்தால் பலரும் கொழும்பில் இருந்து அடக்கிக் கொண்டு வரும் இயற்கை உபாதைகளை யாழ்ப்பாணத்தில் தான் இறக்கி வைக்க முடிகின்றது.

முறிகண்டிக்கே உரித்தான சுடு கச்சானும், அது வறுக்கப்படுகின்ற தாச்சிச் சட்டிகளின் ஒலிகளும் அரிதாகி விட்டன. வெறுமனே ஒரு மத வழிபாட்டுத் தலம் என்ற நிலையைத் தாண்டி பயணிகள் இளைப்பாற்று இடமாகவும் ஒரு பிரதேசத்தின் பிரதான வணிக மையமாக வும் மக்களின் ஆன்மீக நம்பிக்கையை உண்டு பண்ணும் தலமாகவும் விளங்கிய முறிகண்டிப் பிள்ளையார் கோயிலில் எல்லா வாகனங்களும் நின்று போகும் காலம் மீண்டும் எப்போது தான் வரப்போகின்றதோ தெரியவில்லை.

**‘‘பிள்ளையாரப்பா!! இதற்கெல்லாம் நீ தான் கண் திறக்க வேண்டும்’’** இப்படி வேண்டுவதைத் தவிர வேறு வழியேதும் இல்லை என்றே தோன்றுகின்றது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களுக்குக் காலணிகள்

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஆனைக்கோட்டை, உயரப்புலம் குணபாலன் வித்தியாலயத்தைச் சேர்ந்த 138 மாணவர்களுக்கும் காலணிகள் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய் பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் என்.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 02 ★ 04 ★ 1936 |  | 08 ★ 07 ★ 2009 |

### அமரர் நல்லதம்பி அமரசிங்கம்

திதி: பிரதமை

எதிலுமே நெறியோடு ஏற்றமாய் உழைத்து
பதிதனில் எம்மையே புகழுற வைத்து
உதிரத்தில் உறைந்த உறவினை - மறப்போமா
நீண்ட நினைவில் உங்கள் திருவுருவமுகம்
தெரியப் பிரார்த்திக்கின்றோம் அப்பா

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

புனிதம்,
நெல்லியடி வடக்கு,
கரவெட்டி.

உங்கள் நினைவுடன் வாழும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி-568705)


30 நாட்களைக் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி

ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்

நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.

பாடநெறியில் இணையும் எல்லோருக்கும் இவைகள் வழங்கப்படும்



பெயர் / முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.

10 பாடத்தொகுதிகள் / Spoken English Video CD ஒன்று
Dialog Sim Card ஒன்று Video cd வழிகாட்டி புத்தகம் / அடையாள அட்டை
Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன எல்லாம் வழங்கப்படும்.

இது Diploma சான்றிதழ் உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற நேர்முகப்பரீட்சைகளுக்கும் இச்சான்றிதழ் தகுதி பெற்றது

மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்.

UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. Call: 0817 918 981 / 0773 123 523


## மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி - 2010

செல்லப்பா விளையாட்டுக் கழகத்தின் 25 வருட பூர்த்தியை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

பரிசு விவரம்
1 ஆம் பரிசு - 15,000/=
2 ஆம் பரிசு - 10,000/=
3 ஆம் பரிசு - 5,000/=

சிறந்த விளையாட்டு வீரருக்கான கிண்ணமும் பெறுமதியான வெற்றிக் கேடயங்களும் வழங்கப்படும்.

* பங்கு பற்றும் கழகங்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்படும்.

30.06.2010 இற்கு முன்னர் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் கீழ்வரும் தொலைத்தொடர்பு இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளவும். அன்றைய தினமே போட்டி நிரல் தயாரிப்பும் இடம்பெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

இடம்: உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானம்
காலம்: 01.07.2010

தொடர்பு: 021 222 3846, 0772233251
ஐங்கரன் தொலைத்தொடர்பகம்,
சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

## மீளக்குடியேறிய மக்களுக்கு பழமரக் கன்றுகள் விநியோகம்

நாவற்குழி, ஜூன் 27

வன்னியிலிருந்து மீளக்குடியேறிய மக்களுக்கு பழமரக் கன்றுகள் வழங்குவதற்குரிய விவரங்கள் பிரதேச செயலக ரீதியாகச் சேகரிக்கப்படுகின்றன.

மா, பலா, தேசி, வாழை ஆகியவையே இவ்வாறு வழங்கப்படவுள்ளன.

மீளக்குடியேறியோர் சொந்தக் காணி உடையவராகவும், குறித்த கிராம அலுவலர் பிரிவிலேயே வசித்து வருபவராகவும் இருத்தல் வேண்டும்.

தமது காணி உறுதியின் பிரதியுடன், தத்தமது பிரிவு கிராம அலுவலர்களிடம் விண்ணப் பிக்க முடியும்.

மீளக்குடியேறியோரின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் தொடர் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகவே இதுவும் இடம்பெறுகிறது. (50-121)

## கண்காட்சி

யாழ்ப்பாணம் , ஜூன் 27

வல்லை சிவகுரு வித்தியாசாலை மாணவர்களின் ஆக்கக் கண்காட்சி எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை பாடசாலை அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ரோ. கருணேஸ்வரன் கலந்து கொள்வார். (50-201)


### Deutsch மொழி வகுப்புக்கள்

தமிழ் மொழிபெயர்ப்புடன் நடைபெறுகின்றது.(Germany இல் இருந்து வந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகிறது).
தொடர்பு : 10, Palaly Road, Jaffna.
T.P. 0771604823

### மேல்மாடி வீடு வாடகைக்கு

3 கடையுடன் மேல்மாடி வீடு, 2200 சதுர அடி கொண்டது. சகல வசதிகளுடன் வாடகைக்குண்டு.
(அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது)
186, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.0776156051

### வீடு வாடகைக்குண்டு

2/3 பேர் கொண்ட சிறியகுடும்பம்/பல்கலைக்கழக/உயர்கல்வி நிறுவன மாணவிகளுக்கு வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு :- S. கோகுலன், இல.13/2,
இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
[Raja Cream House அருகில் - சிவகுரு கடை லேனில்]
T.P. :- 0212226236 / 0777246723

### தளபாடங்கள் விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள வீட்டுத் தளபாடங்கள், பேகேஸ், அலுமாரியுடன் கூடிய Double Bed, Oven, Kitchen Cup board மற்றும் தளபாடங்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 49A, Chapel Street, Jaffna.
T.P.: 0778192190 ( சாந்தி)

### விற்பனைக்கு

மில்லிற்குரிய லிஸ்ரர் எஞ்சின், குபோட்டா மெஷின் மற்றும் குபோட்டா உதிரிப்பாகங்கள் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0778034218

### காணி விற்பனைக்கு

நீர்வேலி தெற்கு, 6 ஆம் கட்டையடியில் பருத்தித்துறை வீதியில் சிறிய வீடு கிணற்றுடன் கூடிய 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்
தொடர்புகளுக்கு: 0776660740, 0776979762, 0712123811

### மணமகள் தேவை

1) யாழ். இந்து கௌரவ குடும்பம் (1980 கிரகபாவம் -68 செவ்வாய் 8) சிங்கப்பூர் பொறியியலாளராக கடமையாற்றும் மணமகனுக்கு அழகிய படித்த மணமகள் தேவை.

2) யாழ். இந்து கௌரவ குடும்பம் (1982 - கிரகபாவம் - 28, செவ்வாய் - 4) கனடா அரச துறையில் பொறியியலாளராக கடமையாற்றும் மணமகனுக்கு அழகிய படித்த மணமகள் தேவை.

தொடர்பு:
021 222 7030, 0716867209

### கடை வாடகைக்கு

புங்கன்குளம் வீதியில் அரியாலை சனசமூக நிலையம் முன்பாக இரண்டு கடைகள் சகல தளபாடங்களுடன் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: கமலாதேவி, 134, புங்கன்குளம், அரியாலை, தொ.பே.: 0212223250


### விற்பனைக்கு

சொந்த பாவிப்பில் உள்ள ROAD MASTER JAPAN HONDA CD 200 , HERO HONDA PASSION, MD-90 மோட்டார் சைக்கிள்கள் உடன் விற்பனைக்கு உண்டு.
பார்வையிடும் நேரம் - ஞாயிறு முழு நேரமும் கிழமை நாள்களில் காலை 6.30 - 8.30, மாலை 4.30 - 6.30. தொ.பே.: 0771510495



# நீங்கள் ஏமாற வேண்டாம்.!!

நீங்கள் வாங்கும் நீர் குழாய்களிலும்
பொருத்துக்களிலும் எஸ் லோன் இலட்சினை
இல்லையெனில் அவை எஸ் லோன் அல்ல.




எஸ் லோன் இலட்சினை பொறிக்கப்பட்டுள்ளதா
என்று சரி பார்த்து வாங்குங்கள்

S-lon

என்றும் முன்னணியில்

எஸ்-லோன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்,
148, வொக்சோல் வீதி, கொழும்பு 02.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்ப வீடுவினம் எங்கட வீடுகளுக்கு..........?

"சொர்க்கமே என்றாலும் அது நம்மூரைப் போல வருமா?" என்ற அந்தப் பழைய பாடலை தனது உரையாடலின் இடையே ஆனந்தக் கண்ணீர் மல்கிய படி நினைவு கூர்ந்தார் அந்த வயோதிபர்.

அந்த வயோதிபருடன் உரையாடக் கிடைத்த சந்தர்ப்பம் மிகவும் உணர்வு பூர்வமானதாகவும் உடம்பைப் புல்லரிக்கச் செய்வதாகவும் அமைந்தது. அவருடன் எதைப்பற்றி உரையாடினேன் என்ற கேள்வி உங்கள் எல்லோர் மனதிலும் இப்போது எழுந்திருக்கும். 20 ஆண்டு களின் பின்னர் வலி வடக்கு அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள மயிலிட்டி என்ற கரையோரக் கிராமத் தில் தனது சொந்த மண்ணில் - ஆலயத் திருவிழாவில் பங்கு கொண்ட அந்த உணர்ச்சி பூர்வமான அனுபவத்தை அந்த வயோதிபர் என்னுடன் உணர்வு ததும்பப் பகிர்ந்து கொண்டார்.

1990 களில் அங்கிருந்து இடம் பெயர்ந்த பின்னர் தனது சொந்த மண்ணைப் பார்ப்பதற்கான பெரும்பேறு 20 ஆண்டுகள் கழித்து இப்போது தான் அந்த வயோதிபருக்குக் கிட்டியிருக்கிறது. சொந்த மண்ணைப் பார்க்காமல் தனது உயிர் பிரிந்து விடுமோ என்ற நீண்ட நாள் ஏக்கம் இப்போது முடிவுக்கு வந்துவிட்டது என்றார் அவர். இனிச் செத்தாலும் பரவாயில்லை. ஆனால் ஒன்றை மட்டும் செய்ய அனுமதி கிடைத்தால் அதுவும் எனது வாழ்வில் கிடைத்த மற்றொரு பேறாக இருக்கும் என்றார் அவர். அவர் குறிப்பிட்டது தனது இறுதிக் கிரியைகளைச் சொந்த மண்ணில் செய்ய வேண்டும் என்பதைத்தான்.

அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் வலி வடக்கின் பெரும்பகுதி கடந்த 20 வருடங்க ளுக்கு மேலாகப் பாது காப்பு படைத்தரப்பின் பூரணக்கட்டுப் பாட்டில் இருந்து வருகின்றது. கடற் றொழில், விவசாயம், கைத்தொழில் ஆகிய துறைகளில் கோலோச்சிய பூமியாக வலி வடக்குப் பகுதி இருந்தமையால் அதற்குப் 'பொன் விளையும் பூமி' என்ற மற்றொரு பெயரும் எமது முன்னோர்களால் வழங்கப்பட்டிருந்தது.

1990 களில் பலாலி விமானத்தளம் உட்பட வலி வடக்கின் பெரும் பகுதி இராணுவத்தினரின் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இதனால் அப்பகுதியில் குடியிருந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் சொந்த இல்லிடங்களை விட்டு வெளியேற வேண்டிய துர்ப்பார்க்கிய நிலை ஏற்பட்டது. அன்று வெளியேறிய மக்கள் இன்று வரை தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர அனுமதிக்கப்படவில்லை. இப்பகுதிகளில் தம்மை மீளக் குடியமர்த்துமாறு இப் பகுதி மக்கள் பல போராட்டங்களை நடத்தியும், மகஜர்களைக் கையளித்தும் எந்தவிதமான பலனும் கிட்டவில்லை.

எனினும் நாட்டில் யுத்தம் முடிவுற்று ஓராண்டு நிறைவு பெற்றுள்ள இந்த வேளையில் கடந்த சில வாரங்களாக வலிவடக்குப் பிரதேசத்தில் இடம் பெறும் நிகழ்வுகள் அப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களின் மனங்களில் ஒருவித மகிழ்ச்சியை - மனத் தென்பைத் தோற்றுவிப்பவையாக அமைந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. இந்தப் பகுதியில் உள்ள ஆலயங்களில் வழிபாடுகளை மேற்கொள்ளப் படையினர் அனுமதிவழங்கியுள்ளமை வலி வடக்கு மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான ஒரு 'சிக்னல்'லாக இருக்குமோ என்று எண்ணத் தோன்றுகின்றது. அந்த எண்ணத்தை வலுப்படுத்துவதாகச் சில சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றமையை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

20 ஆண்டுகளாக இந்த மக்களின் மனங்களில் சொந்த மண் பற்றிக் கனவாக இருந்த எண்ணம் இப்போது நனவாகக் கூடிய ஒரு சாத்தியப்பாடு தோன்றியுள்ளது. 20 ஆண்டுகள் கழித்தாவது படைத்தரப்பின் மனநிலையில் இப்படியொரு மாற்றம் ஏற்பட்டமை உண்மையில் வரவேற்புக்கும், பாராட்டுக்குமுரியது. தென்னிலங்கை மக்கள் வடபகுதியில் உள்ள பௌத்த வழிபாட்டுத் தலங்களை தரிசிப்பதற்காகச் சுலபமாக வந்து போகிறார்கள். ஆனால் நாங்களோ 20 வருடங்களாக எமது சொந்தக் குல தெய்வங்களை பார்க்கமுடியாமல் அந்தரிக்கிறோம் என்ற வலி வடக்கு மக்களின் உள்ளக் குமுறல் இப்போது தான் படைத்தரப்பினரின் காதுகளுக்கு எட்டியதோ தெரியவில்லை. வலி வடக்கு மக்களும் தமது சொந்த ஆலயங்களில் வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதியை வழங்கியுள்ளனர் படைத்தரப்பினர்.

கடந்த மாதம் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள ஒட்டகப்புலம் அமலோற்பவ அன்னையின் ஆலயத்திருவிழா விமரிசையாக அங்கு கொண்டாடப்பட்டது. யாழ். படைகளின் தளபதியும் அதில் கலந்து கொண்டார். அதன் பின்னர் கடந்த 18ஆம் திகதி அம்பனை ஞான வைரவர் ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட அப்பகுதி மக்களுக்குப் படையினர் அனுமதி அளித்திருந்தனர். அன்றைய தினம் பெரும் எண்ணிக்கையான மக்கள் அங்கு சென்று குல தெய்வத்தை வழிபட்டுத் தமது மன இறுக்கத்தை தணித்துக்கொண்டனர். அதன் பின்பு கடந்த 20 ஆண்டுகளுக்குப் பிறகு நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை காங்கேசன்துறை துறை முகத்துக்கு மிக அண்மையில் உள்ள மயிலிட்டி என்ற கிராமத்துக்கு அப்பகுதி மக்கள் கோயில் வழிபாட்டுக்குச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதனையடுத்து அன்று காலை முதல் வாகனங்களில் தெல்லிப்பளை சோதனைச் சாவடி ஊடாகச் சென்ற ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் மயிலிட் டித் துறை கண்ணகை அம்மன், முருகன் ஆலயங்களில் விஷேட பூசை வழிபாடுகளை நடத்தித் தமது நீண்ட நாள் கனவு நனவாகியமைக்காக நன்றிக் கடன் செலுத்தினார்கள். இடம்பெயர்ந்து தொலைவில் வவுனியா உட்பட ஏனைய பிரதேசங்களில் வாழும் மயிலிட்டி வாழ் மக்கள் வாகனங்களில் தமது சொந்த இடங்களைக் காண ஆவலுடன் பயணித்தமையையும் அவதானிக்க முடிந்தது. அங்கு சென்ற பக்தர்கள் ஆலயங்களைத் துப்பரவு செய்து விஷேட பூசை வழிபாடுகளை நடத்தினார்கள். அதன் பின்னர் அங்கு அன்னதானமும் இடம்பெற்றது.



மயிலிட்டி கண்ணகை அம்மன் கோவில்.

நீண்ட காலத்துக்குப் பின்னர் தமது ஆலயங்களில் காலடி பதிக்கக் கிடைத்த சந்தர்ப்பத்தை அவர்களால் வார்த்தைகளில் விபரிக்க முடியவில்லை. சொந்த மண்ணுக்குச் சென்ற போதும் ஆலயத்துக்கு மட்டுமே அவர்களால் செல்ல முடிந்தது. தமது இல்லிடங்களைப் பார்ப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும் ஆலயச் சுற்றாடலில் நின்றவாறு தமது சொந்த வீடுகளை பார்ப்பதில் அவர்கள் அதிக ஆர்வமாக இருந்தனர்.

ஆரம்பத்தில் நாம் குறிப்பிட்ட அந்த உரையாடல் மயிலிட்டியை பார்க்கச் சென்ற பக்தர்கள் குழுவில் இடம்பெற்ற வயோதிபர் ஒருவருடையது தான். அவர் அங்கு சென்று திரும்பிய அனுபவத்தை மேலும் விபரிக்கிறார்.

'எமது மண்ணில் ஆற அமர்ந்து கடற்கரைக் காற்றைச் சுவாசிக்கும் சுகம் எங்குமே கிடைக்காது. நீண்ட காலத்தின் பின்னர் எமது மண்ணில் சமைத்து சாப்பிட்டு அளவில்லா மகிழ்ச்சியடைந்தோம். எனது வாழ்வில் இது ஒரு மறக்க முடியாத நிகழ்வு. எங்கள் சொந்த மண்ணில் இருக்கும் தண்ணீர் தனி ருசி. அதனால் இங்கிருந்து பிளாஸ்ரிக் கொள்கலன்களைக் கொண்டுபோய் சொந்தத் தண்ணீரை குடிப்பதற்காகக் கொண்டுவந்திருக்கிறேன். எங்கள் காணிகள் வேலிகள் எதுவுமின்றி அடையாளமே தெரியவில்லை. வீடுகளில் பெரும் பாலானவை இடிக்கப்பட்டுள்ளன. ஆங்காங்கே சில வீடுகள் மட்டுமே எஞ்சியுள்ளன. முன்னரில்லாத பெரிய மரங்கள் வளர்ந்துள்ளமையால் எதையுமே கண்டுபிடிக்க முடியவில்லை. பாடசாலைகள் சேதமாகியுள்ளன. வீதி எது? காணி எது? என்று அடையாளம் காணமுடியவில்லை. அங்கு எல்லாமே எமக்குப் புதிதாக இருந்தது. எனினும் சில கட்டடங்கள், பழைய மரங்கள் ஆகியவற்றை வைத்து இடங்களை அடையாளம் கண்டோம். எனினும் எமது சொந்தக் காணிகளுக்குச் செல்ல எமக்கு அனுமதி கிடைக்க வில்லை. எமது மனங்களில் ஒருவித ஏக்கம் இப்போது உள்ளது. எங்கட வீடுகளில இருக்க எப்ப விடு வினம் எண்டு தான் தெரியேல்லை" என்று பெருமூச்சுடன் உரையாடலை முடித்தார் அந்த வயோதிபர். காணாத ஒன்றைக் கண்டு பிடித்து விட்ட உற்சாகம் அவரது முகத்தில் தெளிவாகத் தெரிந்தது.

இன்று ஞாயிற்றுக் கிழமை ஊறணி புனித அந்தோனியார் திருவிழா கடந்த வருடங்களை விடச் சிறப்பாகக் கொண்டாப்படுகின்றது. திருவிழாவிற்கு பக்தர்கள் சென்று வருவதற்கான ஏற்பாடுகளும் இராணுவத்தினால் சிறப்பாகச் செய்யப்பட்டுள்ளன. இந்தத் திருவிழாவிலும் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கலந்து கொள்கின்றனர். இதனை விட வலிவடக்கின் கீரிமலை முத்துமாரி அம்மன் ஆலயம் உட்பட வேறு சில ஆலயங்களிலும் வழிபாடுகளை நடத்த ஆலய நிர்வாக சபையினர் படைத்தரப்பினரிடம் அனுமதி கோரியுள்ளனர். அவற்றுக்கும் விரைவில் அனுமதி வழங்கப்படும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

இவ்வாறு வலிவடக்கின் வணக்க ஸ்தலங்கள் அனைத்தும் மக்களின் வழிபாட்டுக்கு அனுமதிக்கப்பட்டு வருவதன் பின்னணி அப்பகுதியில் மீள் குடியேற்றத்துக்கான முதற்படி என்று பலரும் தெரிவிக்கின்றனர். அதற்கான நல்லெண்ணச் சமிக்ஞையாகவே ஆலயங்களில் வழிபாடுகளை நடத்த படையினர் அனுமதி வழங்கியுள்ளனர் எனத் தெரிய வருகின்றது. வலிவடக்கு மக்களின் மனங்களிலும் அந்த எதிர்பார்ப்பு நிறையவே உள்ளது. நிரந்தரமாகச் சொந்த இடங்களில் குடியமர எப்போது அனுமதி கிடைக்கும் என்ற அங்காலாய்ப்புடன் அவர்களது நாளாந்த வாழ்வு இப்போது கழிகின்றது. எமது பகுதிகளை விரைவில் விடுவித்து சொந்த மண்ணில் குடியேற அனுமதித்தால் அது எமக்குப் பெரிய உதவியாக இருக்கும். வீடுகள் உடைந்திருந்தாலும் பரவாயில்லை. சொந்த மண்ணுக்குப் போக அனுமதித்தாலே பெரும் புண்ணியம் என்ற நிலையில் இப்போது வலி வடக்கு மக்கள் உள்ளனர். சொந்த ஆலயங்களுக்கு இப்போது சென்று வழிபடும் போதும் அவர்கள் கடவுளிடம் வேண்டுவது இதைத்தான்.

## இருபது ஆண்டுகளின் பின்னர் சொந்த மண்ணில் கால் பதிக்கக் காத்திருக்கும் வலி வடக்கு மக்கள்



மயிலிட்டி துறைமுகம்.



அவர்களுடைய இந்த வேண்டுதல் நிச்சயம் நிறைவேற வேண்டும். அவர்கள் சொந்த மண்ணில் மீண்டும் மகிழ்ச்சியுடன் கால் பதிக்க வேண்டும். இழந்து போன தமது வீடுகளை மீள நிர்மாணித்து ஏனைய மக்கள் அனுபவிக்கும் வசதிகளை அவர்களும் அனுபவிக்க வேண்டும் என்பதே அனைவரது எதிர்பார்ப்பும் கூட.

படையினரின் மனதில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றம் வலி வடக்கு மக்களின் நிரந்தர மீள் குடியமர்வுக்கு வழிவகுக்க வேண்டும். அந்த மக்களின் கடந்தகால அவல வாழ்வை அவர்கள் நன்கு புரிந்து கொண்டு செயற்படுவார்கள் என்றே எதிர்பார்க்கிறோம். 20 ஆண்டு களின் பின்னர் வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்ல அனுமதி வழங்கியவர்கள் இனியும் காலம் தாழ்த்தாது இந்த மக்கள் சொந்த மண்ணில் குடியமர ஏதுவான - சாதகமான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்ற நம்பிக்கையுடன் கூடிய எதிர்பார்ப்பு இப்போது பலரிடமும் ஏற்பட்டிருக்கிறது.

அந்த நம்பிக்கை வீண் போகாத வகையில் வலி வடக்கு மக்களின் மனங்களை வெல்ல சம்பந்தப்பட்டவர்கள் உண்மையுடன் செயற்படுவார்கள் - நடந்து கொள்வார்கள் என்றே எதிர்பார்க்கிறோம்.

சொந்த ஆலயங்களைத் தரிசிக்கச் சந்தர்ப்பம் தந்த அவர்களுக்கு மீண்டும் ஒரு 'சபாஷ்' *****

-அதிரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்குண்டு

மானிப்பாய் பெற்றோல் செட்டுக்கு முன்னால் உள்ள வீதியில் அமைந்துள்ளதும் Humedica தேசிய பாடசாலைக்கு முன்னால் அமைந்துள்ளதுமான 2½ பரப்பும் பாதை ½ பரப்பும், எல்லாமாக 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டியது: பேராசிரியர் க.லீலா நிருஸ்மான், தவசமா வீதி, மானிப்பாய். தொ.பே: 0774467798,0774628426

## அலுவலக உதவியாளர் தேவை

முன்னணி பத்திரிகை நிறுவனமொன்றின் யாழ்.கிளை நிறுவனத்துக்கு அலுவலக உதவியாளர் தேவை. 29.06.2010 (செவ்வாய்க்கிழமை) மு.ப. 9-நண்பகல் 12 மணிவரை தங்கள் சுயவிபரக்கோவை, சான்றிதழ்களுடன் நேர்காணல் முகமுக்கு நேரில் வரவும்.
முகாமையாளர், இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 28.05.2010 வெள்ளிக்கிழமை அன்று அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் இராசலிங்கம் அருஜெயக்குமார்

(உரிமையாளர், அருள் ஸ்ரோஸ், கோப்பாய் சந்தி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (27.06.2010) ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை மறுதினம் (29.06.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

கிறிஸ்தவ கல்லூரியடி,
5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய். (99844)

மனைவி,
பிள்ளைகள்.

## ஒத்துமாறல்

தீவகக் கல்வி வலயத்தில் நூலக விஞ்ஞான ஆசிரியராக கடமையாற்றுபவர் வவுனியா தெற்கு வலயத்துக்கு ஒத்துமாற விரும்புகின்றார்.
தொடர்பு: 023 323 2542 - 0776622082

## திருமண சேவை

துரிதமான-சுலபமான வாழ்க்கைத் துணைத் தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுயதெரிவுமுறைபற்றிய வரன்முறையைத் தெரிந்திட நீங்கள், புதன், வெள்ளி மாலையிலோ, சனி, ஞாயிறு நண்பகலிலோ மூத்த-புகழ்பூத்த- சுயதெரிவுமுறை முன்னோடி- தனி மனித நிறுவுநர்-சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத் துநர் குரும்பசிட்டியூர் மாபெரு வேல் அமுதனுடன் தொடர்புகொள்ளுக!
தொலைபேசி: 2360488, 2360694, 4873929

## வீடு, காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், 3 ஆம் குறுக்குத் தெருவில், 38 ஆம் இலக்கத்தில் 2 பரப்புக்காணியுடன் வீடு விற்பனைக் குண்டு.
தொடர்பு: 0779233161

## MIPLELEAF GROUP

Luxury தொடர்மாடிகள் விற்பனைக்கு


JAFFNA TOWN



2, படுக்கையறைகள் 1200 sqf 69 இலட்சம்
3, படுக்கையறைகள் 1700 sqf 99 இலட்சம்

*Sangeetha : 077 326 3512*
*Bala : 077 257 8720*

No.14, 37th Lane, Wellawatte, Colombo 06.



## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA புறொய்லர் குஞ்சுகள் 29.06.2010 காலை 8 மணிக்கு விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

- ✱ றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
- ✱ திருமகள் களஞ்சியம், சிவலிங்கப்புளியடி.
- ✱ P.ரவி, தபாற்பெட்டி வீதி, சாவகச்சேரி.
- ✱ ஜென்சி பாம், முதலாம் கட்டை; பருத்தித்துறை.

தொ.பே: 0212222867, 0776090926

## பணிப்பெண்கள் உடன் தேவை மலேசியா நாட்டிற்கு

தமிழ் வீட்டிற்கு தமிழ் பேசும் பணிப்பெண்கள் தேவை

| | |
|---|---|
| மாதாந்த சம்பளம் | RM 650 |
| இலங்கைப் பெறுமதிக்கு | Rs. 21,700 |

பாஸ்போட் உள்ளவர்கள் மற்றும் பாஸ்போட் இல்லாதவர்கள் (உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பாஸ்போட் செய்து தரலாம்)

- ★ மெடிக்கல் (Medical) -இலவசம்
- ★ இன்சூரன்ஸ் (Insurance) -இலவசம்
- ★ விமான டிக்கட் (Air Ticket) -இலவசம்
- ★ தங்குமிடவசதி (Accomodation) -இலவசம்
- ★ உணவு (Food) -இலவசம்

Labour Licence No.2422

**Amal Sulthan Travels & Recruitment**

540, 1/1,1/2 (1st Floor), Maradana Road,
Maradana, Colombo-10
Tel:011-2691344, 077-3179592

## தேவை

கோப்பாய் சந்தியில் இருந்து கைதடி வீதியில் கிறேசர் (கல் உடைக்கும் ஆலை) நிறுவுவதற்குரிய காணி விலைக்கு தேவைப்படுகின்றது.
தொடர்பு 0777 215005

## கடை வாடகைக்கு தேவை

Internet Cafe & Communication கடை நிறுவுவதற்குரிய தகுந்த இடம் கல்வியங்காட்டு சந்தி மற்றும் மானிப்பாய் பகுதிகளில் தேவைப்படுகிறது.
தொடர்பு 0777 215005

## IELTS இன்றி Spot Admission மூலம் UK இல் உயர் கல்வி



West End College London

| | |
|---|---|
| இடம் | : 04, IBC Road, Wellawatte, Colombo 6. |
| திகதி | : 14th August 2010 |
| நேரம் | : காலை 10.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை |

For appointment please contact : > 0777-761346

*VISA பெற்றுக்கொள்ள முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.*

எமது சேவை முற்றிலும் இலவசம்

O/L உடன் குறைந்த கட்டணத்தில்!

flex Institute — Step Towards a Bright Future
4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777-761346
Email: flexinstitute@sltnet.lk
www.flexinstitute.lk
(A Subsidiary of Flex Graphic)
FLEX Graphic


## Sale — Un believable Offer

10.06.2010 முதல்
30.06.2010 வரை

Imported by: Abbe (PVT) LTD, Colombo.




Sealed Type Element



| | | | | |
|---|---|---|---|---|
| *Samsonic Rice Cooker 2.8 l* | + | *Samsonic kettle 1.8 l* | = | 3,990/= |
| *Samsonic Rice Cooker 2.2 l* | + | *Samsonic kettle 1.8 l* | = | 3,890/= |
| *Samsonic Rice Cooker 1.8 l* | + | *Samsonic kettle 1.8 l* | = | 3,790/= |

**Media Electro Mart**
*1-I, 1-II, Stanley Road, Jaffna.*
*T.P: 021 222 4566*

யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ள..

**Jaffna Electrical**
*6, Stanley Road, Jaffna.*
*T.p: 021 222 2353*
*021 222 4302*

**Jaffna electrical**
*(Show room)*
*141,Power House Road, Jaffna.*
*T.P: 021 222 5766, 021 222 8378*

**Jaffna Electrical**
*(Show room) 4, new market, Chavakachcheri.*
*T.P: 021 300 8702*

ஓம் சக்தி போற்றி

## யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்

## பூங்காவன உற்சவ விஞ்ஞாபனம் இன்று (27.06.2010) ஞாயிறு

மாலை 5 மணிக்கு அபிஷேகம், மாலை 5.30 மணிக்கு மூலஸ்தான பூஜை
மாலை 6 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை
மாலை 6.30 மணிக்கு பூங்காவன மண்டபத்தில் எழுந்தருளல் தொடர்ந்து விஷேட வசந்த மண்டபப் பூஜை இடம்பெற்று மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பூ மணவறையில் அம்பாள் வீதியுலா வருதல் இடம் பெறும்.

அன்றையதினம்

1. ஈழ நல்லூர் உதயசங்கர் குழுவினர் (கல்வியங்காடு)
2. அளவெட்டியூர் நாதஸ்வர வித்துவான் எம்.பி. பாலகிருஸ்ணன் குழுவினருடன் தென் இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள நாதஸ்வர வித்துவான் பழனி அவர்களும் தவில் வித்துவான் திருச்சேறை ஸ்ரீனிவாசன் அவர்களும் பங்குபற்றுவார்கள்.
3. வசந்தன் குழுவினர் (சாவகச்சேரி)
4. தவில் வித்துவான் காரையம்பதி என்.கே. வீரச்சாமி அவர்களும் இன்னும் பல கலைஞர்கள் பங்கு பற்றும் விசேட மேளக்கச்சேரியும் இடம்பெறும்.


தேவஸ்தானமும் உபயகாரரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டில்...

## தாய்மொழியான தமிழ்மொழி மூலமான கல்வியே மாணவருக்கு அறிவூட்டவல்லது

### - திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி -



தமிழ் மொழியைப் பேசும் நாம் தாய் மொழியில் கற்பதை விடவும் பிறமொழிகள் மூலமான கல்வியையே நாடுகிறோம். இந்நிலை மாறவேண்டும். தமிழ்மொழி மூலமான கல்வியே அறிவூட்ட ஏற்ற வழிஎன்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். இவ்வாறு செம்மொழி மாநாட்டில் உரையாற்றிய திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

நாம் இனத்தால் திராவிடர்கள். மொழியால் தமிழர்கள். நமது தாய் மொழி தமிழ். எங்கும் தமிழ் ஒலிக்க வேண்டும். எதிலும் தமிழ் இருக்க வேண்டும் என்று விரும்புவதில் தவறில்லை. பழைய மொழியாகவும், செம்மொழியாகவும் திகழ்கின்ற தமிழ், தலைமையிடத்தை அடைய வேண்டுமானால் தமிழைப் பட்டப் படிப்பு, கலைக் கல்லூரி, பல்கலைக்கழகங்களில் பயிற்று மொழியாக்க வேண்டும். தாய்மொழி வழிக் கல்வியே சிறந்தது என்று அறிஞர்கள் எடுத்துரைக்கின்றனர். தொழில் வளத்தில் முன்னணியில் உள்ள ஜப்பான் நாடே அதற்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டு.

மக்களுக்குப் புரியும் வகையில் தாய்மொழியில் நிர்வாகம் நடைபெற வேண்டும். தமிழில் கையெழுத்திடுவதால் மட்டுமே ஆட்சிமொழித் திட்டம் நிறைவேறி விட்டதாக எண்ண முடியாது. அன்றாட அலுவலுக்குத் தேவையான குறிப்புகளைத் தமிழிலேயே பொருள் பிறழாமல், அனைவருக்கும் புரியும் வகையில் எழுதக் கூடிய திறமை ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டால்தான் ஆட்சி மொழித் திட்டம் வெற்றி பெறும். வணிக நிறுவனங்களுக்கு உரிமம் கொடுக்கும் போதே நல்ல தமிழில் பெயர் இருந்தால் மட்டும் அனுமதி கொடுக்க வேண்டும்.

இணையத்தில் கொட்டிக் கிடக்கும் தகவல்களைத் தமிழர்கள் அறிய வேண்டுமானால் கணனியில் தமிழ் வரவேண்டும். மாவட்ட நீதிமன்றங்களில் தமிழ் வழக்காடு மொழியாக உள்ளது. ஆனால் உயர்நீதிமன்றத்தில் தமிழ் அலுவல் மொழியாகவில்லை. உயர்நீதி மன்றத்தில் தமிழில் வழக்காடும் உரிமை வேண்டும். உயர்நீதிமன்றத்தில் தமிழே வழக்காடு மொழியாக இருக்க வேண்டும் என்ற தமிழக அரசின் சார்பில் சட்டப் பேரவையில் 2006ம் ஆண்டே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திருக்குறளை தேசிய நூலாகப் பிரகடனப்படுத்த அத்துணை முயற்சிகளையும் எடுப்பதோடு நீதிமன்றங்களில் உறுதிமொழி எடுப்பதற்குரிய நூலாகவும் ஆக்கிட இம்மாநாடு வழி காட்ட வேண்டும். இவ்வாறு வீரமணி கூறினார்.

## திருநங்கைகள் பற்றிய தெளிவினை உண்டாக்க செம்மொழி மாநாடு உதவவேண்டும்

### - திருநங்கைகள் நம்பிக்கை -



செம்மொழி மாநாட்டு ஆய்வரங்கில், பெண்ணியம் என்ற தலைப்பில் கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் நடந்தது. இதில் மதுரையைச் சேர்ந்த திருநங்கையர்கள் (அரவாணிகள்) ஊர்வசி, சுலோசனா ஆகியோர் நோக்கர்களாகப் பங்கேற்றனர்.

எங்களை யாரும் மதிப்பதில்லை. கேளிக்கைக்கு உரிய பொருளாகப் பார்க்கின்றனர். ஆண் உடலில் பெண் உணர்வுடன் பிறந்தவர்கள் நாங்கள். சிற்பக் கல்லை மட்டும் தான் செதுக்க முடியும். மனிதர்களைச் செதுக்க முடியாது. மனிதர்களாகப் பிறந்த நாங்கள் உயிருக்குத் துணிந்து ஆணாக இருந்து பெண்ணாக மாறுகிறோம். எங்களது பெண்மைத்தன்மையை வெளிப்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளது. பெண்ணடிமையை மட்டும் ஒழித்தால் போதாது. எங்களைப் போன்றவர்களின் நிலையையும் மக்கள் உணர வேண்டும். அதற்குச் செம்மொழி மாநாடு துணைசெய்யவேண்டும்.

எங்கள் பகுதியைச் சேர்ந்த பேராசிரியை ஒருவர் ''திருநங்கையர் வாழ்க்கை நிலை'' என்ற கட்டுரையை இங்கு சமர்ப்பித்துள்ளார். சமூக மேம்பாடு குறித்து பல்வேறு தகவல்களை இங்கு தெரிவித்துள்ளோம். மாநாட்டில் பங்கேற்றது மகிழ்ச்சி அளிக்கிறது. இம்மாநாட்டு மூலமும் ஆய்வரங்கில் பங்கேற்றதன் மூலமும் திருநங்கைகளுக்கு ஒரு அங்கீகாரம் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம் - என்று மாநாட்டில் பங்குபற்றிய ஊர்வசி என்ற திருநங்கை தெரிவித்தார்.

## உலகத் தமிழர்களின் இன்னல்களைக் களையும் அமைச்சகம் அவசியம் தேவை

### - இல.கணேசன் உரை -



தமிழர்கள் எங்கு இன்னல் அடைந்தாலும் அவர்களுக்கு உதவி செய்யும் வகையில் ஒரு தனி அமைச்சு நிறுவப்படுவது அவசியம் - இவ்வாறு செம்மொழி மாநாட்டில் பங்கேற்ற, பாரதிய ஜனதாக் கட்சியின் முன்னாள் மாநிலத் தலைவர் இல, கணேசன் தெரிவித்தார். அவர் மாநாட்டில் மேலும் உரையாற்றுகையில் -

செம்மொழி மாநாட்டில் பங்கேற்றுள்ள தமிழர்கள் அனைவரும் இப்போதே ஒரு சபதம் ஏற்கவேண்டும். உலகத்தின் எந்த மூலையில் இரண்டு தமிழர்கள் சந்தித்தாலும் தமிழிலேயே பேசுவோம் என்று உறுதி எடுக்க வேண்டும்.

அனைவரும் தமிழில்தான் கையெழுத்திட வேண்டும். இப்போது தமிழுக்கு முழு எதிரியாகத் தமிழே இருக்கிறது. தமிழர்கள் பேசும் போது ஆங்கிலம் கலவாமல் பேச உறுதி கொள்ள வேண்டும். தமிழிலேயே பெயர் சூட்டவும் முன் எழுத்துக்களைத் தமிழில் வைக்கவும் உறுதியேற்க வேண்டும். தமிழகத்தில் தமிழின் பயன்பாடு இயல்பாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் எங்கும் தானாக முன்வந்து இயல்பாக தமிழில் பேச வேண்டும். மக்கள் வாழ்ந்தால்தான் மொழி வாழும். இலங்கை, மலேசியா என்று தமிழர்கள் எங்கு இன்னல் பட்டாலும் துயர்துடைக்க தனி அமைச்சகம் வேண்டும். மத்தியிலும் மாநிலத்திலும் வலிமையாக உள்ள முதல்வர் இதனை எவ்வாறு செய்ய முடியுமோ அவ்வாறு செய்து சாதிக்க வேண்டும். தமிழ்மொழியை அறிவியல் மொழியாக மாற்றவேண்டியது அவசியம் - இவ்வாறு தெரிவித்தார்.

## தமிழ் இணைய ஆய்வில் அசத்திய மாணவிகள்

தமிழகம், கோவையில் நடைபெற்று வரும் செம்மொழி மாநாட்டின் ஓர் அங்கமாக தமிழ் இணைய மாநாடு நடைபெற்றது. இந்தத் தமிழ் இணைய மாநாட்டு அமர்வுகளில் ஏராளமானோர் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்துவருகின்றனர்.

'கணினி வழி தமிழ் எழுத்து உணரிச் செயற்பாடுகள்' என்னும் தொனிப்பொருளில் நடைபெற்ற கருத்தரங்கில் 3 கல்லூரி மாணவிகள் ஆய்வுகளைச்' சமர்ப்பித்தனர். அண்ணா பல்கலைக்கழக மாணவி சவும்யா, ''லாலா லாலா'' என்ற தமிழ்ப் பாடல் பகுப்பாய்வு மற்றும் பாடல் எழுது மென்பொருள் ஒன்றை தயாரித்துள்ளார். இது குறித்து சவும்யா கூறுகையில்,

தமிழ்ப் பாடல்களை எழுதும் மென்பொருள் தயாரிப்பில் சில சிக்கல்கள் உள்ளன. விரைவில் எனது மென்பொருள் முழுவடிவம் பெறும். குறிப்பாக இந்த மென்பொருளில் வார்த்தைகளை ஒருங்கிணைக்கும் வசதி இன்னும் முழுமைப்படுத்தப்படவில்லை. மாநாடு மிகுந்த பயனளிப்பதாக உள்ளது - என்றார்.

சத்தியமங்கலம் பண்ணாரி அம்மன் தகவல் தொழில்நுட்ப கல்லூரி மாணவி திவ்யபாரதி, ''தமிழ் எழுத்துணரிகளின் தயாரிப்பில் உள்ள சிக்கல்கள்'' என்ற ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்தார்.

இது எனது முதல் கட்டுரை. இதுபோன்ற மாநாட்டில் சமர்ப்பிக்கும் போது பெருமையாக இருக்கிறது. மற்றவர்களின் ஆய்வு அறிக்கையைக் கவனித்து, தவறைத் திருத்திக்கொள்ளவும் வாய்ப்பாக உள்ளது - என்றார் திவ்யபாரதி.

பெங்களூரைச் சேர்ந்த மாணவி நேத் ரவதி, ''தமிழ்ச் சொற்களை உணரும் கணிமத்துக்கான குறிக்கப்பட்ட கையெ ழுத்து உரைத்தரவு உருவாக்கல்'' எனும் தலைப்பில் தன்னுடைய கட்டுரையைச் சமர்ப்பித்தார். மிகச் சிறப்பான முறையில் அமைந்துள்ள இந்த மாநாடு, தமிழ் இணைய வளர்ச்சிக்கு பெரிதும் உதவும். இணைய தமிழ் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளும் எங்களை போன்ற இளைய தலைமுறையினருக்கு இந்த மாநாடு நல்லதளமாக இருக்கும், என அவர் தெரிவித்தார்.

## தமிழின் சிறப்பை விளக்கும் அஞ்சல்தலை கண்காட்சி

தமிழகம் கோவையில் நடைபெற்று வரும் செம்மொழி மாநாட்டைச் சிறப்பிக்கும் வகையில் தமிழ்நாடு அஞ்சல் வட்டத்தின் சார்பில் தமிழர் மற்றும் தமிழ்நாட்டின் சிறப்புகளை சொல்லும் சிறப்புக் கண்காட்சி சென்னையில் நடைபெற்றுவருகிறது.

சென்னை அண்ணாசாலையில் உள்ள தலைமை அலுவலக வளாகத்தில் நடைபெற்று வரும் இக் கண்காட்சியில் பெருமளவானோர் கலந்து கொண்டு அங்குள்ள முத்திரைகளை பார்வையிட்டு வருகின்றனர். இக்கண்காட்சியில் தமிழர்கள் மற்றும் தமிழ்நாட்டின் சிறப்பு களை வெளிப்படுத்தும் வகையில் அஞ்சல்துறை வெளியிட்ட அஞ்சல் தலைகள் இடம்பெற்றுள்ளன.

தமிழ்க் கவிஞர்கள், அரசர்கள், தலைவர்கள், தமிழகத்தை சேர்ந்த அரசியல் தலைவர்கள், கலைஞர்கள், கட்டடக்கலைகள், கோயில்கள், சுற்றுலாத் தலங்கள், மலர்கள், விலங்குகள் என்பன இடம்பெற்றுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட அஞ்சல்தலைகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.



பூசணிக்காய்களில் தமிழ் அறிஞர்களின் உருவத்தைச் செதுக்கும் சிற்பி



பார்ப்போரைக் கவர்ந்த கரகாட்ட நடனம்



செம்மொழி மாநாட்டைப் பார்த்துவிடவேண்டும் என்ற ஆவலில் காலையில் இருந்தே நீண்டவரிசையில் காத்திருக்கும் மக்கள் வெள்ளம்




கவிஞர் வாலி தலைமையில் நடைபெற்ற 'தமிழுக்கும் அமுதென்று பேர்' கவியரங்கம்



மாநாட்டுக்கு கட்டியம் கூறுகின்ற மங்கல இசைக்கச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைநகரில் தலைசிறந்த ஸ்தாபனம்....

# குமரன் சில்க்ஸ்

ஆண்களுக்கான...
★ சேட்டிங்
★ சூட்டிங் ★ கோட்சூட்
★ குருத்தா ★ டெனிம்
★ ரி.சேட்ஸ்
★ சேட்வகைகள்

பெண்களுக்கான...
★ திருமண சாறிவகைகள்
★ சல்வார் வகைகள்
★ திருமணப் பட்டுச்சாறிகள், புடைவைகள்
★ சீக்குன்ஸ் சாறிவகைகள்
★ கொட்டன் சாறி வகைகள்
★ பிறின்ட் சாறிவகைகள்
★ சல்வார் வகைகள் ★சோலி கிட்

சிறுவர்களுக்கான..
நவீன டிசைன்களில் உடுபுடைவைகள்

இவை அனைத்தையும் எண்ணம்போல் தெரிவுசெய்து மகிழ்வுடன் அள்ளிச்செல்ல



K.S
குமரன் சில்க்ஸ்
இல.291, பிரதான வீதி, கொழும்பு-11.
T.P: 0114717574, 0112441701
Fax: 0112441702


## இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன்27

உறவினின் மரண வீட்டின்போது அங்கு நின்ற தென்னை மரத்தின்கீழ் சகநண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தவர் தேங்காய் வீழ்ந்து காயமடைந்தார்.

இச்சம்பவம்கடந்த வெள்ளிக்கிழமை மட்டுவில் தெற்கு வளர்மதி வீதியில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் சிறுப்பிட்டி கலையொளி வீதியைச் சேர்ந்தசின்னத்தம்பி ராஜ்மோகன் (வயது 35) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார்.

(50-288)

## வாக்காளர் இடாப்பு படிவங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை27

தென்மராட்சிப் பிரதேசத்தில் வாக்காளர் இடாப்பு திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அதற்கான படிவங்கள் கிராம அலுவலர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி தொடக்கம் கிராம அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று படிவங்களைப் பூர்த்தி செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(50-207)


**சேவை** குறைந்த செலவில் குறுகிய காலத்தில் உயர்ந்த தரத்தில் நினைவுமலர் மற்றும் நினைவு மலர்களுக்கான படங்கள் அச்சிட்டுக் கொடுக்கப்படும்.

பிள்ளையார் அச்சகம், நல்லூர். [சி/568104]

One Of Your Good Choice
**ASHMITHA BRIDAL CENTRE**
**அஸ்மிதா பியூட்டி நிலையம்**

Facials, Threading, Clean - UP, Pimple Treatment, Make UP- 24 hours Make up, Stick Make up, Cake Make up, Parties Make up , Saree Pleating & Drapping, ✱ சகல சரும பிரச்சினைகளுக்குமான Herbal Creamகளையும் பெற்றுக்கொள்ளலாம்.
✱ வகுப்புகளும் நடைபெறுகின்றன.
Ladies Only
Contact : N .Sasikala
55, Rani Veethy,
Nallur.
T.P :- 0772260573 - 0718192258

வசீகரத் தோற்றத்திற்கு!
**சந்தனாலேப**
(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல்பூச்சு மருந்து)
வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை.
தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச்சுற்றிக் கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவு படுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பினேட் விசத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீர தோற்றத்தைத்தரும்.



சந்தனாலேப
**'சிவா நறுமணப் பூங்கா'**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்).
MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.
(இ/555203)



## வேலைவாய்ப்பு

TRADEMASTER ®
DIGITAL PRINTING

கீழ்க்காணும் வேலைக்கு ஆட்கள் தேவை
• Sale Executive
ஆங்கில மற்றும் சிங்கள மொழி தெரிந்த சிறப்பான பேச்சு ஆற்றல் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
வேலைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பங்களை 30.06.2010 க்கு முன்னதாக கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

Trade Master Lanka (pvt) Ltd
173/5, Stanley Road
Jaffna.
Ph:0217538770


# மரண அறிவித்தல்

## தணிகாசலம் பத்மநாதன்

(ஓய்வுபெற்ற உதவிமுகாமையாளர்-இலங்கை வங்கி)



ஐயனார்கோயிலடி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தணிகாசலம் பத்மநாதன் நேற்று (26.06.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலம் சென்றவர்களான, துரையப்பா தணிகாசலம் - பத்மாவதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சண்முகம்பிள்ளை - செல்வலட்சுமி தம்பதியரின் மருமகனும், கனகாம்பிகையின் அன்புக் கணவரும், முருகவேல் (நூலகம், யாழ்.பல்கலைக்கழகம்), ஞானவேல் (ஜேர்மனி), சண்முகவேல் (கனடா), சக்தி வேல் (யாழ்.நீதிமன்றம்), வெற்றிவேல் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கலைச்செல்வி, ஜீவமலர், குகவேணி, வினோஷிராணி (யா/இ.ஆரம்பப் பாடசாலை), உமா ஆகியோரின் மாமனாரும் மாதங்கி, சாம்பவி, அருணா, அபிரா, அபிநயா, ஆகாஷ், நாராயணி, பிரணவன், பிரவீன், ராம், அங்குஜா ஆகியோரின் அருமைப் பேரனும் காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் கதிர்காமநாதன் காலஞ்சென்றவர்களான ரகுநாதன், யோகதேவி மற்றும் உமாதேவி, பஞ்சநாதன், Dr.ஆறுமுகநாதன் ஆகியோரின் மூத்த சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதியஞ்சலி நிகழ்வு இன்று (27.06.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் நடைபெற்று, அவரின் விருப்பத்திற்கிணங்க யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு அவரது பூதவுடல் ஒப்படைக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல. 9,சிவப்பிரகாசம் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூன்27

சாவகச்சேரி, மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாசாலையைச் சேர்ந்த தரம் 10,11 மாணவர்களுக்கு சுவாமி விவேகானந்தரின் 'நல்வழிச் சிந்தனைகள்' என்னும் தலைப்பில் கருத்தரங்கு ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 10..30 மணி வரை நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கா.குணசிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கருத் தரங்கில் சுவாமி சித்ரூபானந்தா கருத்துரை வழங்குவார்.

(50-201)


## விசேட விலைக்கழிவு

✱அல்பம் கட்டுதல்
CD அல்லது நெகற்றிவ்களில் தந்தால்
Digital *அல்பம் (10 x15)*
ஒரு சீற் - 200/= மட்டுமே!
(உ+ம்) 50 சீற் அல்பம் கட்டுவதற்கு
50 x200 = 10,000
கட்டும் கூலி = 3 000
13,000

✱"ஹரிஸ்மா"அல்பம் (10 x30)
ஒரு சீற் - 600/= மட்டுமே!
(உ+ம்) 30 சீற் அல்பம் கட்டுவதற்கு
30 x 600 = 18,000
கட்டும் கூலி = 3 000
21,000

✱நிகழ்வுகளைப் படம் பிடித்துத் தருவதற்கு
30/= மட்டுமே!

**முர்த்தி டிஜிற்றல் கலர் லாப்**
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


## நீங்காத நினைவில் 10ஆம் வருடம்

### அமரர் சூசை மாணிக்கம் பெர்னாண்டோ

(S.M.Fernando opticians)



தோற்றம்
14.06.1917

மறைவு
27.06.2000

ஐயிரண்டு ஆண்டுகள் உருண்டோடி மறைந்தனவே
இதுவரையில் உம் நினைவு எம் மனதில்
மறையவில்லை. பசியதொரு மரமதனில் பதித்திட்ட
ஆணி போல இனி மேலும் எம்மனதில்
நிலைத்திருக்கும் உன் நினைவு வளமான இப்பாரில்
தலைநிமிர்ந்தே நாம் வாழ நீங்கள் எமக்குச் செய்த
வழிகாட்டலை ஒரு போதும் மறவோம் பப்பா.

105, சப்பல் வீதி,
யாழ்ப்பாணம். (99835)

மகன்
குடும்பத்தினர்.


## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் மற்றும் பொதிகள் சேவை

✔ உலகின் முதற்தர கூரியர் சேவை நிறுவனத்துடன் இணைந்து சேவையை வழங்கும் நாம் வாடிக்கையாளர்களுக்கு இன்று முதல் புதிய சேவை அறிமுகப்படுத்துகின்றோம்.
✔ குடாநாட்டின் எந்தப்பகுதியிலிருந்தும் நீங்கள் அனுப்ப இருக்கும் பொதிகள் மற்றும் ஆவணங்கள் உங்கள் இருப்பிடத்திற்கே வந்து மேலதிக கட்டணம் எதுவுமின்றி எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.
✔ இலங்கையின் சகல பாகங்களுக்குமான துரித தபால்கள் மற்றும் பொதிகள் சேவை (24 hours)
✔ குறிப்பு : 5Kg, 10Kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு 30% விஷேட கழிவு

No 1, Brown Road
Jaffna
Telephone No : 021 222 6113

ARRUL GLOBAL EXPRESS
INTERNATIONAL COURIER & CARGO SERVICE


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரடியும் நண்பர்களும்

ஒரு நாள் இரண்டு நண்பர்கள் ஊருக்குப் பயணம் செய்தனர். போகும் வழியில் காட்டைக் கடந்தனர். அப்போது திடீரென ஒரு பெரிய கரடி அவர்களுக்கு முன்னால் வந்தது. உடனே ஒருவன் தனது நண்பனை பற்றிக் கவலைப்படாமல் அங்கிருந்த மரத்தில் ஏறி விட்டான். மற்றவனுக்கு மரத்தில் ஏறிப் பழக்கமின்மையால் திண்டாடினான். மரத்தில் ஏறிய நண்பனும் உதவி செய்யவில்லை. தனியாக அவனால் கரடியை எதிர்க்கவும் முடியாது. சமயோசிதமாக யோசித்தான். உடனே நிலத்தில் விழுந்து, மூச்சை அடக்கி இறந்தவன் மாதிரி பாசாங்கு செய்து படுத்து விட்டான்.



பக்கத்தில் வந்த கரடி, அவனை முகர்ந்து பார்த்தது. அவன் செத்துவிட்டான் என நினைத்து, அவனைக் கடந்து சென்றுவிட்டது. கரடி சென்ற பின் மரத்திலிருந்து இறங்கியவன், படுத்திருந்தவனைப்பார்த்து, "கரடி உன்னிடம், என்ன கூறியது என்று கெட்டான் உதவாத நண்பர்களை நம்பாதே என்று கரடி கூறியதாகச் சொன்னான். இக்கதைமூலம் சுயநலமுள்ள நண்பர்களால் ஆபத்து எப்போதும் உண்டு என்பதையும், ஆபத்துக் காலத்தில் உதவுபவனே உண்மையான நண்பன் என்ற நீதியையும் உரை முடிகின்றது.

ஜெ. துவாரகா, தரம் - 4ᶜ

யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.

| | |
|---|---|
| 01. இந்து சமுத்திரத்தின் முத்து | - இலங்கை |
| 02. பொற் கோயில் நகரம் | - அமிர்தசரஸ் (இந்தியா) |
| 03. சீனாவின் துயரம் | - குவாங்கோ நதி |
| 04. ஏழுகுன்றுகளின் நகரம் | - ரோம் |
| 05. இருண்ட கண்டம் | - ஆபிரிக்கா |
| 06. நைலின் கொடை | - எகிப்து |
| 07. ஐரோப்பாவின் நோயாளி | - துருக்கி |
| 08. புனித நாடு | - பலஸ்தீனம் |
| 09. சூரியன் உதிக்கும் நாடு | - ஜப்பான் |
| 10. ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் | - சுவிற்சிலாந்து |
| 11. உலகின் கூரை | - திபெத் |
| 13. மத்திய தரைக் கடலின் திறவு கோல் | - ஜிப்றோல்ரர் |
| 14. பொன்வாயில் நகரம் | - சான்பிரான்சிஸ்கோ |
| 15. அறிவாளிகளின் அறிவாளி | - கன்பூசியஸ் (சீனா) |

## சிறுவர் கதிர்

### உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? 62

1. ஆசிய கிண்ணத்தை இந்திய அணி எத்தனை ஆண்டுகளின் பின்னர் வெற்றி கொண்டுள்ளது?
2. 2010 உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளின் போது அதிக 'கோல்' அடித்த அணி எது?
3. தற்போதைய இலங்கை வெளிவிவகார அமைச்சர் யார்?
4. 'நடிகர் திலகம்' சிவாஜிகணேசன் அவர்களுக்கு 'செவாலியர்' விருது வழங்கிக் கௌரவித்த நாடு எது?
5. அவுஸ்திரேலியாவின் முதலாவது பெண் பிரதமர் யார்?

### விடை தெரியுமா?

தெரிந்தால் 08.07.2010 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### விடை தெரியுமா?

### 60 இற்கான சரியான விடைகள்

1. தென்னாபிரிக்கா.
2. பந்துலகுணவர்த்தன.
3. பற்றீஸியா புட்டினிஸ்
4. குமார் சங்கக்கார
5. 1934.11.10

### பரிசுபெறுவோர் விவரம்

1. குலசிங்கம் அமுதீசன், தரம் 10, யாழ். இந்துக் கல்லூரி.
2. ச.தயூரன், தரம் 7ᶜ, கொக்குவில் இந்துக் கல்லூரி.
3. ஐ.சாரங்கன் 15/9, பொற்பதி வீதி, கொக்குவில்.
4. சு.நிலக்ஷிகா, தரம் 2, ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை.
5. ரா.உஷாந்தினி, தரம் 7ᴹ, புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி.
6. யோகராசா சிவரஜனி, தரம் 7, மட்டுவில் கமலாசனி கனிஷ்ட மகா வித்தியாலயம்.

## நீங்களும் எழுதலாம்

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்பவேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர்:-..........................................
தரம் :-..........................................
பாடசாலை :-..........................................
..........................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மட்டும்)


## மாணவத் தூரிகை



மீரா குபேரமூர்த்தி, தரம் -8 B,
யா/ இணுவில் இந்துக் கல்லூரி.




கே.மாதங்கி, தரம் -2A,
யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.




சி.கஜத், தரம் -6B,
யா/யாழ்.மத்திய கல்லூரி



ச.லதுசிகன், தரம் - 3B,
யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை, சாவகச்சேரி.



செ.சகானா, தரம் -1,
புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்.



வி.பிரதீசன், தரம் -5B,
யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.



[illegible], வயது - 4,
[illegible]பாடசாலை, யாழ்ப்பாணம்.



க.கருணாகரன், தரம் -8A,
யா/இணுவில் மத்திய கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதோ யாழ்ப்பாணத்தில்....
## யாழ் - கொழும்பு பிரயாணிகளுக்கு!

முன் ஆசனப் பதிவுகளுக்கு

**வரணி மிஷன்** (Varani Mission)

**145, நவீன சந்தை (ஆஸ்பத்திரி வீதி), யாழ்ப்பாணம்.**

எமது சேவையில்

- தினகரன் Thinakaran கடுகதி அதி சொகுசு பஸ் A/C
- D.S. குணசேகர சொகுசு பஸ் A/C
- S.P.S. எக்ஸ்பிரஸ் சொகுசு பஸ் A/C
- Tip Top அரைச் சொகுசு
- Vijay அரைச் சொகுசு (புத்தளம் ஊடாக)
- N.C.G. அரைச் சொகுசு (குருநாகல் ஊடாக சொய்சாபுர வரை)
- S.T.R. அரைச் சொகுசு

தொலைத் தொடர்புகளுக்கு:
0777 917691, 077 6048921,
021 2222868, 021 4900955

(99814)

care

### CARE INTERNATIONAL - SRI LANKA

**CARE International Sri Lanka is an INGO actively involved in addressing issues of social marginalization throughout the country. It implements a diverse portfolio of programmes in governance, gender equity and power analysis, peace building & reconciliation, sustainable livelihoods and emergency and disaster risk reduction.**

**We seek qualified, proactive, and self-motivated individuals to join our team in Jaffna to implement a sustainable livelihoods development project.**

**The applicant must be Sri Lankan and will be required to travel within Jaffna and occasionally out of Jaffna to other districts. The appointment will be for 12 months, on a contract basis.**

**Project Coordinator – Livelihoods**

As part of CARE Sri Lanka's technical resources team, this position will provide technical inputs to define project strategies and approaches for livelihood development. The post holder will spearhead initiatives to build effective links among stakeholders, develop partnerships and initiate relevant studies and research, share lessons learned, and ensure that approaches are conceptualized and implemented within CARE's unifying framework which prioritizes a rights-based approach.

Requirements:

- Bachelor's Degree in a relevant technical area and/or development studies.
- A similar Post-Graduate Degree will be a distinct advantage.
- Three years' experience in livelihoods related development work with demonstrated achievements in rights based programming is desired.
- Should have strong analytical, programming, and inter-personal skills.
- The position requires excellent proficiency in spoken and written English and Tamil.

**Field Co-ordinator (two positions)**

The Field Coordinator will be responsible for the project implementation in under the direct supervision of the Project Director. FC will work directly with Project beneficiaries to achieve project outputs that include; strengthening Community Based Organizations to improve the livelihoods of target groups, foster peace building and help communities plan for disasters and environmental change. This position will also coordinate capacity building programme at institutional and individual levels.

Requirements:

- Bachelors Degree in Social Sciences or Development Studies
- Minimum 03 years experience or GCE (A/L) examination with five years in the development or humanitarian sector
- Strong analytical, programming and inter-personal skills
- Proficiency in spoken and written English and Tamil.
- Should have License to ride motor bicycles and should be prepared to spend 90% of time on the field as assigned.
- Excellent leadership, negotiation, relationship-building and communication skills.

**Finance Assistant**

This position will be responsible for checking all financial documents, checking cash vouchers before payment and carrying out banking functions for the Jaffna Office. Handling of petty cash for the Area Office as well as maintaining finance records for audit purposes is also a key function. The post-holder will carefully monitor assigned budgets and be responsible for obtaining bank statements on a monthly basis in order to prepare the bank reconciliations.

Requirements:

- A pass for Mathematics and a minimum Credit Pass for English at the G.C.E(O/L) with One year experience in the Finance field
- Part qualification in CIMA, ACCA or equivalent professional qualification
- Proficiency in English and Tamil.
- High computer literacy, accuracy with numbers, attention to details and ability to meet deadlines

Suitably qualified candidates are encouraged to apply with names, addresses, and telephone numbers of three non-related referees within 07 days of this advertisement. **The application should contain relevant bio-data and a one-page handwritten text explaining how your experience and qualifications match the requirements of these positions.**

The post applied for should be indicated on the top left-hand corner of the envelope. We thank all applicants, but only the short-listed candidates will be notified.

**Women are highly encouraged to apply.**

**CARE is an equal opportunity employer**

**Director - Human Resources**
**CARE INTERNATIONAL SRI LANKA**
**7A, Gregory's Road,**
**Colombo 7**
**Email: extcv@care.lk**

*Canvassing will be an immediate disqualification* (C/568662)

### புறொயிலர் விற்பனைக்கு

உடன் சுத்தம் செய்யப்படும் புறொயிலர் 1kg 480/= மட்டும் புதன், சனி, ஞாயிறுகளில் 12மணிவரை குமரன் பாம், 227, பிறவுண் வீதி, (நரியன் குண்டுக்கு அருகில்) யாழ்ப்பாணம்.
0776180675.

### கார் விற்பனைக்குண்டு

HONDA CIVIC
கார் A/C 14 -
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு
021 3210804 (99760)

### வீடு விற்பனைக்கு

ஏழாலை கிழக்கில் இல. 764 பஸ் போக்குவரத்து வீதி அருகில், 3 அறைகளுடன் சகல வசதியும் கொண்ட இரண்டு பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
077 3530567

### வீடு விற்பனைக்கு

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் 2 பரப்பு காணியில் அமைந்துள்ள மாடி வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:
011 2714842,
00333-25495063

## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHOTHERAPHY

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம்

**மீண்டும் யாழில்**

ஆரம்ப நிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், வெள்ளை போகுதல், குழந்தைப் பேறின்மை, வாத நோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத் தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப்பயம், நடுக்கம், நரம்புத்தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

Sexuel Disorders (ஆண்மை சக்தி குறைவு - பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

பதிவுக் கட்டணம் 250/=

**காமால் ரூறிஸ்ற் இன்**

392, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 071 9315664, 0777 569205 (சி/568671)

## BREAKING NEWS UK VISA

"A" RATED UK COLLEGES



SPOT ADMISSION Interview by appointment — 10TH SATURDAY JULY 2010 10AM-5PM

BASIC QUALIFICATION G.C.E. (A/L)

COURSES IN MANAGEMENT - IT - HOTEL MGT - TRAVEL & TOURISM, BEAUTY CULTURE AND OVER 100 COURSES.


COLLEGE PRINCIPAL WILL INTERVIEW THE STUDENTS AND WILL ISSUE OFFER LETTER ON THE SAME DAY AND CAN CONFIRM THE VISA.

BRING EDUCATIONAL CERTIFICATES (NO NEED IELTS)

**HOTLINE**

| | |
|---|---|
| KASTHURI | 0773640136 |
| ABDULLAH | 0774074203 |
| HAKEEM | 0722476000 |
| SUMEIRA | 0773640130 |

**MILLENNIUM BUSINESS ACADEMY (MBA)**
# 286, R. A. De Mel Mawatha, Colombo 03.
(Near the Liberty Plaza, Next to Don Karolis)
Tel: (011) 5748720, 5 748721, 0114 335044
Web: www.millmba.com E-mail: mbaslt@yahoo.com




## நவீன சாம்ராட்சியம்!
## தலைநகரில்.........

முழுக்குடும்பத்திற்கான நவீன டிசைன் ஆடைகளின் சாம்ராட்சியம்!

**KAMALESWARY TEX**
No. 214, Main Street, Colombo - 11.
Tel : 2452878, 2345936, Fax : 2473778

## இன்று! யாழ் மண்ணில்........



நேரடி இறக்குமதி !
நிதான விலை !

**கமலேஸ்வரி புடவையகம்**
25, பெரியகடை வீதி
யாழ்ப்பாணம்.

Web : kamaleswary.com E-mail : info@kamaleswary.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# தூக்கம் கண்களைத் தழுவட்டுமே!

தூக்கம் மனிதனுக்கு இயற்கையாக அமைந்ததொன்று. தூக்கத்தினால் மனிதனது உடலும் உள்ளமும் பாதுகாக்கப்படுகிறது.

பசிக்கு உணவு;தாகத்துக்குத் தண்ணீர்; குளிர்ச்சிக்கு வெப்பம்; வெப்பத்துக்குக் குளிர்ச்சி; களைப்புக்குத் தூக்கம்.

'தூக்கத்தின் முன்னால் அரசனும் ஆண்டியும் சமமே' என்று 'டான்க் விக்காட்' என்ற அறிஞர் கூறிவைத் துள்ளார். தூக்கம் மனிதனுக்கு மட்டுமல்லாது மிருகங்களுக்கும் அவசியமான ஒன்று. விலங்கினங் களால் உணவேதும் இல்லாமல் ஒருமாதம் வரை உயிர்வாழ இயலும். ஆனால் பத்து நாள்கள்வரை தொடர்ந்து தூங்காது விழித்திருந்தால் அவை இறந்துபோய்விடும்.

தவளை போன்ற சில உயிரினங்கள் குறிப்பிட்ட காலத்தில் சில மாதங்களுக்குத் தொடர்ந்து நெடுந்தூக்கம் தூங்குகின்றன. நிலத்தினுள் உள்ள வளைக்குள் சென்று தவளை உணவேதும் உண்ணாமல் நீண்ட நாள்கள் தொடர்ந்து தூங்குமாம். அதன் பின்னர் அந்தத் தவளை மிகுந்த உற்சாகத்தோடும் இளமையோடும் வளையை விட்டு வெளிவருமாம்.

மனிதர்களில் பெரும்பாலானோர் போதுமான அளவு தூங்குவதில்லை. தூங்கும் நேரத்தின் அளவு குழந்தை களுக்கும் வயது வந்தவர்களுக்கும் அவர்களின் உடல் நலத்துக்குத் தகுந்தவாறு வேறுபடும். தூக்கம் மனிதர்களின் முதுமையைக் குறைக்கிறது. ரஷ்யப் பேராசிரிய ரொருவர் 'போதிய அளவு தூங்கி னால் முதுமைத் தன்மை குறையும் எனக் கூறியுள்ளார்.

மானிட இனத்தவர்களுக்கு அவரவர்களது வயதுக்கமைய நாளொன்றில் எவ்வளவு நேரம் தூக்கம் அவசியமென மருத்துவத் துறைசார் விற்பன்னர்கள் நிர்ணயம் செய்து வைத்துள்ளனர். தத்தமது வயதுக்கேற்ப தமக்கு நாளொன்றில் எத்தனை மணி நேரத் தூக்கம் அவசியமானது என்பதைத் தெரிந்து கொண்டு அதன்படி செயற்பாட்டால் ஆரோக்கியத்துடனும் புத்துணர்ச்சியுடனும் எம்மால் வாழ இயலும்.

இலேசில் தூக்கம் வராது அவதிப்படுப வர்கள் பலரைப் பார்த் திருக்கிறோம். அது ஒரு வகை வியாதி.

சரி மனிதரை விடுங்கள்; மிருகங்களின் தூக்கப் பழக்கம் குறித்து சுவாரஸ்யமான தகவல்களைத் தெரிந்து கொள்வோம்.

'ராக்கூன்' என்ற ஒருவகை கீரி குறட்டை ஒலியை வெளிப்படுத்திய வாறு தூங்குமாம். மனிதரைப் போன்று இது தூங்கும்போது கனவு காண்கிறது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

நாய், பூனை போன்ற வீட்டு வளர்ப்புப் பிராணிகள் உடம்பைச் சுருட்டிக் கொண்டு தலையை உள்பதித்துத் தூங்குவது தமது உடலின் வெப்ப நிலையைச் சமநிலைப்படுத்திக் கொள்ளவே ஆகும்.

யானை மற்றும் குதிரை இன விலங்குகள் நின்று கொண்டுதான் தூங்குகின்றன.

தமது உடலை வளையமாகச் சுருட் டிக் கொண்டு தூங்கும் பாம்புகளின் கண் கள் தூக்கத்திலும் திறந்தபடியே இருக்கும்.

வாத்து தரையில் நின்று கொண்டோ அல்லது தண்ணீரில் நீந்தியவாறோ தூங்கும்.

சுறுசுறுப்புக்குப் பெயர் போன எறும்புகள் மண்ணில் திண்டுகளை ஏற்படுத்திக் கொண்டு ஏறக்குறைய மூன்று மணிநேரம் தூங்குகின்றன.

ஆக மொத்தத்தில், பறைவைகளில் ஆந்தை, வெளவால் என்பவை தவிர ஏனைய இனங்கள் இரவில் மட்டும் தூங்குகின்றன.

ஆந்தை மற்றும் வெளவால் இனப் பறவைகள் பகலில் தூங்கி இரவில் இரைதேடும் வழக்கம் கொண்டவை. என்ன, அதற்குள் தூங்கி விட்டீர்களா? பரவாயில்லை; தூங்குங்கள்; தூக்கம் ஆரோக்கியத்துக்கு நல்லது தானே!★★★

ப.பமீலா, கொக்குவில்.



# பஞ்சாமிர்தம்



ஒரு மொழியிலுள்ள சொற்கள் அனைத்தையும் அகரவரிசைப்படி தொகுத்து, அவற்றின் பொருள்களை அதே மொழியிலாயினும் சரி பிற மொழி யலானும் சரி விளக்கும் நூலே அகராதி.

கி.பி 1679 ஆம் ஆண்டில் 'பிரா இன்ஸா' என்ற பாதிரியாரால் தமிழ் - போர்த்துக்கேய அகராதியொன்று இயற்றப்பட்டது. இத்தாலியில் பிறந்து தமிழ் நாட்டில் மத போதனைகள் செய்து வந்த வீரமா முனிவர் ஆக்கிய சதுர அகராதியே தமிழில் முதன்முதலாக உருவாக்கப்பட்ட அகராதியாகும். பெயர், பொருள், தொகை, தொடை ஆகிய நான்கு அம்சங்கள் கொண்டதே சதுர அகராதியாகும்.

1779 ஆம் ஆண்டில் ஜேர்மன் பாதிரிமார் இருவரால் உருவாக்கப்பட்ட தமிழ் ஆங்கில அகராதியே, தமிழ் நாட்டிலும் யாழ்ப்பாணத் திலும் அகராதிகள் பற்றிய முயற்சிகளுக்குத் தூண்டு கோலாக அமைந்தது.

1833 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்து அமெரிக்க மிஷன் அதிகாரிகள் தமிழ் - ஆங்கில அகராதியொன்றைத் தொகுத்தனர். அதே போன்று சந்திரசேகர பண்டிதர் என்பவர் ஒரு தமிழ் அகராதியை ஆக்கினார். யாழ்ப்பாண அகராதி மற்றும் மானிப்பாய் அகராதி என அழைக்கப்பட்ட இந்த அகராதியே, தமிழ் மொழியிலுள்ள அத்தனை சொற்களையும் தன்னுள் அடக்கும் விதத்தில் தொகுக்கப்பட்ட அகராதிகளில் முதலாவதாகும்.

பேரகதாரி ஒன்றை வெளியிட முயற்சிகளை மேற்கொண்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நீதிபதி கதிரவேற்பிள்ளையின் முயற்சியை மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் பூர்த்தி செய்து வெளியிட்டு வைத்தனர். அது தமிழ்ச் சங்க அகராதி என்ற பெயரில் வழங்கப்படலாயிற்று.

இன்று உலகிலுள்ள பெரும்பாலான மொழிகளுக்கென அவ்வவ் மொழி களிலும், ஆங்கிலம் போன்ற உலகப் பிரபல்யம் மிக்க மொழிகளிலும் பலதரப்பட்ட அகராதிகள் வெளியிடப்பட்டு புழக்கத்திலும் உள்ளன. இன் றைய உலகமயமாதலில் அகராதிகளின் பாவனை பெரிதும் இன்றியமை யாத, முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக ஆகிவிட்டுள்ளது

- கே. கண்ணன், ஓட்டுமடம்.



# வெங்காய மகிமை

தாவரவியலில் வெங்காயத்தை அல்லியம் ஸீபா (Allium Cepa) எனக் குறிப்பிடுவர். இதன் தாயகம் ஈரான், இந்தியா, பாகிஸ்தான் என்பவை அடங்கிய பிரதேசமாகும்.

புராதன எகிப்தில் வெங்காயம் உணவில் சேர்த்துக் கொள்ளப்பட்டு வந்தது என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

கி.மு 430 இல் ஹிப்பாகிரேட்ஸ் என்பவர் எழுதிய நூலில் வெங்காயம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெங்காயத்தில் புரதம், சுண்ணச்சத்து, ரிபோப் ளேவின் ஆகிய சத்துக்கள் 51 கலோரி அளவில் அடங்கியுள்ளன.

வெங்காயச் சாற்றையும் தேனையும் சமஅளவில் கலந்து உட்கொண்டால் தடிமல், இருமல் போன்ற நோய்களுக்கு நிவாரணம் கிட்டும்.

வெங்காயத்தில் பற்களைப் பாதுகாக்கும் அரிய சக்தி இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. வெங்காயம் இருதயத்துக்கு வலுசேர்க்கும் என்பது மேல் நாட்டு மருத்துவர்களின் ஆய்வுகளால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில் வெங்காயம் நமது உணவுக்கு ருசி சேர்க்கிறது என்பது மட்டுமல்லாமல் அது எமது உடல் ஆரோக்கியத்துக்கும் பெருமளவில் உதவுகிறது.

கு.சுபராம், உரும்பிராய்.



# அனைவரும் விரும்பும் சொக்கலட்

பெரியவர் சிறியவர் என்ற பேதமின்றி அனைவரும் ருசித்துச் சுவைக்க விரும்பும் சொக்கலட் உற்பத்திக்கு மூலப் பொருளாகப் பயன்படுவது கொக்கோ விதைகளே.

ஆரம்பத்தில் சொக்கலட் ஒரு பானமாகவே பயன்படுத்தப்பட்டது. 17 ஆம் நூற்றாண்டில் இத்தாலி, பிரான்ஸ் போன்ற நாடுகளில் சொக்கலட் ஒரு மென் பானமாக அருந்தப்பட்டது. பின்னரே இது சுவைத்து உண்ணத் தக்க திண்ம வடிவில் தயாரிக்கப்படலாயிற்று.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 'லூயி கைலா' என்பவரால் முதன்முதலில் சுவிட்சர்லாந்து நாட்டின் 'வெவே' என்றும் இடத்தில் சொக்கலட் தொழிற்சாலையொன்று ஆரம்பிக்கப்பட்டது.

1826 ஆம் ஆண்டில் இங்கிலாந்தைச் சேர்ந்த 'பிறை' என்பவரால் 'சொக் கலட் லொசஞ்சர்' தயாரிப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதனைத் தற் போது பாவிக்கப்படும் சொக்கலட் துண்டுகளாக (சிலாப்) மாற்றி உலகம் முழு வதும் அறிமுகம் செய்தவர் பிரித்தானிய விஞ்ஞானி 'ஜோன் கட்பரி' ஆவார்.

1866 ஆம் ஆண்டில் காட்பரிஸ் நிறுவனம் முதன்முதலாகச் சொக்கலட்டைப் பெட்டியில் அடைத்து விற்பனைக்கு விட்டது. அதன் பின்னர் பால் கலந்து தயாரித்த சொக்கலட் அறிமுகப்படுத்தப்பட்டது.

இன்று உலகம் முழுவதிலும் 'சொக்கலட்' மக்கள் மத்தியில் பிரபல்யமானதொரு பொருளாக ஆகிவிட்டது.★

-I.A..ராஜன், இளவாலை.



# கவித்துவ வல்லமை எல்லோருக்கும் அமைவதொன்றல்ல

இரண்டாம் சார்ல்ஸ் மன்னர் தம்மை ஒரு பெரிய கவிஞராக நினைத்துக்கொண்டு மனதில் தோன்றிய எல்லாவற்றையும் எழுதிவிட்டுத் தாம் அற்புதமான கவிதைகளை எழுதிவிட்டதாகக் கூறி அவற்றைப் பலரிடம் காட்டிப் பெருமை அடித்துக் கொள்வார். ஒரு நாள் தலைசிறந்த கவிஞரொருவரை வரவழைத்து அவரிடம் தாம் எழுதிய கவிதை களைக் கொடுத்து அவை குறித்த அக் கவிஞரின் கருத்தைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டார். அக் கவிஞரோ கவித்துவத்தில் திறமைமிக்கவர் மட்டுமல்லாது நேர்மையான ஒரு மனிதரும் கூட தமது மனதில் உண்மையெனப் படுவதை அப்படியே சொல்லிவிடும் வழக்கம் கொண்டவர்.

மன்னரின் கவிதைகளைப் படித்த அக் கவிஞர் அவை தரமற்ற - கவிதைப் பண்புகள் எதுவுமற்ற வெறும் கிறுக்கல்கள் என்பதை உணர்ந்து கொண்டார். ஆனாலும் மன்னரின் எழுத்துக்கள் குறித்துக் குறைகூறி விமர்சிக்க முடியாதல் லவா? ஆனால் அதே சமயம் அவர் பொய்யாகப் புகழ்ந்து கருத்துத் தெரிவிக்கவும் விரும்பவில்லை.

இந்த இக்கட்டிலிருந்து எவ்வாறு விடுபடுவது எனச் சிறிது நேரம் சிந்தித்து விட் டுப் பின்னர் மன்னனைப் பார்த்து ''பெருமை மிக்க மன்னரான உங்களால் விரும் பும் எதனைத் தான் செய்து முடிக்க இயலாது? தரக் குறைவான கவிதைகளை எழுத வேண்டுமென்று தீர்மானித்து அப்படியே எழுதியும் வீட்டீர்களே!'' எனக் கூறினார் அந்தக் கவிஞர். இதைக் கேட்ட மன்னரின் முகத்தில் அசடு வழிந்திருக்கும் என்பது சொல்லித் தெரியவேண்டிய ஒன்றல்ல.★

- ஓ.லஸ்மனா, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளே மனிதனை சோதிக்கலாமா?

இயேசு ''இவர்கள் உண்பதற்கு நாம் எங்கிருந்து அப்பம் வாங்கலாம்?'' என்று பிலிப்பிடம் கேட்டார். ''தாம் செய்யப்போவதை அறிந்திருந்தும் அவரை சோதிப்பதற்காகவே இக்கேள்வியைக் கேட்டார்'' (யோவா 6 : 5 -6). பிசாசினால்தான் மனிதன் பல விதத்திலும் சோதிக்கப்படுகின்றான். ஆனால் சகலத்தையும் அறிந்திருந்த கடவுள் ஏன் மனிதனை சோதிக்க முற்பட வேண்டும்?என்ற கேள்வி எம்மத்தியில் ஏற்படலாம். கடவுளிடமிருந்து வருகின்ற சோதனைகள் கடவுளுக்கும் எமக்குமிடையே இறுக்கமான பிணைப்பை ஏற்படுத்துவதுடன் அறியப்படாத பல விடயங்களை நாம் கற்றுக் கொள்வதுடன் நிறைவான ஆசியையும் அருளையும் பெற்று அவருக்குச் சாட்சியாக வாழ முடியும் என்ற உண்மையை வேதாகமம் நமக்குக் கற்பிக்கின்றது.

ஆபிரகாமினுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட சோதனையை பார்க்கின்றபோது கடவுளின் கட்டளைக்குக் கீழ்படிந்து தனது ஒரே மகனான ஈசாக்கை பலியிட அழைத்துச் சென்றபோது ஆபிரகாம் தனது வார்த்தைக்குக் கீழ்படிந்து அதன்படி செயல்படுவான் என்பது கடவுளுக்குத் தெரியாதா? நிச்சயமாக அவருக்குத் தெரியும். ஆனால் இந்த சோதனையின் மூலம் கடவுளுடைய வார்த்தைக்கு கீழ்ப் படிந்து அதன்படி வாழ்கின்ற போது அவர் அனைத்தையும் பார்த்துக்கொள்வார் என்ற உண்மையை அனுபவத்தினால் ஆபிரகாம் கற்றுக்கொள்வதுடன் உன் வழி மரபினரை விண்மீன்களைப் போலவும், கடற்கரை மணலைப் போலவும் பல்கிப் பெருகச் செய்வேன் என்ற கடவுளின் வாக்குத்தத் தத்திற்கு சாட்சியாகின்றான்.




யோபுவினுடைய வாழ்க்கையிலே ஏற்பட்ட சோதனைகளைப் பார்க்கின்றபோது அத்தனை சோதனைகளையும் யோபு எப்படி தாங்கிக் கொள்வான் என்று கடவுளுக்குத் தெரியாதா? நிச்சயமாகவே தெரியும். ஆனால் இச்சோதனையூடாக கடவுளுக்குள் வாழுகின்ற பிள்ளைகளை எந்த சக்தியாலும் அவரிடமிருந்து பிரித்தெடுக்க முடியாது என்ற உண்மையை பிசாசிற்கு நிரூபிப்பதற்காகவே யோபுவை அந்த சோதனையினூடாக செல்ல கடவுள் அனுமதிக்கின்றார். யோபுவும் அந்த சோதனையினூடாக தனது மனைவி, தன் நண்பர்கள் குறித்தும் இந்த உலகத்திலே தான் சம்பாதித்த சொத்துக்கள், பெற்ற பிள்ளைகள் யாவும் நிலையற்றவை என்பதைக் குறித்தும் கற்றுக் கொள்வதுடன் கடவுளுடன் இணைந்து வாழ்ந்து அனைத்து சோதனைகளையும் முறியடிக்கின்றபோது இழந்த அனைத்தையும் இரட்டிப்பாக கடவுள் வழங்குகின்றார் என்ற பேருண்மைக்குச் சாட்சியாக விளங்குகின்றான்.

கடவுள் எம்மை சோதிக்கின்ற போது அவர் தமது சந்தேகத்தைத் தீர்ப்பதற்காகவே எம்மை அணுகுகின்றார் என்று எண்ணிவிடக் கூடாது. மாறாக சோதனையூடாகவே எமக்கு ஒரு பாடத்தைக் கற்றுக் கொடுப்பதற்காகவும், பிறருக்கு நாம் சாட்சியாக இருப்பதற்காகவும் இப்படிச் செய்கின்றார் என்பதை உணர்ந்துகொண்டு கிறிஸ்துவுக்குள் ஒருமித்து வாழ்வோம்.

க.அருள்நேசன்
பரி.புதுமைமாதா ஆலயம், குருநகர்.

## தேன்விற்க வந்தவர் திருடிச் சென்றார் 'செல்போன்'

கைதடி, ஜூன்27

தேன் விற்பனை செய்ய வந்த இளைஞர் ஒருவர் திறந்த நிலையில் இருந்த அலுவலகத்தில் யாரும் இல்லாததைக் கண்டு அங்குள்ள கைப்பை ஒன்றில் இருந்த பத்தாயிரம் ரூபா பெறுமதியான கைத்தொலைபேசியை அபகரித்துச் சென்றார்.

இச்சம்பவம்கடந்த புதன்கிழமை மதியம் திருநெல்வேலியிலுள்ள அரச திணைக்களம் ஒன்றில் இடம் பெற்றுள்ளது. மேற்படி அலுவலகத்திலுள்ளோர் அருகிலுள்ள தமது உயரதிகாரியைச் சந்திப்பதற்காகச் சென்றபோதே இத்திருட்டு இடம் பெற்றுள்ளதாகக் கூறப்பட்டது.

(50-288)


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
Dr. சங்கரப்பிள்ளை
தங்கராணி

அன்பின் திருவுருவாய்
எம்முள் வாழும் அம்மாவே!
ஆண்டுகள் இரண்டு கடந்தாலும்
உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு மறையாது.

''ஸ்ரீ ராம மந்திரம்'',
கனகசபை வீதி,
மானிப்பாய். (99800)

தகவல்:
மகன் - சகி
முருகன் குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவு நாள்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 11 | 11 |
| 10 | 07 |
| 1977 | 2006 |



## தர்மலிங்கம் ரதீஸ்குமார்

எமது குடும்பத்தின் உயர்வுக்கு காரணமாய்
இருந்து தன்னை உருக்கி ஒளி தரும்
மெழுகுவர்த்தியாய் பிரகாசித்து எமைக்காத்து
குடும்பத்திற்கு கலங்கரை விளக்காய்
மிளிர்ந்து வழிகாட்டிய எம் அன்புக் தெய்வமே
நான்கு ஆண்டுகள் சென்றாலும்
என்றும் எம் நெஞ்சங்களில் நீங்காத
இடம் பிடிப்பாய்....

தர்ஷி வீடியோ,
பிறவளவு,
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.

குடும்பத்தினர்.

(99937)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1972ஆம் ஆண்டு 12இல் செவ்வாய் 16 கிரக பாவம், லண்டன் பிரஜாவுரிமை உள்ள மணமகனிற்கு 1979ஆம் ஆண்டிற்கு உட்பட்ட படித்த மணமகள் தேவை. குறிப்பு, படத்துடன் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல. 4039
மே/பா உதயன்

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம், 4ஆம் குறுக்குத் தெருவில் பிரதான வீதிக்கு அருகில் 5 அறைகளுடன் கூடிய விசாலமான வீடு நிறுவனங்களுக்கு மட்டும் வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு: 077 3039551 (99948)


## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 34 வயது, திருவாதிரை நட்சத்திரம், கிரகபாவம் 20, பட்டதாரி அரச உத்தியோகம் புரியும் சைவ போசன மணமகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு: 0775271495

MAKE YOUR DREAM A REALITY !

HND in Business
HND in Business IT
HND in Computing



Final Year of the Degree (1 year)
↑
HND (18 Months)
↑ ↑
A/L Foundation Course + O/L

Shortest pathway to earn a UK BSc (Hons) Degree !

எதற்காக HND @ Thames College?

★ சிறப்பாகத் தயாரிக்கப்படும் பாடநெறி கட்டமைப்பு
★ உயர்மட்ட தகுதியும் அனுபவமும் கொண்ட விரிவுரையாளர் குழு
★ மாணவர்களுக்கான நூலக வசதிகள்
★ முழுநேரம் அல்லது பகுதிநேரம்
★ குளிரூட்டப்பட்ட வகுப்பறைகளும் கணனி அறையும்
★ விரிவுரையாளர்களுடன் ஒருவருக்கொருவர் உரையாடல் வசதி
★ Wi-Fi சூழல்
★ உயர்மட்ட மாணவர்களுக்கான தொழில் வாய்ப்பு உத்தரவாதம்
★ தங்கும் - தரிப்பிட வசதிகள்

இப்போதே பதிவுசெய்யுங்கள்

எதிர்வரும் உள்வாங்கலில் 7 புலமைப் பரிசில்கள்

HOTLINE
0722247968 / 0716863121

Opportunity to follow IELTS in Colombo or Jaffna !

Join hands with Thames College
We are looking for Student Recruitment Agents in Jaffna Peninsula
Appropriate candidate entitles for an attractive remuneration package with industrial training

Thames College
153 1/1, High Level Road, Nugegoda
Tel : 011 5737307 / 011 2825895
email : info@thamescollege.lk
web : www.thamescollege.lk

யாழ்.மாணவர்கள் தொடர்புகொள்வதற்கு
இல.644, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0115737306/021 222 4593.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## தயிரின் முக்கியத்துவம்

தயிரில் முக்கியமான விற்றமின் சத்துகளும், புரதச் சத்துகளும் அடங்கியுள்ளன. கால்சியமும், ரிபோப்ளேவின் என்ற விற்றமின் பியும் தயிரிலிருந்தே பெறப்படுகின்றன.



தயிரில் உள்ள புரோட்டீன், பாலில் உள்ள புரோட்டீனை விட விரைவாகவே சமிபாடாகிவிடும். பாலை உட்கொண்ட ஒரு மணிநேரத்தில் 32 சதவீத பால் மட்டுமே சமிபாட்டுப் பாதையில் செல்கிறது. ஆனால் தயிரோ 91 சதவீதம் சமிபாடாகி விடும்.

பாலைத் தயிராக மாற்றும் பக்ரீரியா குடலில் உருவாகும் நோய் கிருமி பக்ரீரியாவின் வளர்ச்சியை தடுக்கிறது.

தயிரில் இருக்கும் பக்ரீரியா சமிபாட்டுச் சக்தியை அதிகரிக்கும் நன்மை செய்யும் பக்ரீரியாவை உருவாக்குகிறது. ஒரு கை நிறைய தயிரை எடுத்து தலையில் நன்றாக தேய்த்தால் தூக்கம் நன்றாக வரும்.

## அறை வெப்பநிலையிலும் பழுதடையாத இன்சுலின் மருந்து கண்டுபிடிப்பு

நோயாளிகளுக்கு சந்தோஷமளிக்கும் வகையில் புதிய இன்சுலின் மருந்தை அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

குளிர்சாதனப் பெட்டியில் வைத்து பாதுக்க வேண்டிய தேவையில்லாத இன்சுலின் மருந்து புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுவரை இன்சுலின் ஊசி மருந்தை குளிர்சாதனப் பெட்டியில் வைத்திருந்தால்தான் அது பழுதடையாது பாதுகாக்க முடியும் என்ற நிலை இருந்தது.

இதனால் நீண்ட தூரப் பயணத்தின் போது இன்சுலின் மருந்தை எடுத்துச் செல்வது, குளிர்சாதனப் பெட்டி வசதி இல்லாதவர்கள் இன்சுலின் மருந்தை வாங்கி வைத்துக் கொள்ள முடியாத நிலை இருந்தது. இப்போது புதிய கண்டு பிடிப்பின் மூலம் இந்தப் பிரச்சினைக் குத் தீர்வு ஏற்பட்டுள்ளது.



இப்போதுள்ள இன்சுலின் மருந்தை 4 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலைக்கு கீழ் வைத்தே பாதுகாக்க வேண்டும். இந்த அளவுக்கு மேல் வெப்பம் அதிகரித்தால் மருந்து பயன்படுத்த முடியாததாகி விடும்.

மெல்போர்னின் மோனஸ் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் சாதாரண அறையில் உள்ள வெப்பநிலையில் இருந்தாலும் பழுதடைந்து போகாத இன்சுலின் மருந்தை கண்டுபிடித்துள்ளனர். இன்சுலின் மருந்தின் மற்ற தன்மைகள் மாறாமல் வெப்பநிலை அதிகரிக்கும் போது பழுதடைந்து போகாதபடி மாற்றி அமைத்துள்ளனர்.

இந்த புதிய மருந்துக்கு சுடைகார்பா இன்சுலின் என்று பெயரிடப்பட்டுள்ளது. இதை சாதாரண அறை வெப்ப நிலையில் வைத்திருக்கலாம். இதே வெப்பநிலையில் ஒரு சில ஆண்டுகள் இருந்தாலும் மருந்து தனது தன்மையை இழக்காது என்று விஞ்ஞானிகள் குழுவின் தலைவர் பயான்காவான் லிரோப் கூறியுள்ளார். ★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TATA

இப்போது முதலில் செலுத்த வேண்டியது

ரூபா. 75,000/-

மாதாந்தக் கொடுப்பனவு

ரூபா. 17,335/-*

கொடுப்பனவுக்கான வேறு ஏற்பாடுகளும் உண்டு



கொமர்ஷல் வங்கியிடம் இருந்து
டிமோ பட்டா ஒன்றை எடுத்துச் செல்லுங்கள்

- ஆகக்கூடிய பழுவுடன் நீண்ட தூரம் செல்லக்கூடிய இலங்கையின் ஒரே மினி ட்ரக் வண்டி
- நாடு பூராவிலும் உள்ள அசல் உதிரிப்பாக மற்றும் பேணல் வலைப்பின்னல்.
- 10,000க்கும் அதிகமான பாவனையாளர்களின் நம்பிக்கையைப் பெற்றது.

வாழ்க்கைச் சுமையை சுமக்கும்
டிமோபட்டா

DIMO TECHNOLOGY

வரை. டீசல் மற்றும் மோட்டார் என்ஜினியரிங் பகிரங்க கம்பனி
இல: 65, ஜேதவன வீதி, கொழும்பு 14.
0772 398 219

டிமோ வலைப்பின்னல்: அநுராதபுரம், அம்பாறை, மாத்தறை, குருநாகல், யக்கல, கண்டி, புத்தளம், வவுனியா, அம்பலாங்கொடை, யாழ்ப்பாணம், இரத்தினபுரி, தம்புல்ல, எம்பிலிப்பிட்டிய.

* நிபந்தனைகள் ஏற்புடைத்தாகும்

COMMERCIAL BANK
www.combank.lk

கொமர்ஷல் வங்கி,
லீசிங் பிரிவு,
இல: 21, பிரிஸ்டல் வீதி, கொழும்பு 01.
தொலைபேசி: 0112 486791-5, 0112 486211
0115 66 45 45

தேவை என்றால் உங்கள் பயிருக்கும் அடிக்கிறேன்!

ப்ரோவாடோ



நெல், போஞ்சி, உருளைக்கிழங்கைத்
தாக்கும்
பனிப்பூச்சி,
கபிலநிறத்தத்தி,
வெண்ஈ,
பச்சை அழுக்கணவன்
இப்ப எல்லாம் முடிஞ்சி




ஹேலீஸ் அக்ரோ
Bayer CropScience

அவதானமாக கையாளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொமர்ஷல் வங்கியில் அருணலு கணக்கு வைத்திருக்கும் 2009 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் சித்தியடைந்த சிறுவர்கள், ரூபா 30 இலட்சம் வரை வென்றுள்ளார்கள்.









தமது பிள்ளைச் செல்வங்களின் கல்வி முன்னேற்றத்தினை கருத்தில் கொண்டு "பரீட்சைகளில் சித்தியடையும் சிறுவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசுகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில்" பல பெற்றோர்கள் வாக்களிக்கின்றனர். அவ்வாறு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு, பெறுமதி மிக்க சிறந்த பரிசுகளை வழங்கி கல்வியில் முன்னேற்றுவதற்கு மிகவும் பலம் வாய்ந்த உள்நாட்டு நிதி நிறுவனம் முன்வந்துள்ளது. ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் "குளோபல் பினான்ஸ்" மூலம் தொடர்ச்சியாக 12 வருடங்கள் "இலங்கையின் மிகச்சிறந்த வங்கி" என்ற விருதைப் பெற்ற கொமர்ஷல் வங்கியே அந்த பெரும் வாய்ப்பினை வழங்கும் நிறுவனமாகும்.

திறமையான மாணவர்களையும் தோல்வியடைந்தவர்களாக மாற்றும் லொத்தர் முறைகளில் இருந்து விலக்கி, சகல பாடசாலைகளிலும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் திறமைகளை வெளிக்காட்டும் மாணவர்களுக்கும் வெற்றிக்களிப்படைந்து மகிழ்ந்து கொள்ளும் சந்தர்ப்பத்தை வழங்குகிறது. அருணலு கணக்கு வைப்பாளர்களில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு பணப் பரிசு வழங்கும் திட்டத்தை கொமர்ஷல் வங்கி 1998 ஆம் ஆண்டில் ஆரம்பித்தது. 2005 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பெற்ற 164 மாணவர்களுக்கு ரூபா 1,350,000 வும், 2006 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பெற்ற 170 மாணவர்களுக்கு ரூபா 1,400,000 வும், 2007 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பெற்ற 353 மாணவர்களுக்கு ரூபா 3,014,500 வும், 2008 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பெற்ற 338 மாணவர்களுக்கு 2,930,471 ரூபாவும், வழங்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அருணலு கணக்கு வைப்பாளர்களில் 350 மாணவர்கள் கொமர்ஷல் வங்கியின் அதிகூடிய பரிசுத் தொகையாக 2,963,337 ரூபாவை இவ்வாண்டில் பெற்றுள்ளனர்.

சகல பாடசாலைகளிலும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் அருணலு கணக்கு வைத்திருக்கும் மாணவர்களின் கணக்கில் ஆகக்குறைந்த தொகையாக ரூபா 5,000 கணக்கில் இருப்பின் அவர்கள் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் முறையே, முதலாமிடத்திற்கு 10,000 ரூபாவும், இரண்டாமிடத்திற்கு 7,500 ரூபாவும், மூன்றாமிடத்திற்கு 5,000 ரூபாவும் வழங்கப்படும்.

அத்துடன், 2007 ஆம் ஆண்டு முதல் வெற்றி பெற்ற எந்தவொரு மாணவரும் தனது மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெறும் சந்தர்ப்பத்தில் அவரின் அருணலு கணக்கின் மிகுதி தொகையானது இரட்டிப்பாக்கப்படுவதுடன் ஆகக்கூடிய தொகையாக ரூபா. 50,000 மட்டுமே அதிகரிக்கப்படும்.

கல்வியின் முக்கியத்துவத்தை அழுத்தமாக எடுத்துக்கூறும் சமூக பொறுப்புமிக்க நிறுவனமாக உபசரணைப் பங்களிப்பைச் செய்வதையிட்டு கொமர்ஷல் வங்கி பெருமை அடைவதாகவும், கஷ்ட பிரதேசத்தில் பயிலும் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் மாணவர்களும் பயன் பெறுவதானது, பெருமை தருவதாகவும் வங்கியின் பிரதான பொது முகாமையாளர் திரு. ரவி டயஸ் குறிப்பிடுகிறார்.

கொமர்ஷல் வங்கியின் அருணலு சேமிப்புக் கணக்கானது பிள்ளைகளின் கல்வி ஆற்றலை விருத்தி செய்து, சேமிப்பு நற்பழக்கதை வழக்கப்படுத்துவதை முக்கிய நோக்காக கொண்டு 1998 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அருணலு கணக்கை நாடு முழுவதும் உள்ள கொமர்ஷல் வங்கிக் கிளைகளிலும் மற்றும் தெரிவு செய்யப்பட்ட சுப்பர் மார்க்கட் வங்கிச் சேவை நிலையங்களிலும் ரூபா 100/- வைப்புச் செய்வதன் மூலம் ஆரம்பிக்க முடியும்.

அருணலு
சிறுவர் சேமிப்புக் கணக்கு

COMMERCIAL BANK

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நடைப்பயிற்சியின் நன்மைகள்

நீரிழிவு நோய் உடலில் ஏற்படுத்தும் முக்கியமான பாதிப்புக்களில் தசை நார் பாதிப்பும் ஒன்று. பொதுவாக நாம் உண்ணும் உணவு சக்தியாக உபயோகப்படுத்தப்பட வேண்டும். அன்றாட நடவடிக்கைகளுக்கும், சிறு சிறு வேலைகளைச் செய்வதற்கும் நாம் உண்ணும் உணவு சமிபாடடைந்து அதிலிருந்து கிடைக்கும் சக்தியே உபயோகப்படுத்தப்படுகிறது.

நம்மால் உபயோகப்படுத்தப்பட்டது போக மீதமான சக்தி அல்லது குளுக்கோசு இரத்தத்தில் இருக்கும்.



தசைகளில் வலியானது இரத்தத்தில் உள்ள அதிக குளுக்கோசானது தசை நார்களில் படிவதால் ஏற்படுகிறது.

நம் உணவின் சக்தியில் 60% தசை நார்களின் செயற்பாட்டுக்கு, அதாவது உடல் உழைப்பு, உடற்பயிற்சி ஆகியவற்றால் செலவழிக்கப்பட வேண்டும். இதில் குறைவு ஏற்பட்டால்

தசைப்பிடிப்பு
கால், கை வலி
கெண்டைக் கால் வலி
குடைச்சல்
உடல் வலி
ஆகியவை ஏற்படும்.

இவ்வாறு ஏற்படும்போது நீரிழிவு நோயாளிகளுக்கு உடல் வலி அதிகம் ஏற்பட்டு கை கால்களைப் பிடித்து மசாஜ் செய்து விட்டால் வலி குறைவது போல் தோன்றும். இவற்றைச் சரிசெய்ய:

இரத்தத்தில் குளுக்கோசின் அளவு கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.

தினமும் நடைப்பயிற்சி அவசியம்.

கை, கால்களை நீட்டி மடக்கிச் செய்யும் உடற்பயிற்சிகளையும் சேர்த்துச் செய்ய வேண்டும்.

நடைப் பயிற்சியைத் தொடங்குவது எப்படி என்பது மிக முக்கியம். நாம் ஏற்கெனவே தினசரி நடைப் பயிற்சி செய்யும் நண்பரிடம் நாளை முதல் நானும் உங்களுடன் நடக்க வருகிறேன் என்று சொல்லிவிட்டு அதன்படி காலை 5 மணி அல்லது 5.30 மணிக்கு எழுந்து, அவருடன் நடப்போம். இரண்டு நாள் அல்லது சில நாட்களில் இந்த முடிவுக்கு வந்து விடும். ஏனென்றால் அவர் ஏற்கெனவே நடை பழகியவர்.

அவர் வேகத்துக்கு நாம் ஈடு கொடுக்க முடியாது அவர் செல்லும் தூரம் நாம் நடக்க முடியாது.

அப்படியென்றால் எப்படி நடைப்பயிற்சியை ஆரம்பிப்பது?

நடைப்பயிற்சியை மெதுவாகவும் எளிமையாகவும் ஆரம்பிக்க வேண்டும்,

முதலில் 10 நிமிடம் நடந்து வீடு திரும்புங்கள்.

ஒரு வாரம் இது போல் செய்யவும்.

அடுத்த வாரம் 5 நிமிடம் கூட்டிக் கொள்ளவும்.

நடப்பது தற்போது எளிமை ஆகிவிடுகிறது அல்லவா? ஒவ்வொரு வாரமும் 5 நிமிடம் கூடுதலாக நடந்து பழகினால் உங்கள் இலக்கை எந்தக் கஷ்டமும் இன்றி விரைவில் அடையலாம்.

நடப்பதை ஒரு பழக்கமாகக் கொண்டுவருவது சிரமமாக இருக்கும், ஆனாலும் அதைக் கடைப்பிடிப்பது அவசியம்.

பொதுவாக உடல் நலனுக்காக நடப்பவர்கள் 20-30 நிமிடங்கள் குறைந்த பட்சம் வாரத்தில் 4-5 நாட்கள் என்ற இலக்கை எட்டுமாறு வைத்துக் கொள்ளலாம்.

பேச்சு வேகத்தில் நடப்பது என்றால் என்ன? நாம் நடக்கும் போது மூச்சின் வேகம் அதிகரிக்கும். நடப்பது சிரமமாகத்தோன்றும். அப்படிப்பட்ட நேரத்தில் பேசிக்கொண்டே நடப்பது எளிதாக இருக்காது. நாளடைவில் பேசிக் கொண்டே நடப்பது எளிதாகி விடும். இது உங்கள் உடல் தகுதி அதிகரித்திருப்பதைக் குறிக்கும்.

**பட்னெஸ் நடைப் பயிற்சி**

ஏற்கெனவே நடைப் பயிற்சியில் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருப்போருக்குப் பிரச்சினை இல்லை. ஆனால் புதிதாகப் நடைப் பயிற்சியில் ஈடுபடும் முன் மருத்துவரின் ஆலோசனை அவசியம். நல்ல நடைபயிற்சிக்கான காலணி அவசியம்.

அதே போல் நடப்பதற்கு முன் உங்கள் உடலில் குளுக்கோசின் அளவு 100 மி.கிராமுக்குக் கீழ் இருந்தால் ஏதாவது சிறு உணவு எடுத்துக் கொள்ள வேண்டும். நடப்பதற்கு முன் இரத்தத்தில் குளுக்கோசு 100 கிராமுக்குமேல் இருப்பது அவசியம்.

பட்னெஸ் நடை என்றால் கை,கால் மூட்டுக்களுக்கு அதிக பழு ஏற்படுத்தாமல் செய்யும் நடைப் பயிற்சியே இது. சாதாரண நடையையே சிறிது தூரம் கால் எட்டிப் போட்டு நடக்க வேண்டும்.

இன்னொரு வகையில் கீழ்க்கண்டவாறு மாறி மாறி நடப்பதும் மிகப் பலன் தரும்:

மிதமான நடை- 5 நிமிடம்,
கொஞ்சம் வேகம் கூட்டிய நடை-2 நிமிடம்
அதிவேக நடை ஒரு நிமிடம்

20 நிமிடங்கள் இது போல் நடப்பது உங்கள் உடல் தகுதியைக் கூட்டும்.

மெதுவாக உங்கள் நடை வேகம், நடக்கும் நேரம், நடக்கும் தூரம் ஆகியவற்றைக் காலப்போக்கில் உங்கள் உடல் தகுதிக்கேற்றவாறு கூட்டிக் கொள்ளலாம்.

நடைப் பயிற்சி என்பது நீரிழிவு நோயாளிகள் மட்டுமில்லாமல் அனைவருக்கும் அவசியமான ஒன்று. தொடர்ந்து நடந்து நலம் பெறுவோம்.

★★★★★★







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுகதை**

1960 களில் ஈழத்துச் சிறுகதைத் துறையில் தம்மை இணைத்துக் கொண்டவர் வண்ணை கே.சிவராஜா.
நாற்பதுக்கும் மேற்பட்ட தரமான சிறுகதைகளை எழுதியுள்ளார்.
இவரது சிறுகதைகள் ஈழநாடு, சஞ்சீவி ஆகிய பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன.
இவரது சிறுகதைகளின் தொகுப்பு 'சிவாவின் சிறுகதைகள்' என்ற தலைப்பில் வெளியானது.
1965 ஆம் ஆண்டில் 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியான இவரது 'நீர்க்குமிழ்' சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.

# நீர்க்குமிழ்

கே.சிவராஜா.

வானம் மப்பும் மந்தாரமுமாக இருண்டு கிடந்தது. சிறிது நேரத்தில் மழையும் வந்துவிட்டது. இருண்ட வானத்திலிருந்து மழை கொட்டவில்லை. ஆனால் சிறிய தூற்றலாகப் பிசுபிசுத்தது. தூற்றலைக் கிழித்துக் கொண்டே உத்தரதேவி விரைவாகப் போய்க்கொண்டிருந்தது.

அதில் பிரயாணம் செய்யும் சாந்தினியின் உள்ளமும், வெளியே வானம் இருண்டு கிடப்பதைப் போலவே இருண்டு கிடந்தது. அவள் உள்ளத்தில் நெஞ்சின் அலைகள் எழுந்து, மனத்தை உலுப்பிவிட்டு ஓடி மறைந்தன.

யாழ்ப்பாணம் நோக்கி உத்தரதேவி சலனமற்றவாறு தனக்கே உரித்தான வேகத்துடன் ஓடிக்கொண்டிருந்தது.

ஆனால் -

சாந்தினியின் மனமோ தத்தளித்துக் கொண்டிருச்தது. 'சீ, இது என்ன வாழ்க்கை. மணம் முடித்து இன்னும் முழுசா ஐந்து வருடங்கள் கூட ஆகவில்லை. அதற்குள் மனஸ்தாபமா?' சாந்தினியின் உள்ளம் குமுறியது.

சாந்தினி பெற்றோருக்கு ஒரே பெண் குழந்தையாகப் பிறந்தவள். இரண்டு ஆண்களுக்குப் பிறகு பிறந்ததால் வீட்டிலே அவள் மீது செல்லம் அனைத்தையும் கொட்டியிருந்தார்கள். இவளுக்குப் பிறகு ஒரு ஆண் மட்டுமே. பின்பு செல்லத்துக்குச் சொல்லவா வேண்டும்?

சாந்தினியின் பெற்றோர், கொக்குவில் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். சபாரத்தினம் அவளது தந்தை. கொழும்பிலே பெரிய பதவி வகித்து இளைப்பாறியவர். 'கிளறிக்கல்' என்ற பெயரோடு சேர்ந்தவர். தனது திறமையினால் விரைவிலே பெரிய பதவியை அடைந்தவர். அதைப் போலவே தன் பிள்ளைகளையும் முன்னுக்குக் கொண்டு வர வேண்டுமென்ற அவாவோடு பெரிய உத்தியோகத்தில் வைத்தவர். சாந்தினி தான் வாழ்க்கைப்பட்ட கணவர் ஆனந்தனோடு கொழும்பிலே குடும்பம் நடத்தி வந்தாள். சாந்தினியின் கணவன் ஆனந்தன் கொழும்பில் ஒரு கொம்பனியிலே நிர்வாக அதிகாரியாகக் கடமை புரிபவன். ஆனந்தன் சிறிய நிலையிலிருந்து முன்னுக்கு வந்தவன்.

சாந்தினிக்கும் ஆனந்தனுக்கும் திருமணமானதே ஒரு விசித்திரமாகும்.

ஆனந்தன் தனது நண்பனொருவனின் திருமணத்திற்கு வந்திருந்த பொழுது சாந்தினி மணப்பெண்ணின் உறவினர் என்ற முறையில் வந்திருந்தாள். அங்குதான் அவர்கள் முதற் சந்திப்பு நிகழ்ந்தது. இந்தச் சந்திப்பே காதலாக மொட்டு விட்டுக் கல்யாணமாக மலர்ந்தது. இவர்கள் காதலித்துக் கல்யாணம் செய்த பொழுது உலக வழக்கத்திற்கு மாறாக எதிர்ப்பவர்களிலும் பார்க்க வாழ்த்தியவர்களே அநேகம் பேர்.

**மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 155**

(18 ஆம் பக்கம் பார்க்க....)

# அன்னையின் தியாகம்



பத்து மாதம் உன் வயிற்றில்
கருவாக எனைச் சுமந்து
உடல் வருத்தம் தன்னைப் பொறுத்து
கனிவோடு காத்திட்டாய் நீ!

ஈன்றெடுத்த பின்னும் நீயுன்
உள்ளத்தில் என்னை இருத்தி
பல இரவு கண் விழித்து
காத்தென்னை வளர்த்தெடுத்தாய்!

உதிரத்தைப் பாலாக்கி அதுவென்
உடல் தனக்குப் போசாக்காய் மாறி
நாளொரு மேனியதும் பொழுதொரு வண்ணமுமாய்
திடமாக நான் வளரக் காரணமாய் ஆனாய் நீ!

நிலாச் சோறு நீயூட்ட வுன்
நிலா முகத்தைப் பார்த்துண்டேன்
நெருங்கிய நம் பிணைப்பதனால்
நாமிருவருமே மகிழ்ந்திருந்தோம்!

பசிதூக்கம் நீ மறந்து
பஞ்சணையும் தான் வெறுத்தென்
பள்ளிக் காலம் முழுவதிலும்
படிப்பில் என்னை உயர வைத்தாய்!

என் வாழ்வின் உயர்வுக்காய்
மெழுகுதிரியாய் ஆனவள் நீ - என்
வாழ்வதனின் இறுதிவரை உன்னை
மறத்தல் தாம் எளிதோ?

செ.ரவிசாந்,
குப்பிளான்.

# கண்டது மொழிமோ

பழந்தமிழ் இலக்கியப் பாடல்களைப் பற்றிய அறிமுகம் இன்று தேவைப் படுகிறது. இதற்கு இரண்டு காரணங் களைக் கூறலாம். ஒன்று எமது இளைய தலைமுறை பழந்தமிழ் இலக்கியம் பற்றி அறிய வேண்டும். மற்றது ஏனைய மொழிபேசுவோர் தமிழ்மொழி இலக்கியச் செய்திகளை நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும். இவ்விரு தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு இலக்கியப் பாடல்கள் பற்றிய தெளிவான விளக்கம் வேண்டப்படுகிறது. பழந்தமிழ்ச் செய்யுள்நடையில் கூறப்பட்ட செய்திகளை எளிதான மொழிநடையில், உரை நடையில் ஆக்கம் செய்ய வேண்டி யுள்ளது. தமிழ் மொழியில் ஈடுபாடு கொண்டு தமிழ் மொழியைப் பயிலும் பிற மொழியாளர்கள் உரைநடையில் அமைந்த விளக்கங்களைக் கற்று உணர்ந்த பின்னர், மூலச் செய்யுளைத் தேடிப்படிக்க முயல்வர். இது நமது இளந்தலைமுறையினருக்கும் பொருந்தும்.

**இலக்கியக் காட்சி 47**

சங்க இலக்கியத் தொகுப்புகளில் ஒன்றான குறுந்தொகைப் பாடல் ஒன்றை இவ்வகையில் அறிமுகம் செய்யலாம். பாடல் கூறும் செய்தி அகவாழ்க்கை பற்றியது. ஆணின் கூற்றாக அமைந்துள்ளது. ஒரு பெண்ணின் கூந்தல் மணம் பற்றிய ஐயப்பாட்டைப் பற்றியது. தன்னுடைய ஐயத்தைத் தும்பியிடம் கேட்பதாக அமைந்துள்ளது. இதனைக் காட்சிப்படுத்தியிருக்கும் பாங்கு இலக்கிய நயமுடையது. ஆண் மகனின் மனதில் ஏற்பட்ட ஐயம் பாடலில் ஒரு வினாவாக உள்ளது. அந்த வினா ஒரு தும்பியிடம் கேட்கப்படுகிறது. இந்நிலைப் பாட்டை இயற்கையோடு இணைத்திருக்கும் பாங்கு புலவனின் புலமைத்திறனுக்கு எடுத்துக்காட்டு. வினா எழுப்பும் ஆண் மகன் இரு விடயங்களைத் தெளிவாக எடுத்து உரைத்துள்ளான். தும்பியின் வாழ்வியலையும் தனது மனைவியின் குண வியல்பையும் அழகாகக் கூறுகிறான்.

பாடலின் முதலிரு அடிகளும் தும்பியின் வாழ்வும், இயல்பும் பற்றிக் கூறுகின்றன. 'கொங்கு தேர் வாழ்க்கை' என்ற ஒரு தொடர் தும்பியின் வாழ்க்கை முறையை விளக்கி நிற்கிறது. 'கொங்கு' என்பது பூக்களில் உள்ள தேன் எனப் பொருள் தருவது. 'அம்சிறைத் தும்பி' என்ற தொடர் அழகிய நிறம் பொருந்திய சிறகுகளையுடைய தும்பி எனப் பொருள் தருவது. பல்வேறு பூக்கள் தோறும் பறந்து சென்று தேனைச் சேகரிக்கின்ற வாழ்க்கை நடைமுறையைக் கொண்ட ஆண் தும்பியை விளித்தே வினா வெழுப்பப்படுகின்றது. நறுமணமுள்ள மலர்களில் தாவிப் பறந்து செல்லும் வண்டினத்தை ஆண்களின் குணவியல்புக்கும் ஒப்பிட்டுக் கூறும் மரபு தமிழிலக்கியத்தில் உண்டு. அம் மரபு இப்பாடலில் பேணப்பட்டுள்ளது. பல மலர்களிலே சென்று தேனைப் பருகும் வண்டு களிப்பினால் வேறுபடப் பேசக்கூடும். அதனால் காம வயப் பட்டவர் போலப் புகழ்ந்து சொல்லாமல் உள்ளதை உள்ளவாறு சொல்ல வேண்டும் என ஆண்மகன் கேட்கிறான். 'காமம் செப்பாது கண்டது மொழிமோ' என்ற ஆணின் கூற்று ஒரு சிறந்த காட்சிப்படுத்தலாக உள்ளது. பாடலின் அமைப்பை வருமாறு காணலாம்.

*''கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி*
*காமம் செப்பாது கண்டது மொழிமோ*
*பயிலியது கெழிஇய நட்பின் மயிலியல்*
*செறியெயிற் றரிவை கூந்தலின்*
*நறியவும் உளவோ நீயறியும் பூவே''*

(குறுந்தொகை:2)

இங்கு செப்புதல், மொழிதல் என்ற இரு செயற்பாடுகள் கூறப்பட்டுள்ளன. செப்புதல் என்பது கருத்தைத் தீர்க்கமான உறுதியாக எடுத்து உரைப்பது. மொழிதல் என்பது கருத்தினை உறுதியாக முடிவு செய்து மிகத் தெளிவாக எடுத்துக் கூறுவதாகும். தேனுண்டு களிப்போடு இருக்கின்ற வண்டு உண்மையைக் கூறவேண்டும் என்பதே ஆண்மகனின் விருப்பமாகும்.

அடுத்துக் காட்சிப் படுத்தப்படுவது மனைவியின் குணவியல்பாகும். அவனோடு அவள் கொண்டிருந்த நீண்ட கால நட்பை [illegible] மயில் போன்ற சாயலையுடையவள். ஒழுங்காக அமைந்த கூர்மையான அழகான பற்களையுடையவள். 'அரிவை' என அவளுடைய பருவத்தைக் குறிப்படுகிறான். தமிழிலக்கிய மரபில் பெண்களின் வளர்ச்சி ஏழு பருவங்களாக வகுத்துக் கூறப் பட்டுள்ளது. பேதை, பெதும்மை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என அப்பருவங்கள் பெயரிடப்பட்டுள்ளன. 7 ஆண்டு இடைவெளி இவ் வளர்ச்சி நிலைகளுக்கு கூறப்பட்டுள்ளது. எனவே தெரிவை என்பது ஏறக்குறைய 35 வயதுடையவள் என்று கூறலாம். ஆண் மகனின் மனதில் மனைவியின் கூந்தலைக் காட்டிலும் நறுமணமுள்ள பூவை நீ அறிவாயோ எனக் கேட்கும் ஆவல் தோன்றியுள்ளது. 'நறியவும் உளவோ நீயறியும் பூவே' என்ற வினா இதனையே குறிக்கிறது. மனைவியின் மீது அவன் கொண்டிருக்கும் ஆழ்ந்த காதலைப் புலப்படுத்த இயற்கையைத் துணையாக அழைக்கிறான்.

வண்டு மலருக்கு மலர் தாவித் தேனுண்பது இயற்கையான நிகழ்வு. ஆனால் அதைத் தன்னுடைய அக உணர்வுப் புலப்பாட்டிற்குப் பயன் படுத்துவதாகப் பாடல் புனையப் பட்டுள்ளது. அகப்பாடல்களில் பெயர் சுட்டும் மரபு இல்லை. ஆனால் பாடல் யாருடைய கூற்றாக அமைந்துள்ளது என்பதை பாடலில் பயன்பட்ட சொல் அல்லது தொடர் மூலம் அறியலாம். 'அரிவை கூந்தல்' என்ற தொடர் ஆண் மகன் கூற்று என்பதை விளக்கி நிற்கிறது. பாடலில் வரும் தும்பியும் மயிலும் குறிஞ்சி நிலத்தைப் பாடற் களமாகக் காட்டுகின்றன.

இப்பாடலில் உட்பொருள் ஒன்றும் பொதிந்துள்ளது. 'கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி' என்ற தொடர் தும்பியின் வாழ்வியலை விளக்குவதாக வெளிப்படையாகத் தோன்றினாலும் உட்கிடையாகப் பல பெண்களை அனுபவிக்கின்ற ஆண்களின் வாழ்வியலையும் எடுத்துரைக்கின்றது. தன்னுடைய கற்புடைமையை ஆண் உட்பொருள் நிலையில் விளக்குவதாக உள்ளது.

பெண்ணின் கூந்தலுக்கு இயற்கையான நறுமணம் உண்டு என்று கூறுவது பொருத்தமற்றது எனப் பலர் கருதுகின்றனர். ஆனால் தன்னோடு நீண்ட காலம் வாழுகின்ற அன்புக்குரிய மனைவியின் கூந்தலுக்கு ஒரு நறுமணம் இருப்பதை உணர்ந்த ஆண் மகனின் உள்ளத்திலே ஒரு ஐயம் எழுவது வியப்பன்று. ஆனால் பெண்ணின் கூந்தலுக்கு இயற்கையான மணம் கிடையாது என எண்ணுபவரும் உளர். நறுமணமுள்ள மலர்களைச் சூட்டிக் கொள்வதாலும் நறுமணமுள்ள நெய்யைப் பூசுவதாலும் தான் பெண்களின் கூந்தலுக்கு நறுமணம் ஏற்படும் என்பர். ஆனால் இந்த ஆண்மகன் தன் உள்ளத்திலே ஏற்பட்ட ஐயத்தைத் தும்பியிடம் கேட்பதாகக் கூற்று நிலைப்பாடல் அமைந்துள்ளது.

உரையாசிரியர்கள் இப்பாடல் குறிஞ்சித் திணைக்குரிய புணர்தல் ஒழுக்கத்தைப் புலப்படுத்துகிறது என வகுத்துள்ளனர். குறிஞ்சி நிலக் கருப்பொருள்களான கொங்கு, தும்பி, மயில் என்பவற்றால் அது உணர்த்தப்படுகிறது. அகத்து உணர்வைக் கருப்பொருளில் இணைத்துக் கூறும் உளவியல் பாடலில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சங்கப் புலவர்களின் நுண்மான் நுழைபுலம் இப்பாடலின் காட்சிப்படுத்தல் மூலம் நன்கு வெளிப்பட்டுள்ளது.

இப்பாடல் இறையனாரால் அருளப்பட்டதென்ற கருத்தும் உளது. தருமி என்னும் புலவருக்காக இயற்றி அருளப்பட்டதென்பர். சங்கப்புலவரின் பாடல் என்று கொள்ளும் நிலையில் ஒரு காலத்து புலமை ஆற்றலுக்குச் சான்றாக உள்ள பாடலாக அமைகிறது. சொற்சுருக்கமும் பொருட் பெருக்கமும் பாடலில் தனித்துவமான மொழிநடையாகவுள்ளன. இச் செம்மொழி நடையும், கருத்துப் புலப்பாடும் தமிழ் மொழியின் ஆற்றலையும் பழமையையும் பறைசாற்றி நிற்கின்றன.


**********



கலாநிதி
மனோன்மணி சண்முகதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 119




அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1. இரண்டாவது அல்ல.
5. உதவி.
6. இரண்டு.
7. நித்திரை.
8. மாமன் மகனாக இருப்பவர்.
10. மாறுபட்டு நிற்றல்/ பெருமைப்படல்/ மென்மையாக முரண்படல்.
12. கொடுக்கும்.
13. கோது/ பிழிந்தபின் எஞ்சுவது.
14. ஒரு பக்கம் மாத்திரம் செல்லவிடுவது. இந்த ஆங்கிலச் சொல்லே பாவனையில் உள்ளது.
15. இளம் பெண்.
16. ஒரு பறை வகை.
18. மிஞ்சிப் போதல்.
20. கூட்டல் குறி.
21. மரத்தின் பாகம்.
22. ஒரு மான் வர்க்கம்.

### மேலிருந்து கீழ்

1. வயோதிபம்.
2. தாகப்படல்/ அந்தரப்படல்.
3. பல சொற்கள் ஒன்று சேர்ந்து நிறைவு பெற்றால் உருவாவது.
4. கவலை.
5. யானைக்கு மட்டும் விசேடமாக உண்டு.
9. தேங்காயிலிருந்து பால் எடுப்பதற்கு செய்யும் வேலை இது.
11. கற்கால மனிதனின் வீடு.
13. கடல் பிராணியின் ஓடு. இராஜ சின்னத்தில் ஒன்று.
14. இராமாயணத்தின் மூலக் கதாசிரியர்.
15. சனம்.
17. புத்திரன்.
19. கட்டு.
20. கச்சேரி.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

அத்துடன் பாராட்டுப்பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 119**
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 07.07.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.119இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 11.07.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 117 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1)திருப்பதி. (5)பசு. (7)கைது. (8)திருமகள். (9)தகடு. (10வானி. (11)புதினம். (13) மான் (14) வாது. (15)கட. (17)கல். (18)அலம்பல். (20) சுயம். (21) கல. (22)கும்பல். (23)வீரன்.

**மேலிருந்து கீழ்**

(1)திகைப்பு. (2)ருது. (3) பதிகம். (4)திருடு. (5)பகவான். (6)சுள்ளி. (9)தனது. (12)திவால் (13)மாடம். (15)கலம். (16)வில்லன். (17)கமுகு. (18)அயல். (19)பகர. (20)சுப.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 117 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** — ம. அருள்ராஜ், 3ஆம் வட்டாரம், மண்டைதீவு

**2 ஆம் பரிசு** — சி. கணபதிப்பிள்ளை., இல: 172 ,புகையிரத நிலைய வீதி, வைரவ புளியங்குளம், வவுனியா

**3 ஆம் பரிசு** — கு. சண்முகரத்தினம், சோதிடர், பாரதி லேன், சங்கானை.

**4 ஆம் பரிசு** — ச. சிவகுமார், மாவிலங்கை, அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

**5 ஆம் பரிசு** — திருமதி ரஞ்சிதா நவரட்ணவேல், பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) க. டக்சனா, போயிட்டி, இளவாலை.

(2) க. அச்சுதன், தரம்-6 இந்துக் கல்லூரி, சாவகச்சேரி.

(3) கா. ரூபாஜினி, இல, 31/9 சங்கிலியன் வீதி நல்லூர், யாழ்ப்பாணம்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தை சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

# நீர்க்குமிழ்

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாந்தினி ஆனந்தனையடைந்த பொழுது சொர்க்கத்தை அடைந்ததாகவே எண்ணினாள்.

சிலர் அழகான தோற்றத்தையுடையவர்களாக இருப்பார்கள். ஆனால் அவர்கள் இதயமோ குரூரமாக இருக்கும். அதே வேளையில் சிலரது வெளித் தோற்றமோ மகா குரூரமாக இருக்கும். உள்ளமோ கள்ளங் கபடமற்ற அன்புடையதாக இருக்கும். இந்த நியதிக்கு மாறானவன் ஆனந்தன். ஆனந்தன் அழகு மட்டுமல்ல அன்புடையவனும் கூட. ஆனந்தனைப் பார்த்துப் பூரித்துப் போனாள் சாந்தினி, அன்புள்ளத்துடன் அந்தஸ்திலு முள்ளவனாக ஆனந்தனைத் தானடைந்ததில், தன்னதிர்ஷ்டத்தை நினைத்துச் சாந்தினி ஆச்சரியப்பட்டாள்.

அவன் நினைத்ததை அவள் செய்தாள். அவள் விரும்பியதை அவன் செயற்படுத்தினான்.

குடும்பத்தின் மகிழ்வுக்குக் கூறவா வேண்டும்.

தெளிந்த நீரோடை போல அவர்கள் வாழ்வு சலனமற்று நிதானமாக ஓடிக் கொண்டிருந்தது.

அந்த நீரோட்டத்திலே திடீரென்று ஒரு நீர்க்குமிழி தோன்றியது.

நீர்க்குமிழி தோன்றிது போல மறைந்து விடக்கூடாதா?

அது நிரந்தரமாக வல்லவா நிலைத்து விட்டது!

உலகமென்னும் கடலிலே வாழ்க்கைப்பட்டுச் செல்லும் போது ஒரு சிறு ஓட்டையேற்பட்டாலும் நீர் புகுந்து கப்பலைக் கடலில் ஆழ்த்திவிடுமே.

ஒரு சிறு விஷயம் மனஸ்தாபத்தில் போய் நிற்க வேண்டுமா? கேவலம் வாழ்க்கையின் மன நிம்மதியை இது மாதிரி அற்ப விஷயங்கூட எப்படி கலைத்து விடுகிறது.

அன்று நடந்தது இது தான்!

மாலை காரிலயத்திலிருந்து ஆனந்தன் திரும்பும் போது அவர்களின் ஒரே செல்வமான சிறு குழந்தை கவனிப்பாரற்று மண்ணில் விளையாடிக் கொண்டிருந்தாள். அவள் வாயிலும் உடம்பிலும் எங்கும் ஒரே மண். காரியாலயத்திலிருந்து வந்த ஆனந்தனுக்கு இந்தக் காட்சி கோபத்தை அளித்ததில் வியப்பில்லை. வழக்கத்துக்கு மாறாக அன்பு மனைவியைப் பார்த்து கோபமாகக் கடிந்து கொண்டதோடு நினைத்தோ நினையாமலோ கையினால் ஒரு அடியும் கொடுத்துவிட்டான்.

வாழ்வில் முதன் முறையாக கணவன் இப்படி நடந்து கொண்டானே என்ற அதிர்ச்சியோ அல்லது தாக்கமோ சாந்தினியின் கண்களிரண்டிலிருந்து நீர் தாரையாக வழிந்தது.

''இவ்வளவு காலமும் இவர் என்னிடம் காட்டிய அன்பெல்லாம் பொய் தானா? சாந்தினியின் உள்ளம் குமுறியது.

''இல்லை எல்லாம் குழந்தையின் நன்மைக்காகவே கடிந்து கொண்டார்'' உள்ளத்தின் மறுபக்கம் வாதிட்டது.

''இரசிக மனதுடையவரான இவருக்கு இந்தக் கல் நெஞ்சு எப்படி வந்தது? ஆண்களின் குணமே இப்படித்தானா? காலம் செல்லச் செல்ல காதல் குறைந்து விடுகிறதா? இப்படியேயிருந்தால் காலப்போக்கில் அடியும் உதையும் பட்டு சாக வேண்டுமே! அப்பா என்னை ஒரு தடவை கூட கடிந்து கொண்டது கிடையாதே. சே, என்ன வாழ்க்கை, இதற்கு ஒரே முடிவு பிறந்த வீட்டை நோக்குவதுதான்''

சாந்தினியின் உள்மனம் இப்படி எண்ணியது.

எண்ணியதை செயலில் காட்டியதில் விளைவே சாந்தினி 'உத்தரதேவி'யில் பிரயாணம் செய்வது.

''மாலை வீடு திரும்பும் போது என்னையும் பிள்ளையையும் காணாது தேடட்டும், இதுதான் இவருக்கு நல்ல படிப்பினையாக இருக்கும்'' சாந்தினி நினைவோட்டம் மீண்டும் ஓடியது.

''உத்தரதேவி யாழ்ப்பாணத்தை நெருங்க நெருங்க பயம் பிடித்துக் கொண்டது. இந்தப் பத்து மணி இருட்டில் தனியே எப்படி வீடு சேர்வது என்று நினைத்தவள், ஏதோ வைராக்கியத்தில் ஒரு டாக்ஸி மூலம் கொக்குவிலில் அவள் இல்லம் போய்ச் சேர்ந்துவிட்டாள்.

வீட்டில் எல்லோருக்கும் ஒரே திகைப்பு. அவர்களின் வினாவுக்கு அவள் கூறிய வார்த்தை ''சும்மா உங்களைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. குழந்தையுடன் வந்துவிட்டேன்'' என்பதேயாகும்.

ஆனால் அடுத்த நாள், ஆனந்தனிடமிருந்து வந்த தந்தி 'சாந்தினியும் குழந்தையும் வருகின்றார்கள்' எனத் தெரிவித்தது. சாந்தினி பிறந்த வீட்டைத் தான் நாடுவாள் என்று அவன் தெரிந்திருந்தான். கணவன் நான் இங்கு வருவதைப் புரிந்து கொண்டு விட்டான் என்பதைச் சாந்தினியும் உணர்ந்தாள். சாந்தினி மனஸ்தாபத்தோடுதான் வந்தாள் என்பதை வீட்டிலுள்ளவர்கள் அறிய அதிக நேரமாகவில்லை.

'உனக்குக் கை வைக்கவா சாந்தினி? கோர்ட்டிலே போய் முடிவு காண்போம்' மூத்த அண்ணன் கொதித்தெழுந்தான். 'விவாகரத்து ஒன்றுதான் இதற்குச் சரியான முடிவு. ஆனந்தனைக் கோர்ட்டில் இழுத்து விடுவோம்' என்றான் இளையவன்.

சாந்தினி தனது அண்ணன்மார் தன்னிடம் வைத்திருக்கும் அன்பைக் கண்டதும் தனது துக்கத்தை மறந்து விட்டாள். நாள்கள் ஓடின.

ஆனந்தனிடம் இருந்து ஒரு செய்தியும் வரவில்லை. ஆனந்தன் குழந்தையையும், மனைவியையும் மறந்து விட்டானா? சாந்தினி, இப்பொழுது சிந்திக்கத் தலைப் பட்டாள், நாலு நாள்களாய் இரவு கண்ணுறங்காமலே சிந்தித்தாள்.

''பற்பசையிலிருந்து பகற் போசனம் வரை நான் தானே அவருக்கு எடுத்துக் கொடுக்க வேணும். சவர்க்காரம், டவல் இருக்கும் இடம் கூட அவருக்குத் தெரியாதே. பாவம் ஒன்றும் தெரியாமல் திண்டாடுவாரே. அவருக்கு நான் உணவளிக்காவிடில், ஒழுங்காகச் சாப்பிடவே மாட்டாரே?'' சாந்தினி நினைத்து நினைத்து உருகினாள்.

கவலை காலத்தில் போக்கப் பட்டு விட்டதா அல்லது கோபம் தான் தணிந்து விட்டதா.

அது என்னவோ!

சாந்தினியின் உள்ளத்தில் உறங்கிக் கொண்டிருந்த பெண்மை விழித்துக் கொண்டது.

''அம்மா இன்றே நான் அவரிடம் போக வேண்டும். தந்தி கொடுங்கள்'' என்றாள் சாந்தினி.

நீரிலே தோன்றிய நீர்க்குமிழி. தோன்றியதுபோல, மறைந்து விட்டது.

அன்றைய தினம் சாந்தினி சாந்த உள்ளத்துடனும், குழந்தையுடனும் ரயில் ஏறினாள். அவள் ஒரு பெண் மட்டுமல்ல. மனைவியும் கூட என்பதை நிரூபித்து விட்டாள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...... இராசிபலன்

## ஜூன் 27 முதல் ஜூ 30 26 வரை

தருபவர் - வித்யா

### மேஷம்

ஏதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். சோர்வின்றி ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். பெண்கள் வழியில் உதவி கிடைக்கலாம். உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். ஆடை, அலங்காரப் பொருட்கள் வாங்கலாம். பொழுது போக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும்.ஆறாம் இடத்தில் இருக்கும் சனி, ஜீவன காரிய விஷயங்களில் அவ்வப்போது ஆறுதலான அனுபவங்களை வழங்கிக் கொண்டிருந்தாலும், போதிய பணவரவுகளைக் கொடுத்துக் கொண்டிருந்தாலும், விரய ஸ்தானத்தில் உள்ள குரு பகவான் அதை எல்லாம் கரைக்கும் வகையில் ஏதாவது செலவுகளை ஏற்படுத்திக் கொடுப்பார். சுபகாரிய விடயங்களுக்காகவும், அதில் கலந்து கொள்ள செல்லும் பயணங்களாலும், தந்தையின் தேவைகள், பிள்ளைகளின் விருப்பங்களை பூர்த்தி செய்யவும் கணிசமான பணத்தை செலவு செய்வீர்கள்.மூன்றாம் இடத்தில் சூரியன், கேது இருப்பதால், பெரிய மனிதர்களின், அரசியல்வாதிகளின், அதிகாரிகளின் உதவி, ஒத்தாசை கிடைத்து பெருமை அடைவீர்கள். அரசு தொடர்பான, மருத்துவம் தொடர்பான காரியங்கள் தடையின்றி சுறுசுறுப்பாக முடிவுக்கு வரும். அதேநேரத்தில், புதன் சாதகமற்ற நிலையில், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களால் ஆதாயம் இல்லை.புத்தி ஸ்தானத்தில் செவ்வாய் இருப்பதால், அவ்வப்போது புத்தி தடுமாற்றங்களுக்கும், குழப்பங்களுக்கும் ஆள்படலாம். மறதி, தண்டச் செலவால் அவதிப்படலாம். கலகலப்பான அனுபவம் உண்டு.

### இடபம்

இந்த வாரம் எதிர்பாராத திடீர் செலவுகளை சந்திக்கலாம்.சில விடயங்களில் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். உறவினர்கள், நண்பர்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். சுபகாரிய விடயங்களில் கலந்து கொள்ளலாம்.லாப ஸ்தானத்தில் குரு இருப்பதால் பணப்புழக்கத்திற்கு குறைவிருக்காது. சேமித்த பணம் கணிசமாக கைக்கு கிடைப்பதன் மூலமோ அல்லது அடுத்தவர்கள் உங்களை நம்பி பணப் பொறுப்புகளை ஒப்படைப்பதன் மூலமோ இது நடக்கலாம். பிள்ளைகளின் கல்வி முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. அவர்கள் நினைத்தது போல சில காரியங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். வீட்டுக்குத் தேவையான விலை உயர்ந்த பொருள்கள் வாங்கலாம்.அதேநேரத்தில், இரண்டாம் இடத்தில் சூரியன், கேது, புதன் இருப்பதால், பேச்சுக்களில் நிதானத்தை கடைப்பிடிக்க வேண்டும். மற்றவர்களை விமர்சனம் செய்து அதில் இன்பம் காண்பதால் பிரச்னைகள் வரலாம். குடும்ப உறுப்பினர்கள் இடையே சிறு சச்சரவுகள் ஏற்பட்டு மன அமைதி பாதிக்கப்படலாம். சுக்கிரன் சாதகமான நிலையில் இருப்பதால், பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். சகோதரிகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.நான்காம் இடத்தில் செவ்வாய் இருப்பதால், ஓய்வின்றி அடிக்கடி பரபரப்பாக செயற்பட நேரிடலாம். தாயின் உடல் நலனிலும் குறைபாடுகள் ஏற்பட்டு உங்களுக்கு செலவு உண்டாகலாம். எதிர்பாராத பணவரவுகளை பெறலாம். ஊக்கம், உற்சாகம் கூடும். தடை, தாமதம் ஏற்படும்.

### மிதுனம்

இந்த வாரம் ஆதாயமில்லாத அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆள்படலாம். மற்றவர்களுக்காக நீங்கள் உங்களின் கைப்பணத்தை செலவிட நேரிடலாம். வேலை நெருக்கடிகள் கூடும். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். இறை வழிபாடுகளில் நாட்டம் செல்லும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்ற கணிசமான தொகையை செலவு செய்யலாம். சிறிய பிரச்சினைகளை நினைத்து பெரிய அளவில் கவலை கொள்வீர்கள்.நான்காம் இடத்தில் சனி இருப்பதால், எந்த வேலையையும் எடுத்த வேகத்திற்கு, நினைத்தபடி முடிக்க முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். உழைப்பிற்கு ஏற்ற பலன் கிடைப்பதும் கடினமே. மேலும், பத்தாம் இடத்தில் குரு இருப்பதால், தொழில் ரீதியாக சிலர் பிரச்சினைகளை, வீண் பழிகளை சந்திக்க நேரிடலாம். முக்கிய வேலைகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்க வேண்டாம்.மூன்றாம் இடத்தில் செவ்வாய் இருப்பதால், சகோதரர்கள், பங்காளிகள் உதவிகரமாக இருப்பர். கடன் பிரச்சினைகளை சமாளிப்பீர்கள். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. சுக்கிரன் சாதகமாக இருப்பதால், பெண்கள், நீண்ட தூர பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், ஆடம்பர ஈடுபாடுகள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள்.ஜென்மத்தில் சூரியன் இருப்பதால், எடுத்ததற்கு எல்லாம் திடீரென கோபம் உண்டாகலாம். தந்தையுடன் பிரச்சினைகள், மனஸ்தாபம் உண்டாகலாம். பணவரவுகளைப் பெறலாம். உறவினர் உதவி கிட்டும். புதிய பொருட்கள் வாங்கலாம்.

### கடகம்

இந்த வாரம் உத்வேகம், தெம்புடன் செயற்படுவீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும். சிலரின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். உறவினர்கள் தொடர்பான வேலைகளுக்காக அலைய நேரிடலாம். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும்.ஒன்பதாம் இடத்தில் குருவும், மூன்றாம் இடத்தில் சனியும் சாதகமாக இருப்பதால், சொந்தபந்தங்கள் மத்தியிலும், தொழில் ரீதியாகவும் உங்களின் செல்வாக்கு, மரியாதை அதிகரிக்கும். விலை உயர்ந்த பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். பதவி உயர்வு, சம்பள உயர்வு வாய்ப்புகள் சாதகமாகும். சுபகாரிய விடயங்களில் அனுகூலமான திருப்பங்களைக் காணலாம்.விரய ஸ்தானத்தில் சூரியன் இருப்பதால், குடும்பச் செலவுகள் கட்டுக் கடங்காமல் செல்லும். தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள் தொடர்பான வகையில் அல்லல்களே அன்றி ஆதாயம் இல்லை. அரசு தொடர்பான காரியங்கள் எளிதாக முடியாமல் இழுத்தடிக்கலாம். புதனும் விரயத்தில் நீடிப்பதால், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களுக்காக கணிசமான தொகையை செலவிடலாம். அவர்கள் வீட்டு விசேஷ நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம்.ஜென்மத்தில் சுக்கிரன் இருப்பதால், மற்றவர்கள் பாராட்டும் வகையில் எந்த வேலையையும் செய்ய முற்படுவீர்கள். ஆடம்பரமான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும். திடீர் செலவுகள் உருவாகும். மன அமைதி பாதிக்கப்படலாம். பணவரவுகளைப் பெறலாம்.

### சிங்கம்

இந்த வாரம் ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். சில வேலைகளை செய்ய மறப்பதால் அவதிகளுக்கு ஆளாகலாம். உத்வேகம், தெம்புடன் செயற்படுவீர்கள். பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். செலவுகள், சிரமங்கள் இல்லாமல் சில வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். பணவரவுகளைப் பெறலாம்.இரண்டாம் இடத்தில் சனி இருப்பதால், பணவரவுகளில் பிரச்சினைகள் இருக்கலாம். தேவையான அளவுக்கு பணத்தை புரட்டிக் கொள்ள முடியாத சூழ்நிலை காணப்படும். கொடுக்கல் வாங்கல்களில் நாணயத்தை காப்பாற்றிக் கொள்வதும் சிரமமாகவே இருக்கும். ஜென்மத்தில் செவ்வாய் இருப்பதால், சில விடயங்களில் ஆத்திரம், அவசரமாக செயற்பட்டு விட்டு பின்னர் வருத்தம் அடைவீர்கள். உடன் பிறப்புக்கள், சொத்துக்கள், நிலம், பூமி விவகாரங்களில் தேவையற்ற சிரமங்களுக்கு ஆள்படலாம். இது தொடர்பான பிரச்சினைகளால் மன அமைதி பாதிக்கப்படலாம்.விரய ஸ்தானத்தில் சுக்கிரன் இருப்பதால், பெண்கள், சகோதரிகள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், ஆடம்பரப் பொருள்கள் வாங்குதல் போன்ற வழிகளில் பணம் கரையலாம். வீட்டு உபயோகப் பொருள்கள் பழுதாகி தொந்தரவு கொடுக்கலாம்.லாப ஸ்தானத்தில் சூரியன் இருப்பதால், அரசியல்வாதிகள், அதிகாரிகள், தந்தை வகையில் அனுகூலம் உண்டு. தந்தையுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்ந்து பாசம் அதிகரிக்கும். மருத்துவச் செலவுகள் குறைந்து நிம்மதி பெறுவீர்கள். மாமன், மைத்துனர்கள், நண்பர்களால் ஆதாயம் பெறலாம். அலைச்சல், திரிச்சல் உண்டு. 26ம் தேதி குழப்பம், தடுமாற்றம் நேரும்.

### கன்னி

இந்த வாரம் எதிர்பாராத சில சம்பவங்கள் நடக்கலாம். மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். பணவரவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. குடும்பத்திற்கு தேவையான பொருள்கள் வாங்கிக் கொடுப்பீர்கள். திட்டமிட்ட சில வேலைகளை செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். சில பிரச்சினைகள் தொடர்பான வாக்குவாதங்களில் ஈடுபடலாம். கட்டண மிகுதிகளை செலுத்துவீர்கள்.ஏழாம் இடத்தில் குரு இருப்பதால், தடை, தாமதங்கள், இடையூறுகள் இல்லாமல் எந்த வேலையையும் நினைத்த வேகத்திற்கு செய்து முடிப்பீர்கள். பல நாட்களாக செல்ல நினைத்த புண்ணிய ஸ்தலங்களுக்கு சென்று வரும் வாய்ப்பு கிடைக்கலாம். சுக்கிரன் சாதகமான நிலையில் இருப்பதால், உறவுப் பெண்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும். பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், ஆடம்பர பொருள்கள் வாங்குதல் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். செவ்வாய் விரய ஸ்தானத்தில் இருப்பதால், நிலம், பூமி விவகாரங்கள், கட்டட பணிகள், கடன் பிரச்சினைகளை தீர்த்தல், சகோதரர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுதல் போன்ற வகையில் ஒன்றுக்கு இருமடங்காக செலவுகள் நேரலாம். சூரியன் சாதகமாக இருப்பதால், அரசியல்வாதிகள், அதிகாரிகள், தந்தை வகையில் அனுகூலம் கிடைக்கும்.புதிய வாய்ப்புகள் தேடி வரலாம். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். வெறுப்பு, விரக்தி ஆட்கொள்ளும்.

### துலாம்

இந்த வாரம் ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகள் ஏற்படலாம். காத்திருப்புகள், இழுத்தடிப்புகள் நேரும். முக்கிய செய்திகளைக் கேட்கலாம். ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். கடும் வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். புதியவர்களின் சந்திப்பு, அறிமுகம் கிடைக்கும்.விரய ஸ்தானத்தில் சனி இருப்பதால், தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற ஜீவன காரிய விஷயங்களில் எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும். பெரிய அளவில் ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த வேலைகளில் எல்லாம் குறைந்த அளவே பலன் கிடைக்கலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்தவர்கள் அதைச் சரியான வகையில் காப்பாற்றாமல் காலை வாரி விடலாம். மேலும், சனி பகவான் தன ஸ்தானத்தைப் பார்ப்பதால், கொடுக்கல் வாங்கல்களை சிரமப்பட்டே சமாளிக்க நேரிடலாம்.லாப ஸ்தானத்தில் செவ்வாய் இருப்பதால், உடன் பிறப்புக்கள், பங்காளிகள் உதவிகரமாக இருப்பர். நிலம், பூமி தொடர்பான விஷயங்கள் சாதகமாக அமையும். வாடகை வீட்டில் குடியிருப்போர் வசதியான வீட்டிற்கு மாறும் சூழ்நிலை உருவாகும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் பாராட்டுக்களைப் பெறலாம்.பத்தாம் இடத்தில் சுக்கிரன் இருப்பதால், பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விஷயங்கள், மனைவி வழி உறவுகளுக்கு உதவி செய்தல் போன்ற வழிகளில் உங்களின் பணம் கரையலாம். ஆசை வார்த்தை பேசும் பெண்களை நம்பி ஏமாற வேண்டாம்.சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். செலவுகள் கூடும். பொருள் சேரும்.

### விருச்சிகம்

இந்த வாரம் ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். நண்பர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். தர்ம, புண்ணிய காரியங்களுக்காக செலவு செய்வீர்கள். தொழில் ரீதியாக சிலருக்கு உதவி செய்யும் சூழ்நிலை உருவாகும். புதிய சொத்துக்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். வளர்ந்த பிள்ளைகளுக்கு வேலை கிடைக்கவில்லையே என, கவலைப்பட்ட நிலைமை மாறி, அவர்களுக்கு புதிய வேலை கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். எதிர்காலம் தொடர்பாக சில நல்ல திட்டங்களை செயற்படுத்த முற்படுவீர்கள்.புதன், சுக்கிரன் சாதகமான நிலையில் இருப்பதால், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களால் ஆதாயம், அனுகூலம் பெறலாம். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். பல நாட்களாக எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். விலை உயர்ந்த பொருள்கள், ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம்.செவ்வாய் சாதகமாக இருப்பதால், உடன் பிறப்புகள் கேட்ட உதவிகளைச் செய்து பெருமைப்படுவீர்கள். ஓய்வின்றி தினமும் ஏதாவது வேலைகளைச் செய்யும் சூழ்நிலை உருவாகலாம். பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். தடை, தாமதங்கள் நேரும்.

### தனுசு

இந்த வாரம் நல்ல செய்திகளைக் கேட்கலாம். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பணவரவுகளைப் பெறலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். உறவினர்களுக்காக சிறு தொகையை செலவு செய்வீர்கள். மற்றவர்கள் பாராட்டும் வகையிலான சில காரியங்களைச் செய்வீர்கள்.பத்தாம் இடத்தில் சனி இருப்பதால், ஜீவன காரிய விடயங்களில் வேலைப்பளு அதிகரிக்கும். பணிபுரிவோர் மற்றவர்களின் வேலைகளையும் சேர்த்துச் செய்யலாம். இருந்தாலும், அதற்கேற்ற பலன் கிடைப்பது கடினம். நான்காம் இடத்தில் இருக்கும் குரு பத்தாம் இடத்தைப் பார்ப்பதால், பதவி உயர்வு, சம்பள உயர்வு வாய்ப்புகள் சாதகமாக அமையலாம். சிலர் விரும்பிய இடமாற்றங்களை எதிர்கொள்ளலாம். கடந்த காலத்தில் கைவிட்டுப் போனதாக நினைத்த விடயங்கள் எல்லாம் இப்போது தேடி வரும்.சுக்கிரன் சாதகமாக இருப்பதால், பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். விலை உயர்ந்த ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள். ஏழாம் இடத்தில் சூரியன், கேது இருப்பதால், மனைவி உடல் நலன் தொடர்பான விடயங்களில் அக்கறை அவசியம். கூட்டுத் தொழிலிலும் கவனம் தேவை. மற்றவர்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைக்க வேண்டாம்.புதன் சாதகமற்ற நிலையில், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். செலவு, அலைச்சல் உண்டு. குதூகல அனுபவம் உண்டு.

### மகரம்

இந்த வாரம் சில பிரச்சினைகளை நினைத்து அதிக அளவில் பயம் கொள்வீர்கள் அல்லது குழப்பம் அடைவீர்கள். நீண்ட தூர பயணங்கள் செல்லலாம். எதிர்பாராத சந்திப்பு நிகழும். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும். உறவினர்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள்.சூரியன் சாதகமான நிலையில் இருப்பதால், அரசாங்கம், அரசியல், அதிகாரிகள், மருத்துவம், தந்தை தொடர்பான விடயங்கள் எல்லாம் சாதகமாக முடியும். பெரிய மனிதர்களின் உதவியுடன் சில காரியங்களை முடித்துக் கொள்ளும் வாய்ப்பு உருவாகும். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு அதிகரிக்கும். எந்த வேலையையும் பின்னர் என, தள்ளி வைக்காமல் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள்.கேது, புதன் சாதகமாக உள்ளதால், மாற்று மதத்தினர், உறவினர்கள், நண்பர்கள், மாமன், மைத்துனர்கள் உதவிகரமாக இருப்பர். அவர்களைக் கொண்டு சில காரியங்களை நடத்திக் கொள்வீர்கள். சொந்த பந்தங்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். வெளிவட்டார தொடர்புகள் விரிவடையும். செவ்வாய், சுக்கிரன் சாதகமற்ற நிலையில் இருப்பதால், உடன் பிறப்புக்கள் தொடர்பான விடயங்களிலும், பெண்கள் தொடர்பான விடயங்களிலும் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். திடீர் பயணங்களாலும், வாகனங்கள் பழுதாகி தொந்தரவு கொடுப்பதால் சிரமங்கள் உண்டாகலாம். ஆசைப்பட்ட பொருள்களை வாங்குவீர்கள். பணவரவு உண்டு. செலவு கூடும்.

### கும்பம்

இந்த வாரம் சந்திராஷ்டமம் என்பதால், மறதி, கவனக்குறைவு, தண்டச் செலவு, காரியத் தடை, மன அமைதி பாதிப்பு போன்ற பிரச்சினைகளைச் சந்திக்கலாம். எதிர்பாராத சில நிகழ்ச்சிகளால் சந்தோஷம் அல்லது சங்கடம் அடையலாம். முடிந்ததாக நினைத்த பிரச்சினை ஒன்று மீண்டும் தலை தூக்கி தொந்தரவு கொடுக்கலாம். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம்.அஷ்டமத்தில் சனி இருந்தாலும், அந்த சனியை குரு பார்ப்பதால், கெடு பலன்கள் குறைவாக இருக்கும். ஆனாலும், வீண் பழிகள் வராமல் இருக்க விழிப்போடு செயற்பட வேண்டும். மற்றவர்களுக்காக பிணை கொடுப்பதைத் தவிர்க்கவும். தெரியாமல் சில தவறுகளைச் செய்து விட்டு, பின்னர் அதற்காக வருத்தப்படுவது தொடரும். குரு சாதகமான நிலையில் இருப்பதால், பணப் புழக்கத்திற்கு குறைவிருக்காது. நிலுவையில் இருந்த கடன் மிகுதிகள் வசூலாகும். வளர்ந்த பிள்ளைகள் வழியில் வருமானம் வரும் சூழ்நிலை உருவாகலாம்.ஐந்தாம் இடத்தில் சூரியன், புதன், கேது இருப்பதால், தொழில் ரீதியான விடயங்களிலோ அல்லது வேறு விடயங்களிலோ முடிவுகள் எடுப்பதில் குழப்பங்களைச் சந்திக்கலாம். ஒன்றுக்கு பலரிடம் யோசனை கேட்கும் சூழ்நிலை உருவாகலாம். தந்தை தொடர்பான விடயங்களிலும் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும்.சுக்கிரன், செவ்வாயும் சாதகமற்ற நிலையில் உள்ளதால், பெண்கள், பயணங்கள், சகோதரிகள், உடன் பறப்புக்கள் வழியில் தொல்லைகள், இடர்பாடுகள் நேரும். இவர்கள் தொடர்பான வகையில் நீங்கள் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையும். திட்டமிட்ட காரியங்கள் முடியும். பணவரவு உண்டு.

### மீனம்

இந்த வாரம் சோர்வின்றி, சுறுசுறுப்பு உற்சாகமாக செயற்படுவீர்கள். எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள். சந்திராஷ்டமம் என்பதால், எந்த விடயத்திலும் முந்திக் கொண்டு செயற்படுவதை தவிர்க்கவும். மற்றவர்களின் விமர்சனங்களைச் சந்திக்கலாம். சிக்கனமாக இருக்க நினைத்தாலும் முடியாத வகையில் தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம்.ஆறாம் இடத்தில் செவ்வாய் சாதகமாக இருப்பதால், பணிபுரிவோர், மகிழ்ச்சி உற்சாகமாக காணப்படுவர். புதிய விடயங்களுக்கு அடித்தளம் அமைப்பீர்கள். எந்தக் காரியத்திலும் தயக்கம் இல்லாமல் துணிச்சலுடன் செயற்படுவீர்கள். கடன் பிரச்சினைகளை வெற்றிகரமாக சமாளிப்பீர்கள். நிலம், பூமி தொடர்பான விடயங்களும் சாதகமாக அமையும். நான்காம் இடத்தில் புதன் இருப்பதால், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் சந்திப்பால், அவர்கள் ஒத்துழைப்பால் சந்தோஷம் அடைவீர்கள். வெளிவட்டார தொடர்புகள் விரிவடையும். மாணவர்கள் ஆசிரியர்களின் பாராட்டுக்களைப் பெறுவர்.இருந்தாலும், சூரியன் நான்கில் இருப்பதால், தாயின் உடல் நலன் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். மேலும், கடும் வேலைப்பளு, அலைச்சலால் உங்களின் உடல்நிலையிலும் குறைபாடுகள் உருவாகலாம்.சுக்கிரன் சாதகமாக இருப்பதால், பிள்ளைகள் செயற்பாடுகளால் பெருமை அடைவீர்கள். அவர்கள் விரும்பிய ஆடை, ஆபரணங்களை வாங்கிக் கொடுப்பீர்கள். சகோதரிகள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். ஆன்மிக விடயங்களில் நாட்டம் செல்லும். காரிய வெற்றி, பணவரவு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்டு உத்தரவாதம ளிக்கப்பட்ட No.1 தரமான Broiler கோழிக் குஞ்சுகள் 05.07.2010 காலை விநியோகிக்கப் படும். முன் கூட்டியே பதிவு செய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர்
19,முருகேசர் ஒழுங்கை, நல்லூர். தொ.பே: 0212226944
கூட்டி பாம் வர்டுக்கோட்டையிலும் பதிவு செய்யலாம்.
தொ.பே: 0213216290
குறிப்பு: எம்மிடம் குஞ்சு வாங்குபவரிடம் திரும்பி கோழி கொள்வனவு செய்யப்படும்.

## வீடுகள் விற்பனைக்கு

இல23/1, 23/2 ரொம்பிப்பார் வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தில் உள்ள இரு வீடுகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0213216577, 0776702658

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர் தினமும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர்.

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள (புதிய சைக்கிளுக்கு நிகரான) 87SRI XXXX இலக்கமுடைய HONDA CD200 மோட்டார்சைக்கிள் விற்பனைக்குண்டு

தொடர்பு : 0776079352 , 0213001585

## காணி விற்பனைக்கு

யாழ்.ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளியில் 3 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 3216790

## கடை விற்பனைக்கு

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் மணிக் கூட்டு வீதிக்கும் வேம்படிச் சந்திக்குமிடையில் உள்ள 20 அடி அகலமும் 80 அடிக்கு மேற்பட்ட நீளமுடைய கடை விற்பனைக் குண்டு.
(99585) தொடர்பு: 021 3216790


# சமூக சேவைத் திணைக்களத்தின் துறைசார் கூட்டம்

கைதடி,ஜூன்27

வடக்கு மாகாணத்திலுள்ள சமூக சேவைத் திணைக் களங்களின் கீழ் கடமை புரியும் சமூக சேவை அலுவலர்கள் மற்றும் அத்துறை சார்ந்த நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் ஆகியோருக்கான துறைசார் கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு கைதடி அரச முதியோர் இல்லத்தில் நடைபெற இருப்பதாக சமூக சேவைத் திணைக் களத்தின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் க.சிவகரன் அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்திற்கு தவறாது சமூகமளிப்பதுடன் ஏற்கனவே அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் சமூக சேவைத் திணைக் களத்தின் மாவட்ட அலுவலர்கள் தத்தமது மாவட்டங்களில் மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமூக சேவைகள் திணைக்களச் செயற்பாடுகள், மத்திய அரச செயற்பாடுகள், அரச சார்பற்ற நிறுவன செயற்பாடுகள் மற்றும் அவற்றின் அடைவு மட்டங்கள் என்பவற்றை உள்ளடக்கிய Power point Presentation ஆகியவற்றையும் சமர்ப்பிக்குமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார்.

(50-288)


# நாட்டிய மயில் 2010



"நாட்டிய மயில்" 2010ற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

விண்ணப்பதாரிகளுக்கான தகுதிகள்:

- வயது - 20 தொடக்கம் 25 வரை
- விடயம் - பதவர்ணம் தமிழில் அமைதல் வேண்டும்.
- நேரம் - 20 நிமிடங்கள் மட்டும்
- நடனதாரிகள் பக்கவாத்தியம் அல்லது ஒலிநாடாவை உபயோகிக்கலாம்

முக்கிய குறிப்பு :
விண்ணப்பதாரிகள் தங்களுடைய
- மாவட்டம்
- ஆசிரியர் பெயர்,
- நடனத்துறையில் தகைமைகள் ஆகியன குறிப்பிடப்பட வேண்டும்.

இது ஒரு போட்டி நிகழ்ச்சி ஆகையால் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் கட்டாயமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

நடன ஆசிரியர்களால் மாணவர்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பதாரிகளிடம் எந்தவித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது

விண்ணப்ப முடிவுத்திகதி - 15.07.2010

விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டிய இடங்கள்:

இல: 07, குளுதாகொட வீதி,
கல்கிசை.
தொலைபேசி இல: 0113 088961
தொலைநகல்: 0112 722125

ஐரோப்பிய மொழியியல் கல்லூரி
இல: 29, பழம் ரோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 021 7200157
தொலைநகல்: 012 2227542

# ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
அப்புக்குட்டி
நடேசு
(சந்திரன் சவுண்ஸ் சேவீஸ் உரிமையாளரும் வாகன சாரதியும்)

மலர்வு
03★07★1942

உதிர்வு
08★07★2009

கண்மூடித் திறக்கும் முன்னே
ஆண்டொன்று சென்றதுவோ
தேடிப் பார்க்கிறோம் உன் உருவத்தை
உன் இடத்தில் காணவில்லை
எங்கு சென்றாயோ ஐயா
வருடம் ஒன்று ஆனாலும்
உன் இறப்பை எம் மனம்

நம்ப மறுக்கின்றதே ஐயா
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உன் நினைவுகள் மறையாதையா
உன் பூமுகம் மறைந்தாலும்
உன் அன்பு முகம் மறையவில்லை
என்றும் உன் ஆத்மா சாந்தியடைய
நாம் இறைவனை வேண்டுகின்றோம்.

இன்று (27.06.2010) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஓராண்டு நிறைவு ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர், அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

காளி கோயிலடி,
தாவடி தெற்கு,கொக்குவில்.

உன் மறைவால் கலங்கி நிற்கும்:
[99923] குடும்பத்தினர்.

Education UK
Innovative. Individual. Inspirational.

UKல் உயர் கல்வி
யாழ்பாணம், கொழும்பு, சிலாபம், கண்டி

Bradford College
University Centre




HIGHLY TRUSTED SPONSOR – GOVERNMENT COLLEGE

175 ஆண்டுகளுக்கு மேல் இயங்கி வரும் அரச பாடசாலை. தொழில் துறை சார்ந்த பாடநெறிகலை இன்றைய பொருளாதாரத்திற்கு ஏற்றவாரு கற்பிக்கும் ஒரு நிருவனம். 100க்கும் மேற்பட்ட பாடநெறிகள் சுமார் 23000 மாணவர்கள் கல்விபயிலும் மிகப் பிரமாண்டமான நிறுவனம். சா.த மற்றும் உ.த உடன் விண்ணப்பிக்லாம்.

## Interviews and admissions for Sept. 2010

Mr. Adil Mahmood, பிராந்திய முகாமையாளர் அவர்களால் கீழ் காணும் தினங்களில் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு அனுமதிகள் மற்றும் மாற்றுவழிகள் அறிவுருத்தப்படும். கல்விச்சான்றிதல்களுடன் உடன் வருகை தரவும்.

| | | | |
|---|---|---|---|
| 29th | June | thames head office | 10.00 am to 5.00 pm |
| 30th | June | thames office - Chilaw | 10.00 am to 5.00 pm |
| 1st | July | thames office - Kandy | 10.00 am to 5.00 pm |
| 3rd | July | thames office - Jaffna | 10.00 am to 5.00 pm |
| 4th | July | thames office - Jaffna | 10.00 am to 5.00 pm |

RG

### Programmes Offered

- Business & Management
- Computing & Information Technology
- Hospitality & Catering
- Beauty Therapy & Hair Dressing
- Arts and Media
- Engineering, Technology & Construction
- Law
- Education
- Health and Care
- Marketing
- Sports Science
- Travel & Tourism

மேலதிக விபரங்களுக்கு
072 712 7008

Thames INTERNATIONAL
THAMES INTERNATIONAL
Educational Consultancy (Pvt) Ltd.

Head Office : No 136 B 1/1, High Level Road, Nugegoda. Tel : 011 431 9027
Chilaw : Ebert Silva Estate, Colombo Road, Chilaw. Tel : 032 222 4603
Kandy : No 474/3, Peradeniya Road, Kandy. Tel : 081 222 8849
Jaffna : No 644, Hospital Road, Jaffna. Tel : 021 222 4593
email : info@thameslanka.com Web : www.thameslanka.com

# ஜோர்தான் ஆடைத்தொழிற்சாலையில்
## தமிழ் பெண்களுக்கு வேலைவாய்ப்பு

வயதெல்லை: 18 - 30
முன் அனுபவம் தேவையில்லை

தையற்கலையில் அரிய நுணுக்கங்களை அங்கேயே பழகி உழைக்கலாம்.

ஜூகி மெஷின் ஒப்பரேட்டர் - 50 - US $ 150
(1 US $ = RS. 115)

1. உணவு, தங்குமிடம், வைத்திய வசதி இலவசம்
2. போக்குவரத்து விமானப்பயணச்சீட்டு இலவசம்
3. 3 வருட சேவைக்காலம்
4. பூரண பாதுகாப்பு

தொழிற்சாலை உள்ளேயே விடுதி வசதி

வெளிநாட்டு வேலைவாய்ப்பில் 15 வருடத்திற்கு மேல் அனுபவம் மிக்க ஓரியண்ட் லிங்க் தாபனத்தார் தமிழ் இளம் பெண்களுக்கு பெற்றுக் கொடுக்கும் அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

FLEX Graphic

Orient Link (Pvt) Ltd.
No : 24, Station Road, Wellawatte, Colombo - 06.
Tel : 011 5669566
License No : 1176 App No: AL/1176Advt:/04/10

# விநியோகஸ்தர்கள் தேவை

மிகப்பிரபல்யமான மருந்து வகைகளைக் கொண்ட முன்னணி நிறுவனங்களில் ஒன்றான எமது நிறுவனத்திற்கு கீழே காணப்படும் பிரதேசத்தில் விநியோகஸ்தர் தேவைப்படுகின்றனர்.

## யாழ் மாவட்டம்

தேவைப்படும் தகுதிகளாவன வங்கி உத்தரவாதம் பெற்றுத்தரக்கூடியவராக இருத்தல் வேண்டும். விநியோகத்திற்கான வாகனம் இருத்தல் வேண்டும். இத்துறைக்கான முன்னனுபவம் கட்டாயமில்லை. தெரிவுசெய்யப்பட்ட விநியோகஸ்தருக்கு தவணைக் கடன் வசதி மற்றும் எமது அநுபவம் வாய்ந்த விற்பனை மேம்பாட்டாளர்களின் பக்கபலம் மற்றும் உதவிகள் பெற்றுத்தரப்படும்.

உங்கள் விபரங்களை பின்வரும் முகவரிக்கோ அல்லது தரப்பட்ட இலக்கங்களுடன் உடனடியாக தொடர்பு கொண்டு சந்தர்ப்பத்தினை பெற்றுக்கொள்ளுங்கள்.

0115-335106
0777-723933
0777-311300

THORN PHARMECEUTICALS (PVT) LTD.
70/2, ஆனந்த ராஜகருணா மாவத்தை, கொழும்பு 10.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் உள்ளக்கோவிலின் தூண்டாமணி விளக்கு இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள்



நெஞ்சில் உரமும், நேர்மைத் திறமும், அறிவில் விசாலமும் கொண்டு பீஷ்மாச்சாரியாரைப் போன்று விளங்கியவர் இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள். கவிஞர் திரு.வே.மகாலிங்கசிவம் அவர்களது பேச்சு முறைமையும், சுன்னாகம் குமாரசாமிப்புலவர் அவர்களது சொல்விற்பத்தி முறையையும் நன்கு கையாண்டு பேச்சிலும் எழுத்திலும், கற்பித்தலிலும் தனக்கே ஒரு தனிமுத்திரை பதித்தவர் அவர். மதுரைத் தமிழ்ச் சங்கப் பரீட்சையில் முதலாம் பிரிவிற் சித்தியடைந்து, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் தனது ஆசிரியப் பயிற்சியை முடித்து வரும்வரை அவருக்காகவே, வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலைத் (இன்று வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயம்) தலைமை ஆசிரியர் பதவி காத்திருந்தது. இந்தச் சரீரம் விழுமுன் என் கருத்து நிறைவேறுமோ நிறைவேறாதோ என ஏக்கமுற்றுப் பெருமூச்செறிந்த நாவலர் பெருமானின் மூச்சுக்காற்று மட்டுவில் சின்னத்தம்பியர் மீதும் வள்ளி அம்மையார் மீதும் வானுலகிலிருந்து பட்டிருக்க வேண்டும். அது எப்படிப்பட்டதோ தெரியாது. சைவசமயத்தையும் தமிழ்மொழியையும் வளர்க்க வேண்டுமாயின் கற்றுவல்ல ஆசிரியர்களையும் மத குருமார்களையும் உருவாக்க வேண்டும் என்னும் நாவலர் பெருமானின் எண்ணத்தின் வெளிப்பாடே திருநெல்வேலி சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையாகும். நாவலருக்குப் பின் நமக்கோர் நாவலர் என்று எல்லோராலும் போற்றப்பட்ட இந்துபோட் சு.இராசரத்தினம் அவர்கள் சைவாசிரிய கலாசாலையை ஆரம்பிக்கும் பொழுது அதன் அதிபர் விரிவுரையாளர் ஆகியோரைத் தேடி, ஓடி, அலைந்து திரிந்து கண்டுபிடித்தார். அவ்வாறு அவர் கண்டுபிடித்த அம் மூவரும் அதிபர் மயிலிட்டி டி.சி.சுவாமிநாதன் B.A. உப அதிபர் அளவெட்டி மௌன தவ முனிவர் பொ.கைலாசபதி B.Sc. தமிழ் விரிவுரையாளர் நாவலர் பெருமானின் காவிய பாடசாலை ஈன்றெடுத்த நன்மணி பண்டிதர் திரு. சி.கணபதிப்பிள்ளை ஆகியோராவர்.

நாவலர் பாடசாலையின் அதிபர் பதவியா? சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையின் தமிழ் விரிவுரையாளர் பதவியா? இதில் எது முக்கியம். இக் கேள்விக்கு மாணவர்களாகிய எமது தலைவிதி பதில் அளித்தது. பண்டிதரையா, பண்டிதமணி இலக்கிய கலாநிதி சி.கணபதிப்பிள்ளை நமக்குப் பேராசிரியராகக் கிடைத்தார். கிடைக்கத் தகுமோ ''நற்கேண்மையர்க்கு அல்லால்'' இது திருவருட்பயன் கூற்று. நாம் நற்கேண்மையர் பண்டிதரையாவிடம் கற்கும் பாக்கியம் பெற்றவர்கள்.

பண்டிதமணி அவர்களால் திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலை வளாகத்தில் ஒரு காவியப் பாடசாலை நடத்தப்பட்டது. அது மும்மொழிக் காவிய பாடசாலை. பெரிய திட்டம். தமிழ், வடமொழி, சிங்களம் ஆகிய மும்மொழிகளும் கற்பிக்கப்பட்டன. வடமாகாணம் முழுவதும் பண்டிதர், பாலபண்டிதர், பிரவேச பண்டிதர் உருவாகினர். ஆற்றாமையோடு கல்கி ஆசிரியர் திரு.ரா.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ''தடுக்கி விழுந்தாலும் யாழ்ப்பாணத்தில் ஒரு பண்டிதர் மீதுதான் விழவேண்டு''மெனப் பெருமையோடு, அக் காலத்தில் கூறினார். இதற்கு வித்திட்ட பேரறிவாளன், பேராசான் தமிழ்கூறும் நல்லுலகத்தில் உள்ள ஒவ்வொருவராலும் போற்றி வணங்கப்பட வேண்டியவர் எங்கள் பண்டிதமணி.

**இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களின் பிறந்த தினம் (ஜூன் 27) இன்றாகும். அதனையொட்டி இக் கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.**

27.06.1899 இல் மட்டுவில் பதியில் பிறந்த பண்டிதமணி அவர்கள் 13.3.1986 வரை வாழ்ந்தவர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலகட்டத்தில் தோன்றி இருபதாம் நூற்றாண்டின் பிற்காலம் வரை வாழ்ந்து தமிழ் சைவத்தொண்டு செய்த எங்கள் குருமணி அவர்களது பிறந்த தினம் இன்றாகும். ஐயா அவர்களது நூற்றுப்பதினோராவது பிறந்தநாள் நினைவாக அவர்களால் அங்கதச் சுவையோடு ஆக்கப்பட்ட நவபாரதம் வெளியீடு செய்யப்படுகிறது. கருத்தாழமும் சொல்லோவியமும் நிரம்பிய அவரது படைப்புக்கள் யாவும் நூலுருப் பெறவேண்டுமென்பதே எங்கள் எல்லோரதும் பேரார்வம் ஆகும்.

கற்றாங்கொழுகிய பண்டிதமணி அவர்கள். மாணவர் உள்ளக் கோவிலில் ஏற்றி வைக்கப்பட்ட தூண்டாமணி விளக்காவார். என்றும் அவர் நாமம் வாழி. ***

(பண்டிதை.திருமதி.பொன்.பாக்கியம்,
பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபைத் தலைவர்.)

# அதிகரித்துவரும் திருட்டுக்களால் கதி கலங்கி நிற்கும் யாழ். குடாநாட்டுப் பொதுமக்கள்

'சிரித்து வாழ வேண்டும் பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே; உழைத்து வாழ வேண்டும் பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே' இது எம்.ஜி. ஆரின் திரைப்படத் தத்துவப் பாடல்.

தனி மனிதனின் உழைப்பு அவனது தாய் நாட்டின் உயர்வுக்கு உறுதுணையாக அமைகிறது. எந்தத்தொழிலை எடுத்துக் கொண்டாலும் நீதி நேர்மையுடன் கூடிய கடின உழைப்பே அதனை மேம்படுத் தும் காரணி என்பதை மறுக்க முடியாது.

இந்த வகையில் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் உழைப்பை உன்னதமாகக் கருதுபவர்கள். காட்டிலும் மேட்டிலும், கடலிலும் தரையிலும் உடலை வருத்தி, வியர்வை சிந்தி, செல்வமீட்டுவதில் வல்லவர்கள். வெட்ட வெட்டத் தழைக்கும் வாழை போன்று உழைப்பால் உயர்ந்தவர்கள். தானும் தன் குடும்பமும் அனுபவித்தால் போதும் என்றில்லாது வருங்காலத் தலைமுறைகளுக்கும் பொன், பொருள், பணம், நிலபுலன்களாகச் சேமித்து வைக்கும் பழக்கமுடையவர்கள். இறைவன் ஒவ் வொருவருக்கும் அளந்த அளவு அவர வர்க்கே உரித்தானது.

ஆனால் அண்மைக்காலங்களில் உழைக்காது உண்டி வளர்க்கும் மனப் பாங்கு சிலரிடையே நிலவி வருகின்றது. 'உழைக்காதவன் உண்ணத் தகுதியற்றவன்' இது பைபிள் வாசகம். தாம் சுலபமாக வாழ பிறர் சொத்தை அபகரிக்கும் திருட்டுத்தனம் தற்காலத்தில் மேலோங்கி வருகிறது.

பிள்ளைகளின் வாழ்வை வளப்படுத்தவும், இல்லிடங்களை அமைத்து சமூகத்தில் கௌரவத்துடன் வாழவும் தம்மை ஒறுத்து சிறுகச் சிறுகச் சேமித்த பணம், நகைகளை அபகரித்துச் செல்லும் அடாவடி நாடகங்கள் நிறையவே அண்மைக் காலமாக அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. பிறர் உழைப்பில் வாழும் சமுதாயம் ஒன்று உருவாகியுள்ளது.

கொலை செய்து விட்டு அகப்படுபவற்றைக் கூண்டோடு அள்ளிச் செல்வது, வீடுகளில் புகுந்து பலாத்காரமாக அபகரித்துச் செல்வது, கண்முன்னே பாதைகளில் பயணிப்போர் அணிந்திருக்கும் நகைகளை அபகரித்துக் கொண்டோடுவது. ஆலயத் திருவிழாக்களின்போது வழிபடுவோர் அணிந்து வரும் ஆபரணங்களை அறுத்துச் செல்வது எனப் பலரூபங்களில் திருடர்களின் கைவரிசை தொடர்கிறது.

திருடர்கள் குழுக்களாகவும் தனியாகவும் பெண்கள், சிறுவர் எனப் பல தினுசுகளில் உலாவுவதாகக் கூறப்படுகிறது. உள்ளூர் வெளியூர் திருடர்கள் கூட்டுச் சேர்ந்துவாள், கத்தி போன்ற கூரிய ஆயுதங்கள், போலியோ, நிஜமோ எனத் தெரியாத துப்பாக்கிகளைக் கூடப் பயன்படுத்துகிறார்கள்.

சில திருடர்கள் அன்றாடத் தேவைகளுக்காகச் சேதமடைந்த ஆள்களற்ற வீடுகளின் கதவு, நிலை, ஜன்னல், மரங்கள் மற்றும் தேங்காய், விளையாட்டுப் பொருள்கள், தட்டு முட்டுச் சாமான்களில் கண்ணாயிருந்து கவர்ந்து செல்கிறார்கள். காணாது விட்டால் களவு; கண்டு கொண்டால் 'கொண்டுவந்து தரத்தான் எடுத்தனான் அதுக்கிடையில்.....' என ஒரு மழுப்பல். இவர்கள் ஒரு ரகம்.

திருட்டுத் தொழிலென்றால் இப்படித்தான் செய்யவேண்டும். எடுத்தாலும் பெறுமதியாக எடுக்கவேண்டும் என்பது போல பணம், தங்க நகைகள், பெறுமதி மிக்க சொத்துக்களைச் சூறையாடி விற்று, கிடைத்த பணத்தை உண்டு, குடித்து ஏப்பம் விடுபவர் இன்னொரு ரகம்.

பத்திரிகைகளைப் புரட்டினால் தினமும் எங்காவது திருட்டு, கொள்ளை, வழிப்பறி, பணத்துக்காகக் கொலை போன்ற செய்திகள் இடம்பிடிக்கின்றன.

அண்மையில் வடமராட்சி மற்றும் வவுனியாப் பகுதிகளில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்கள் பணத்துக்காக மனித உயிர்களைப் போக்கும் அளவுக்கு ஈவு இரக்கமற்ற செயற்பாடுகள் சமூகங்கள் மத்தியில் வளர்ந்து வருவதை நிரூபிக்கின்றன.

பணம் பத்தும் செய்யும் என்பார்கள். இங்கே பணத்துக்காக எதனையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள்.

வீட்டில் உள்ளவர்களின் அன்றாட நிகழ்ச்சி நிரல்களைத் துல்லியமாகத் தொடர்ந்து அவதானிக்கும் உள்ளூர், வெளியூர் கூட்டுத் திருடர்கள் தருணம் பார்த்துக் கன கச்சிதமாகத் தமது காரியத்தை நிறைவேற்றிக் கொள்கின்றனர். இவர்கள் சமூகத்தில் சாதாரண மக்களைப் போல் நடமாடிவருகின்றனர்.

அலிபாபாவும் நாற்பது திருடர்களும் கதையைக் கேட்டும் திரைப்படங்களில் பார்த்தும் இருக்கிறோம். எமது மக்கள் இவர்களது 'டம்மிகளின்' பாதகச் செயல்களை நேரில் அனுபவித்து வருகிறார்கள். இத்தனை துணிகரமாகத் திருட உடலில் தெம்பு இருப்பவர்கள் உழைத்து உண்ணலாமே? தேனீக்கள் போல் கஷ்டப்பட்டு வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி சேர்த்தவற்றைச் சுளையாக அள்ளிச் செல்வது எந்த வகையில் நியாயமாகும்? தடுக்க வேண்டியவர்கள் இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள்? என்று ஆத்திரத்துடன் கேள்வி எழுப்பினார் பாதிக்கப்பட்ட ஒருவர்.

பல குடும்பங்கள் தமது பிள்ளைகளின் திருமணத்திற்கு, தொழில்துறைகளை ஆரம்பிக்க மற்றும் அத்தியாவசியத் தேவை களுக்கு எனச் சேர்த்துவைத்த, கடனாகப் பெற்ற பணம், நகைகளைப் பறிகொடுத்து கண்ணீரும், கம்பலையுமாக வாழ்ந்து வருகின்றனர்.

வீதிகளில், பொது இடங்களில், வைத்தியசாலைகளில் பொது மக்கள் அணிந்து செல்லும் நகை, பணம் போன்றவையும் திருடர்களின் கண்களில் இருந்து தப்பிய பாடில்லை. கொழும்புப் பாணியைப்பின் பற்றி 'லபக்' என அப்பிக் கொள்கிறார்கள்.

சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பயன்படுத்தி, சாதுரியமாகப் பேச்சுக் கொடுத்து நம்பவைத்துக் காரியத்தை முடிக்கும் கில்லாடிப் பேர்வழிகள் திருட்டு எண்ணங்களுடன் உலாவி வருகிறார்கள்.

உள்ளூர் திருடர்கள், ஏமாற்றுக்காரர்களின் தொல்லை இவ்வாறிருக்கத் தென்னிலங்கையில் இருந்து வருபவர்கள் சிலரும் தாமும் இவர்களுக் குச் சிறிதும் சளைத்தவர்கள் அல்ல என்ற விதத்தில் சமஜோசிதமாகப் பணத்தைச் சுருட்டிக்கொண்டு தலைமறைவாகி விடுகின்றனர்.

சாவகச்சேரியில் நகைக்கடையொன்றில் தென்னிலங்கையைச் சேர்ந்த யுவதிகள் தங்க நகை வாங்குவதாக நடித்துச் சிறிய மோதிரத்தை வைத்து விட்டுப் பெரிய மோதிரத்தை எடுத்துச் சென்று மாட்டிக் கொண்ட சம்பவ மொன்றை இதற்கு உதாரணமாகக் கூற இயலும். வீட்டில் வைத்து வந்தால் பாதுகாப்பில்லை என்பதால் ஆலயங்களுக்கு வரும்போது நகைகளை அணிந்து வந்தால் அங்கேயும் பெண், ஆண் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி விடுகிறார்கள்.

தெய்வதரிசனம் காண மெய்மறந்து நிற்கும் பக்தர்களிடம் 'தங்க தரிசனம்' பெற்றுச் செல்கிறார்கள் திருடவென்று வரும் போலிப் பக்தர்கள்.

பயணங்களின் போது நட்புறவை ஏற்படுத்திக்கொண்டு அதனைச் சாதகமாக்கி வீடுகளில் தங்கிச் செல்லும்போது வந்த வெள்ளம் இருந்த வெள்ளத்தையும் அடித்துச் செல்வது போல் இடம்பார்த்து மடம் கட்டிச்செல் லும் அநாமதேய திருடர்கள் தனிரகம்.

சீதனப் பணப் பரிமாற்றங்கள், வங்கிகளில் பணம் எடுக்கும் சந்தர்ப்பங்களை உன்னிப்பாக அவதானித்து தமது கைவரிசையைக் காட்டும் 'பலே' கில்லாடிகளும் இருக்கிறார்கள்.

"குறுக்கு வழியில் வாழ்வு தேடிவரும்
திருட்டு உலகமடா - தம்பி
கொள்ளையடிப்பதில்
வல்லமைகாட்டும் முரட்டு உலகமடா -
தம்பி தெரிஞ்சு நடந்துகொள்ளடா
இதயம் திருந்த மருந்து சொல்லடா....''
என்றுதான் பாடத் தோன்றுகிறது.

இரவுவேளையில் நாய்கள் குரைத்தால் பயம், வாகனம் வந்தால் ஏக்கம், எங்களுக்கோ இல்லைத் தூக்கம். யாருக்குத் தெரியும் எமது தாக்கம். எப்போது தீரும் எம் துக்கம்? என எண்ணத் தோன்றுகிறது.

அண்மையில் மானிப்பாய் பொலிஸார் துண்டுப் பிரசுரம் மூலம் திருட்டுச் சம்பவங்களைத் தடுக்கும் அறிவுறுத்தலை வெளியிட்டமை வரவேற்கத் தக்கதாகும்.

''யுத்தசூழல் முடிவுற்ற நிலையில் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன. நீங்கள் வெளியில் செல்லும்போது உங்களது வீட்டை உரிய முறையில் பூட்டி விட்டுச் செல்கிறீர்களா? என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். வீட்டில் எந்நேரமும் ஒருவர் இருப்பது நல்லது. வாகனங்களைத் தரிப்பிடங்களில் விட்டுப் பூட்டிவிட்டே உங்களது அலுவல்களைக் கவனிக்கச் செல்லுங்கள். நகைகளுடன் சனப் புழக்கம் அற்ற பகுதிகளுக்குச் செல்வதைத் தவிர்க்கவும்'' என்று அந்தத் துண்டுப் பிரசுரமூலம் பொது மக்களுக்குப் பொலிஸார் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

கிராமங்கள் தோறும் விழிப்புக்குழுக்கள் அமைத்துப் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் இறுக்கமான காவல்முறைகளை உருவாக்கித் திருட்டைத் தடுக்க வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

திருட்டுக்களில் ஈடுபடுவோர் தாமும் சமூகத்தில் மதிப்புடன் வாழவேண்டும். திருடுவது நியாயமற்ற செயற்பாடு என்பதை உணர்ந்து சுயதொழில்களை மேற்கொண்டு கௌரவத்துடன் வாழ முன்வரவேண்டும்.

**''திட்டம் போட்டுத் திருடிற கூட்டம் திருடிக் கொண்டே இருக்குது. சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டே இருக்குது. திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது''** என்பது அர்த்தம் பொதிந்த சினிமாப்பாடல் வரிகளாகும்.

சுதந்திரம் என்பது கழுத்து நிறைந்த நகையுடன் நள்ளிரவில் ஒரு பெண் தனிமையில் வெளியே சென்று எவ்வித பாதிப்பும் இன்றித் தனது இருப்பிடத்துக்குத் திரும்பிவந்து சேரும் நிலையாகும். இதை நான் சொல்லவில்லை. மகாத்மா காந்தி கூறிய கருத்து இது. *

ராஜகுரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்ட கைத்தொழில் அபிவிருத்திச் சபையில் தொழில் முயற்சி ஊக்குவிப்பு முகாமையாளராக கடமையாற்றி பின் வவுனியா மாவட்ட கைத்தொழில் அபிவிருத்திச் சபையில் பதில் பிரதிப் பணிப்பாளராக கடமையாற்றும் கா.சசிகரனின் அன்புத் தந்தை

### சிவக்கொழுந்து காசிநாதன்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள்,
கைத்தொழில் அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்.

## நில்கமல் இப்போது வன்னியில்!

Nilkamal®

### உறுதிமிகு பிளாஸ்ரிக் தளபாடங்கள்!!

★ கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள ஒவ்வொரு பட்டினத்திலும் வியாபாரிகள் தேவை.

★ க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியெய்திய துடிப்பான இளம் விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. தகைமை உடையவர்கள் நேர்முகப் பரீட்சைக்காக 30.06.2010 புதன்கிழமை பி.ப. 2மணிக்கு வருக.

ஏகவிநியோகஸ்தர்கள்:
எஸ்.வி.ஆர். என்ரர்பிறைசஸ்.
கண்டி வீதி, கிளிநொச்சி.
விபரங்களுக்கு:
0777705963, 0771728348.

## Airglobal International (Pvt) Ltd Travels & Tours




Air Ticketing
Re Confirmation
Travel Insurance
All kinds of VISA
Embassy Letter

North Link Engineering (Pvt) Ltd.
360/3, Main Street,
Jaffna.
Tel:021 222 1838

18, MayField Lane,
Kotahena,
Colombo-13.
Tel:0112320648

HOT LINE
0777573912
0777222171

உங்களை உணருங்கள் "ஜெய்குருதேவ்" அன்பில் மலருங்கள்



## ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

THE ART OF LIVING

அவர்களின்

### வாழும் கலை பயிற்சி

உலகில் 182 நாடுகளுக்கு மேல் வெற்றிகரமாக பயிற்றப்படும் வாழும் கலைப் பயிற்சி மீண்டும் நமது இடத்தில் ஆரம்பமாகிறது.

★ சுதர்சனக்கிரியா, மூச்சுப்பயிற்சி, தியானம், எளியயோகா ஆகியவை உள்ளடக்கிய அற்புதமான பயிற்சி

★ ஞாபகசக்தி அதிகரிக்க
★ நிகழ்காலத்தில் வாழ
★ மனதை ஒரு நிலைப்படுத்த
★ வேலைகளில் முழுக்கவனம் செலுத்த
★ ஆஸ்மா, இரத்தக்கொதிப்பு, நீரிழிவு நோய்களில் இருந்து விடுபட

இதில் கலந்துகொண்டு பயன்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

### அறிமுக உரை

இடம்: ஸ்ரீ சிவகுருநாதர் குருபீடம் (வேதாந்தமடம்),யாழ்.பல்கலைக்கழக முன்வீதி.
காலம்: 28.06.2010 (திங்கட்கிழமை)
நேரம்: மாலை 5.15 மணிக்கு
பயிற்சி நாள்கள்: 29.06.2010 செவ்வாய்க்கிழமை முதல் 04.07.2010 ஞாயிற்றுக்கிழமை வரை

வாழும் கலைக்குடும்பம்
T.P: 0770474757, 0777740953
(99965)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி தர்மராஜா



ஆனைக்கோட்டை, ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தர்மராஜா 20.06.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-பவளம் தம்பதியரின் அன்பு மகனும் இராசையா, பூமணி, நேசமணி, யோகராணி, விக்கினேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும் காலஞ்சென்றவர்களான அப்பையா, விமலாதேவி காலஞ்சென்றவரான மகாலிங்கம் (மாநகரசபை) மற்றும் நாகேஸ்வரன், ரவி (பிரான்ஸ்), ஜெயம் (கொலன்ட்), சுரேஸ் (பிரான்ஸ்), அஜயந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-நல்லபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் மல்லிகாதேவியின் அன்புக் கணவரும் செம்பவளம் (லண்டன்), துளசி (பிரான்ஸ்), பூமகள் (இலங்கை), யசோதரன் (பிரான்ஸ்), ரகுநாதன் (லண்டன்) ஆகியோ ரின் அன்புத் தந்தையும் கருணாகரன் (லண்டன்), டனிஸ் (பிரான்ஸ்), ரசிதரன் (பிரான்ஸ்), பிரவீனா ஆகியோரின் அன்பு மாமனும் நிசானி, டிலக்சன், துவாரகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் நாகமணி, மகேஸ்வரி, சரேஸ்மேற்றின், நாகபூசனி, குணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழையவீதி,
ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.
(சி/568686)

தகவல்:
குடும்பத்தினர்.

### சிறுவர் கண்காணிப்புக்குழு கூட்டம் புதனன்று

மூளாய், ஜூன் 27

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவிற்கான சிறுவர் கண்காணிப்புக் குழுவின் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் சிறுவர் உரிமைகள் தொடர்பான விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

(50-99)

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினம் பரமேஸ்வரி



காரைநகர், சத்திரந்தை, களபூமியைப் பிறப்பிடமாகவும் வாரிவளவை வதிவிடமாகவும் நெல்லியடியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் பரமேஸ்வரி 24.06.2010 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் வேலுப்பிள்ளை இரத்தினத்தின் (முன்னாள் வர்த்தகர், பதுளை விநாயகர் ஸ்ரோர்ஸ், இரட்ணம் ரெக்ஸ்ரைல்ஸ், நெல்லியடி) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பாலத்துறை கந்தையா-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் வேலுப்பிள்ளை-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சின்னத்துரை, தங்கம்மா, நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கணேசலிங்கம், சுந்தரலிங்கம் (ரட்ணம் ரெக்ஸ்ரைல், நெல்லியடி), தியாகலிங்கம், சறோஜினிதேவி, விஜயலிங்கம் யோகேஸ்வரி (ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும் பூங்குலரூபி, சிவனேஸ்வரி, புஸ்பராணி, தருமலிங்கம் (பிள்ளையார் ஸ்ரோர்ஸ், மல்லாவி), துஷியந்தி, கேதீஸ்வரன் (ஆசிரியர், பரிசுத்த திரித்துவக் கல்லூரி, நுவரெலியா) ஆகியோரின் அன்பு மாமியும் கணதீபன், குமரன், கஜலக்சன், மயூரன், ஆரதி, அகீசன், அனுசுயன், அருந்தசா, தனுசிகா, வித்தியா, வினோகரன், பிரணவன், சாதனா, ஸ்ரீநாராயணி, அபிராமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு காரைநகர் வாரிவளவு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வாரிவளவு, காரைநகர்.
தொ.பே: 0776170750
(99905)

தகவல்:
குடும்பத்தினர்.

## பழைய புத்தகங்கள் கொள்வனவு

பாலகுமார், ரமணிச்சந்திரன், லக்ஷ்மி ஆகியோரின் நாவல்கள் கொள்வனவு செய்யப்படும்.

தொடர்பு: 0777206598

## விற்பனைக்கு

மானிப்பாய் வீதி, தாவடியில் புதிய மேல்மாடி வீட்டுக்கடை விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: பொ.இரத்தினசிங்கம்,
மானிப்பாய் வீதி, தாவடி வடக்கு.

## காணி விற்பனைக்கு

யாழ் நகரில் இருந்து 3 km தூரத்தில் யாழ். பல்கலைக்கழக சூழலில் கொக்குவில் கிழக்கு கோயில் வீதியில் 2 பரப்பு தனிக் காணி நன்னீர் கிணறு மற்றும் இதர வளங்களுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0776641076
0214921315

## Full Time English

ஆங்கிலத்தில் புலமை பெற விரும்புவோருக்கான அரியவாய்ப்பு
ஆங்கிலத்தில் தேர்ச்சியடைவது நிச்சயம்
பாடசாலை கல்வி முடித்தோர், பல்கலைக்கழகமாணவர்கள், தனியார்,
அரசசார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிய விரும்புவோர் வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு.
A/L பரீட்சை எழுதவிருப்போருக்கு பரீட்சைக்கு பின்னரான வகுப்புக்களுக்கு இன்று முதல் பதிவுகள் ஆரம்பம்
3 மாத கால முழுநேர பயிற்சி முற்றிலும் மாறுபட்ட புதிய இலகு முறைகளில்
ஒவ்வொரு மாணவர் மீதும் தனிப்பட்ட கவனிப்புக்காகமட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள். தெளிவான பயிற்சிகள்.
யாழ் மண்ணிலும்,இலங்கையின் பிற பாகங்களிலும் பிரசித்தி பெற்ற ஆசிரியர்கள்,விரிவுரையாளர்கள்.
வேலைக்கு செல்வோருக்கான பிரத்தியேக வகுப்புக்கள்.. அமைதியான இடத்தில் பாதுகாப்பான கல்வி
எம்மிடம் படித்து புலமை பெற்ற மாணவர்களே இதற்கு சான்று.

AUTHORIZED TOEFL IBT CENTER
IELTS Training Center

21500/=

4 மட்டங்கள் 3 மாதங்கள்

| Certificate (L1) | Adv. Cert (L2) | Diploma (L3) |
|---|---|---|
| 1. Basic Speach<br>2. Reading<br>3. Basic Grammar<br>4. Elocution for Adults | 1. Social Dialogs<br>2. Newspaper Readings<br>3. Field Trips<br>4. Debates | 1. Free Speech<br>2. Extended Vocab<br>3. Drama<br>4. I.E.L.T.S.Speaking |

| Courses | Time | Days | Start Date | Duration |
|---|---|---|---|---|
| Foundation | 9.00-2.00 | Mon-Fri | July 6th & July 15th | 1 Month |
| Levals 1,2&3 | 9.00-2.00 | Mon-Fri | July 6th & July 15th | 2 Month |

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி! பதிவுகளுக்கு முந்துங்கள்!!

## Study Abroad

UK, CANADA, SINGAPORE

*A-Grade Colleges & Universities
*Part Time *Lowest Cost



*Accounting
*Economics
*Managements
*Banking & Finance
*Hospitality & Management
*Nursing
*Computer Engineering
*Graphic Design & Advertising
*Business Administration (MBA)
*Aircraft Engineering
*Construction/ Civil Engineering
*Pilot Training
* சிங்கப்பூர், கனடா, மலேசியா, லண்டன், அவுஸ்ரேலியாபோன்ற நாடுகளில் பிரசித்தி பெற்ற கல்லூரிகள், பல்கலைக்கழகங்களுக்கான அனுமதிகள்
* நம்பகமிக்க சேவைகள்.
* மிகக்குறைந்த சேவைக்கட்டணம்.
* உறுதிமிக்க ஆலோசனைகள்.

## EUROPEAN COLLEGE

Jaffna Branch
Alladi junction, Jaffna Road, Manipay.
EUROPEN COLLEGE Tel: 077 7033 039

KANDY
344, Good Shed Road
Kandy.

TRINCOMALLE
243,Courts Road,
Trincomalle.

Colombo
193, Maya Avenue,
Kirulapone,

## மணமகள் தேவை

யாழ் இந்து 37 வயது, 5'6'' உயரம் ரேவதி 4ஆம் பாதம், கிரகபாதம் 6¼, லண்டன் PR உள்ள மணமகனுக்கு 34 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை.

தொடர்பு
077 4055507

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷக்களின் நிர்வாகத்தின்கீழ் இனச்சிக்கலுக்கு அரசியல் தீர்வு அரிதிலும் அரிது!

**இலங்கை ஜனாதிபதியின் குடும்ப நிர்வாகமும் அதனோடு பின்னிப் பிணைந்துள்ள சிங்களப் பேரினவாதமும், அதன் ஏகபோகமும் தமிழ் இனத்தவர்களுக்குச் சுமுகமான அரசியல் தீர்வொன்றுக்கு இடமளிக்கக் கூடியனவா என்ற கோணத்தில் ஆராய்கிறது இக்கட்டுரை.**

**திசரண குணசேகரவின் மூலக் கருத்துகளைத் தொகுத்து வழங்குகிறார் ஷேமந்த ரணவீர.**

**'ராவய' பத்திரிகையில் கடந்த மாதம் வெளியான அக்கட்டுரையின் தமிழ் வடிவம் இது.**

## தமிழ் மக்களின் மனங்களை வெல்வதைவிட வடக்கு, கிழக்கை சிங்களப் பூர்வீக பூமி என்று நிறுவும் முயற்சியில் அரசு

தனியான இராச்சியமொன்றை வென்றெடுப்பது தொடர்பாக விடுதலைப் புலிகள் புதிய இராணுவப் பிரிவொன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதால், அவசரகாலச் சட்ட விதிகளைத் தொடர்ந்தும் அமுல் படுத்தவேண்டியுள்ளது என பிரதமர் டி.எம்.ஜயரத்ன கருத்து வெளியிட்டுள்ளார்.

ஈழ யுத்தம் ஆரம்பமாவதற்குத் தூண்டுதல் வழங்கிய ஏதுக் களைக் கண்டறிவதற்கு நிபுணர் குழுவொன்று நியமிக்கப்படும் என அண்மைய திம்புச் சந்திப்பில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தியப் பிரதமருக்கு வாக்குறுதி வழங்கியிருந்தார்.

இதற்கு முன்னர் இவ்விதம் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் பலவும் தூக்கி வீசப்பட்டிருக்கும் நிலையிலும்கூட இந்தியா இந்த வாக்குறுதியை காத்திரமான ஒன்றாகக் கருதி ஏற்றுக்கொள்ளக் கூடுமா என்பதும் கேள்விக்குரி யதே.

எவ்வாறானபோதிலும், யுத்தத்தின் பின்னர் அதிகாரப்பகிர்வு அடிப்படையிலான அரசியல் தீர்வொன்றை வழங்குமாறு இலங்கையை நெட்டித் தள்ளுவது தொடர்பாகப் புதுடில்லியினால் இலங்கை அரசுக்குக் குறைந்த அழுத்தத்தையே விடுக்க முடிந்துள்ளது.

சீனா அல்லது பாகிஸ்தானுடனான இலங்கை யின் நெருக்கம் காரணமாகத் தயக்கம் காட்டி நின்ற அந்த இயலாத்தனங்களின் மத்தியில் ஜனாதிபதி மஹிந்தவின் இந்த வாக்குறுதியானது இந்தியாவுக்குப் பெறுமதிமிக்க ஒன்றாகிறது.

மஹிந்த ராஜபக்ஷவின் இந்த வாக்குறுதி குறித்து இந்திய ஊடகங்கள் இயன்றளவுக்குப் பிரசாரப்படுத்திய போதிலும், இலங்கையின் அரசசார்பு ஊடகங்கள் அதுபற்றி அலட்டிக்கொள்ள வில்லை. அதிலிருந்தே இதன் தன்மை எத்தகையதென்பது புரிகிறது.

எவ்வாறானாலும், கமிட்டிகள், ஆணைக்குழுக்கள், சபைகளை நியமித்தல் என்பன மற்றும் பிரச் சினைகளை வெட்டி ஆடுவது என்பன ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குக் கைவந்த கலை யேயாகும்.

கடந்தகால கட்டமொன்றில் சர்வதேச தரம் கொண்ட சுதந்திரமாக இயங்கும் நிபுணர் குழுவொன்று நியமனம் செய் யப்பட்டதும்கூட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இந்தியா மற்றும் சர்வதேச ரீதியில் எழுந்த அழுத்தங்களின் காரணமானதே என்பதை இங்கு சுட்டிக்காட்ட முடியும்.

அவர்களது தொந்தரவு சற்றுக் குறைவடைந்ததும் ராஜபக் ஷவின் சிஷ்ய கோடிகள் அந்த நிபுணர் குழுவைக் கடுமையாக விமர்சிக்கத் தொடங்கினர். அடிமேல் அடி அடித்தனர். அது நிறுவப்பட்டதற்கான காரணிகள் எவையும் நிறைவு செய்யப் படாமலேயே அந்த நிபுணர் குழு அஸ்தமித்துப் போனது.

அனைத்துக் கட்சி மாநாட்டுக் குழுவும் மங்கி மாண்டுபோனமை இதற்கு மற்றுமொரு உதாரணமாகும். தமது கருமம் முடிந்ததும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதை ஒருபுறம் ஓரம்கட்டிவிட்டார். அந்த வகையில், பிரச்சினை களிலிருந்து நழுவிச் செல்வதில் மஹிந்த ராஜபக்ஷ அசகாய சூரராவார். தேர்தலோடு சம்பந்தப்பட்ட நாவலப்பிட்டி சம்பவத்தில் அவர் செயற்பட்ட விதமானது விலாங்கைப் போன்று நழுவிச் செல்லும் அவரது கொள்கையை சிறப்பாகப் புலப்படுத்தியிருந்தது.

நிஜத்தில் நாவலப்பிட்டி தேர்தல் செயற்பாடுகள் ஊழலும், பயங்கரமும் மலிந்தனவாகவே இருந்தன. ஜனாதிபதிக்குத் துதிபாடி நிற்கும் ஒருவரே இவையனைத்துக்கும் காரணகர்த்தாவாகியிருந்தார். தேர்தல் ஆணையாளரால் அப்பிரதேசத்தின் தேர்தல் செயற்பாடுகள் இடைநிறுத் தப்பட்டமையையடுத்து, அங்கு நிகழ்ந்தவற்றை நிராகரிக்க இயலாது போனது.

இதுதொடர்பாக ஜனாதிபதி கடுமையாகச் செயற்பட்டார் என்பதை வெளிப்படுத்த ஊடகங்கள் பயன்படுத் திக்கொள்ளப்பட்டன. இது சம்பந்தமாக விசாரிப்பதற்கு நீதியாளர் சபையொன்று நியமனம் செய்யப்பட்டதன் மூலமாக அது மேலும் ஏற்கச் செய்யப்பட்டது. தந்திரமும் பலித்தது.

நீதியரசர் ஆயம் குற்றவாளியை இனங்காட்டும் என்பதாகவும், ஜனாதிபதி அவருக்கு அமைச்சுப் பொறுப்பொன்றை வழங்காதிருப் பதன் மூலம் அவருக்குத் தண் டனை வழங்கக்கூடும் என்பதுமே பெரும்பாலானோரின் எதிர்பார்ப்பா கியிருந்தது.

மேற்படி விவகாரத்தின் சூடு சற்றுத் தணிந்ததும் நீதி ஆயம் சம்பந்தப்பட்டவர் குற்றவாளியல்லர் என்பதாகத் தீர்ப்பளித்தது. அவ்வாறெனில், நாவலப்பிட்டியில் தேர்தல் பயங்கரத்தை நிகழ்த்தியது ஊர் பேர் தெரியாத ஒரு மாயாவியா?

அது எவ்வாறான போதிலும் அடாவடித்தனங்களைப் புரிந்த நபர் பிரதியமைச்சர் என்ற வரப் பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டார். அவரது ஊழல் செயற்பாடுகளை வெளிச்சம் போட்டுக் காட்டிய மாவட்டத் தலைவரோ பதவி இழப்பின் மூலம் தண்ட னைக்குள்ளானார்.

அந்தவகையில், ஜனாதிபதிக்கு நெருக்கமானவரது தவறுகளைச் சுட்டிக்காட்டிய சரத் அமுனுகமவுக்கு ஏற்பட்ட கதியானது, தமது சுதந்திரத்தையும் ஆத்ம கௌரவத்தையும் பேண முற்படும் கூட்டணி அரசியல்வாதிகளுக்கு நல்லதொரு பாடமாகும். முதுகெலும்பு அற்றவர்கள் மட்டுமே ராஜபக்ஷ நிர்வாகத்தினுள் செயற்பட முடியுமென்ப தையே அது உணர்த்தி நிற்கிறது.

இந்திய ஊடகங்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதிய வாக்குறுதி பற்றிய எதிர்பார்ப்புகளோடு இருக்கையில், அபிவிருத்தியின் சாதகமான பலாபலன்களை மக்கள் பெறக்கூடியதான மக்கள் மன்றங்கள் என்ற முறைமை கொண்டு வரப்பட விருக்கும் தகவலை, 'திவயின' வார இதழ் (மே 02 ஆம் திகதி) தனது முதற்பக்கத் தில் வழங்கியிருந்தது.

அதற்கமைய ஒவ்வொரு கிராம உத்தி யோகத்தர் பிரிவிலும் மக்கள் மன்றமொன்று நிறுவப்படுவதோடு, நாடு முழுவதிலுமாக அவ்விதமான 14 ஆயிரத்து 800 'மக்கள் மன்றங்கள்' அமைகின்றன. அந்த மன்றத்தின் செயலாளர் பதவியில் பட்டதாரியொ ருவர் நியமிக்கப்படுவதன் மூலம் அது வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளுக்குப் பரிகாரமாகவும் அமைகிறது.

அதிகாரத்தை இவ்விதமாகப் பரவலாக்குவதன் மூலம் 'மஹிந்த சிந்தனை'யின் சித்தாந்தங்களை மக்களுக்கு நெருக்கமாக்கிவிட முடியுமென அரசு நம்புகிறது. அந்தவகையில், மக்கள் மன்றங்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படும்போது வேறு அதிகாரப்பகிர்வொன்று அவசியப்படமாட்டாது என்பதும் இதன் மூலம் மக்களுக்குத் தேவை யான பொருளாதாரப் பலமும் கிட்டும் என்பதும் இதன் அர்த்தமாகும்.

அது ஒரு புறமிருக்க, இந்தியத் தலைமைக்கு வழங்கிய வாக்குறுதியில் சிரத்தை காட்டி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நிபுணர் குழுவொன்றை நியமித்தாலும்கூட அது, டில்லியைத் திருப்திப்படுத்திவிடுவதற்கும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீளப் பெறுவதற்குமான கபட நாடக மொன்றேயாகும். அதன் மூலம் தமிழ் மக்களுக்கு உண்மையான எந்தவொரு நிவாரணமும் கிட்டாது போகக்கூடும்.

மேற்படி குழுவை நியமிக்கும் பலவான் ஜனாதிபதியாவார் என்னும் போது, இனப் பிரச்சினையொன்று இந்நாட்டில் இல்லை எனக் கூறுவோரே அக் குழுவில் முழுமையாக இடம்பெறக் கூடும். அது, அனைத்துக் கட்சி களின் கருமமாக மாற்றமடையுமானால், கூட்டணியின் பிரதிநிதிகள் அக்கருமத்தை இழுத்தடித்துத் தாமதப்படுத்திவிடவோ, அதை வேறு திசையில் திருப்பி விடுவதற்கோ செயற்படக்கூடும்.

சிலவேளை, அதனூடாக வெற்றி கரமான தீர்ப்பொன்று முன்வைக்கப்பட்டாலும்கூட அனைத் துக் கட்சி நிபுணர் குழுவினால் முன்வைக்கப்பட்ட நியாயமான முற்போக்கான யோசனைகளைக்கூட நிராகரித்தது போன்று ஜனாதிபதி அதை நிராகரிக்கவும் கூடும்.

நாட்டில் கொண்டுசெல்லப்படும் குடும்ப நிர்வாகத்துக்கும் மற்றும் சிங்களப் பேரினவாதத்துக்குமிடையில் பின்னிப்பிணைந்த உறவு நிலவுவதால், ராஜபக்ஷாக்களின் நிர்வாகத்தின் கீழ் அதிகாரப்பரவலாக்கம் என்ற விடயத்தை எதிர்பார்க்க இயலாது.

ராஜப்க்ஷாக்களுக்கு நாட்டுப்பற்றின் ஊடாக இந்தளவுக்கு அதிகாரபலம் கிட்டியுள்ளமைக்கு இந்தச் சிங்கள ஏகபோக மேலாதிக்கவாதமே காரணமா கும். ராஜபக்ஷாக்களுடன் ஒட்டிக் கொண்டு உறவாடி வருவதால் இந்தச் சிங்களக் கடும் போக்காளர்கள் 1956 இல் தாம் இருந்ததைவிடவும் பலம் பெற்று நிற்கின்றனர்.

இந்தத் தேசப்பற்று என்ற பாதுகாப்புக் கேடயம் இன்றி ராஜ பக்ஷ குடும்பத்துக்கு நாட்டின் நிர்வாகத்தைக் கொண்டு செல்ல வேண்டி நேருமானால், தென்பகுதி மக்களின் கடும் வெறுப்புக்கு அவர்கள் உள்ளாகக்கூடும்.

மேலும் இந்தளவுக்கு அவர்களுக்குப் பலம் கிட்டியுள்ளமைக்கு விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தம் புரிந்து வெற்றிகொண்டமை மட்டுமே காரணமல்ல. தமிழர் கள் சம்பந்தப்படும் இனப்பிரச்சினையென்று எதுவுமே இந்நாட்டில் இல்லையெனக் கூறி அந்த யுத்தத்தை முடித்ததே அதற்குக் காரணமாகிறது.

எனவே, ராஜபக்ஷாக்களால் சிங்கள மேலாதிக்கவாதத்தை தோற்கடித்துவிட இயலாது என்பதோடு, இந்தச் சிங்கள மேலாதிக்கவாதிகளால் ராஜபக்ஷாக் களை மேவிச்சென்றுவிட முடியும். அதற்கமைய, பரவலாக்கல் ஊடான அரசியல் தீர்வொன்று வழங்கப் படுவதை ராஜபக்ஷாக்களின் அரசொன்றிடமிருந்து எதிர்பார்க்க இயலாது போகலாம்.

வேறு எந்தவொரு தரப்புடனும் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதற்கு அவர்கள் ஒருபோதும் விரும்பாததால், ராஜபக்ஷாக்களால் அதிகாரப்பகிர் வொன்றை மேற்கொள்ள முடியாது போகக்கூடும் புதிய அமைச்சரவையைக் கவனத்தில் கொள்ளும்போதும்கூட அனைத்து அதிகாரங்களையும் தமது குடும்ப வட்டத்துக்குள் தக்க வைத்துக்கொள்ளும் எத்தனமே அங்கு தெளிவாகத் தெரிகிறது.

அந்தவகையில், எழுபத்து ஏழு (77) அரச நிறுவனங்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கீழ் அமைகின்றன. பொருளாதாரச் செயற்பாடுகள் அனைத்தினதும் ஏகத் தலைவராகியிருப்பவர் பஸில் ராஜபக்ஷவே.

அனைத்தையும் கூட்டிக் கழித்துப் பார்க்கும்போது, தேர்தலின் பின்னரான நாட்டின் நிர்வாகத்தில் ராஜபக்ஷமயம் பெரிதும் பலம் பெற்றுள்ளதாகவே தெரிகிறது. அதற்கமைய பிரதேச ரீதியிலான அனைத்து அபிவிருத்திச் செயற்பாடுகளும் பொருளா தார அபிவிருத்தி அமைச்சினால் இயக்கிச் செல்லப்படுகின்றன. முதலீட்டுச் சபையும்கூட அந்த அமைச்சுக்கே உரித்தாகிறது.

**குடும்பப் பலம் கட்டி எழுப்பப்படுகிறது.**

எவ்வாறோ ஜனாதிபதியின் பதவிக்காலத்தை நீடிக்கும் யோச னைகளுடனான அரசமைப்புத் திருத்தம் ஓராண்டுக்குள் தயாராகி விடும். அரச செலவினங்கள் தொடர்பான நிதி, ஒருங்கிணைந்த நிதியிலிருந்து ஜனாதி பதியால் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நாடாளுமன்றத்திடம் அதற்கான அனுமதியை - விருப்பைக் கோர நேராது.

**தமிழில்: சரா**

திம்புவில் இடம்பெற்ற சார்க் மாநாட்டிற்கு நாமல் ராஜபக்ஷ வும் தமது தந்தையாரான ஜனாதிபதி மஹிந் தருடன் சென்றிருந்தது மட்டுமல்லாது, இருதரப்புச் சந்திப்புகளின் போதும் கூட அவர் வெளியுறவு அமைச்சரு டனேயே காணப்பட்டார். இதிலிருந்தே ராஜபக்ஷாக்களின் குடும்ப பலம் கட்டியெழுப்பப்படுவது தெளிவாகத் தெரிகிறது.

இவை எவ்வாறானாலும் இனச்சிக்கலுக்கு அரசியல் தீர்வொன்று வழங்கப்படாது போகுமானால், இலங்கையின் எதிர்காலமென்பது சூனியமாகவே ஆகிவிடலாம். இருந்தபோதிலும் அத்தகையதொரு இனச்சிக்கலுக்கான தீர்வொன்று ராஜ பக்ஷ நிர்வாகத்திடமிருந்து கிட்டப்போவதில்லை.

வட்புலத்துக்குக் கிட்டவிருப்பது வசந்தமா? அல்லது வரட்சியின் அதிருப்தியா? இது கேள்விக்குரியதே. ஆனாலும் அவசரகாலச் சட்டத்தின் சில விதிகளாவது நீக்கப்பட்டதை வரவேற்க முடிகிறது. என்றாலும் அவை நீக்கப்பட்டதை அடுத்து ஆயுததாரி களான புலிகளின் அச்சுறுத்தலொன் றுக்கு இடமிருப்பதாக அபாயச் சமிக்ஞையொன்றும் வெளிப்பட்டது.

அதன்மூலம் வடக்கில் பாரிய அளவில் இராணுவத்தை நிலைப் படுத்துவதற் கான வாய்ப்பு கிட்டுகிறது. அதனால் ஜனநாயகவாதம் மேலும் நலிவடையக் கூடும். தமிழ்மக்களின் பாரம்பரிய நிலங் களில் அரசால் சிங்கள மக்கள் குடியமர்த்தப்படுவதை இன்று காணமுடிகிறது.

சிங்களவர்கள் தனிப்பட்ட ரீதியில் தமிழ்ப் பிரதேசங்களில் காணிகளைக் கொள்முதல் செய்து வர்த்தக முயற்சிகளில் ஈடுபடு கின்றனர்.

கரையோரப் பிரதேசங்களில் வாழ்ந்த தமிழ் மீனவர்கள் அங்கி ருந்து அகற்றப் பட்டு அவற்றைச் சிங்கள மீனவர்களி டமும் இராணு வத்தினரிடமும் கைய ளித்து மேற்படி தமிழ் மீனவர்களுக்கு நாட்டின் மத்திய பிரதேசத்தில் காணிகள் வழங்கப்பட்டமை குறித்து 'பிரான்ஸ் 24' தொலைக்காட்சிச் சேவையில் காட்டப் பட் டுள்ளது. அக்காட்சிகளில் தமிழ் மீனவர்கள் எதிர்நோக்கும் சோகமயமான நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட்டது.

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷக்களின் நிர்வாகத்தின்கீழ்...

(23 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களப் பேரினவாதிகளால் தமிழ்த் தேசியவாதத்தின் எந்தவொரு வெளிப்பாட்டையும் பொறுத்துக்கொள்ள இயலாது - ஜீரணித்துக்கொள்ள இயலாது. அதன் காரணமாகவே விடுதலைப் புலிகள் அமைப்பின் மயானங்கள் அழிக்கப்படுவதில் தவறேதும் இருப்பதாக அரசு கருதவில்லை.

இலங்கை இராணுவத்தின் வீர புருஷர்களது உருவச்சிலைகள் மற்றும் புத்தர் சிலைகளை நிறுவுவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்தோரை மீளக்குடியமர்த்தல், பொருளாதாரப் புனரமைப்புகள் என்பன இரண்டாம் பட்சமாகியுள்ளன.

இங்கு, தமிழ்மக்களது மனங்களை வென்றெடுப்பதை விடவும் தொல்பொருள் ஆய்வுகளை மேற்கொண்டு வடக்குக் கிழக்கை சிங்கள மக்களின் உரித்துடைமையாக்கும் கருமமே முன்கொண்டு செல்லப்படுகிறது.

பிரிவினைவாதக் கருத்துகள் தோன்றுவது சிந்தனைகளிலேயல்லாது, உருவச் சிலைகளில் அல்லது நினைவுச் சின்னங்களில் இருந்து அல்ல. தமிழ் இனத்தவர்கள் எதிரிகளாகக் கருதப்படுவார்களேயானால், அவர்களது உரிமைகள் மற்றும் சுதந்திரம் வரையறுக்கப்படுமானால், அவர்களது சொந்தப் பூமியிலிருந்து அவர்கள் வெளி யேற்றப்படுவார்களேயானால் பிரிவினைவாதம் மீளவும் உயிர்ப் பிக்கப்படக்கூடும்.

புலிகளின் மயானங்கள் மற்றும் நினைவுச்சின்னங்கள் தரை மட்டமாக்கப்பட்டு சந்திகள்தோறும் புத்தர் சிலை மற்றும் இராணுவ வெற் றிச்சின்னங்கள் நிறுவப்பட்டாலும் அவற்றால் பலனேதும் கிட்டாது போகக்கூடும்.

முன்னுரிமை வழங்கப்பட வேண்டியது இத்தகைய நவீன நிர்மாணங்களுக்கு அல்ல; பழைய நினைவுச்சின்னங்கள் அழிக்கப்படுவதற்கு அல்ல. இயன்றளவு தூரத்துக்கு தமிழ்மக்களுக்கு சுமுகமானதொரு வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுப்பதற்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டியுள்ளது. அந்த வகையில் பொருளாதார அபிவிருத்தி மட்டுமல்லாது, குடிசார் சுதந்திரமும் ஏற்படுத்தப் படவேண்டியுள்ளது.

தமதேயான நாட்டில் தாம் சுதந்திரமானவர்கள் என்ற உணர்வை தமிழ் இனத்தவரிடத்தில் ஏற்படுத்த வேண்டியுள்ளது. அந்த உணர்வு அவர்களிடத்தே ஏற்படவேண்டியுள்ளது. எந்தளவுக்குப் பாதுகாப்பு வழங்கும் சட்டங்கள் - விதிகள் நிலவினாலும் கூட, தமிழருக்கு தாம் அடிமைப்பட்டதொரு இனமேயென்ற உணர்வு மேலிடுமானால் பிரிவினைவாதம் மீளவும் தலைதூக்கக்கூடும்.

தமிழ் இனத்துள் ஜனநாயக வாத நடுநிலை கொண்ட தலைவர்கள் உருவாக வேண்டியுள்ளது. விடுதலைப் புலிகள் தமிழ் மக்களது ஏகப்பிரதிநிதிகளாகியிராதது போன்றே ராஜபக்ஷாக்கள் மட்டுமே ஸ்ரீலங்கா என்ற நிலையும் இல்லை.

ராஜபக்ஷாக்களுக்கு எதிராக எழுவதென்பது இலங்கையின் எதிர்காலத்தைத் தாரைவார்த்துக் கொடுப்பதாக ஆகமாட்டாது. நாடு எதிர்கொள்ளும் பொருளாதார அனர்த்தமானது எதிர்க்கட்சி பலம் பெறுவதற்கான இடவாய்ப்பைப் பெரிதும் விரிவுபடுத்தி விடக்கூடும்.

ஜனநாயகவாதத்தைச் சார்ந்து நிற்கும் தமிழ் இனத் தவர்கள், ராஜபக்ஷ நிர்வாகத்தின் தவறுகளால் பெரிதும் துன்புறுவோராக மாறக்கூடும்.

எதிர்காலத்தில் புதிய அற்புதங்கள் நிகழ்வதன் மூலமே ஜன நாயகவாதத்துக்குப் புத்துயி ரளிக்கப்படக்கூடும்.


VACANCIES

A reputed business establishment (Office Automation) in Jaffna, Kilinochchi & Mullaideevu invites applications for the following vacancies.

1. Technician - Trainee
2. Marketing Representative
3. Receptionist – Female

Experience Preferable. Age Between 18 – 25.
Salary Negotiable.



Send your applications with Bio Data before 01st July 2010 to

C/O:- Uthayan,
Advt No: 4040,
Jaffna.

ACCA / CAT to your future in Finance & Accounting

Association of Charted Certified Accountant
Certified Accounting Technician

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 27,30/06/2010 - 03,04,10,11,15/07/2010



16 வயதிற்கு மேற்பட்டவர்கள் — CAT / MSER
பட்டதாரிகள் — Exemption
உத்தியோகத்தர்கள் — Experience
அடிப்படைத் தகுதிகளை எதிர்பார்ப்பவர்கள் — MSER
→ ACCA → MBA
→ B.Sc (Hons) in Applied Accounting Oxford Brookers University (OBU) - UK 06 Months

மேலதிக விவரங்களுடன் தொடர்புகட்கு:

Jaffna Technical Institute
Department of Business Studies
இல.46, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
e-mail:jtiedu@gmail.com, T.P : 0215670345

ACCA

புதிய மாணவர்களுக்குரிய அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு.
உயிருடன் 1 Kg 270/=
சுத்தம் செய்யப்பட்டது 1 Kg 450/=
மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவுண்டு.

★ விஜயகுமார்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

16-07-2010 அன்று கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள Isles Intenationale Universite, NORTH LANKA IIT இணைந்து நடாத்தும்

8வது சர்வதேச பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு....

IIU இனது Partner Institution ஆகிய

NORTH LANKA IIT பெருமையுடன் வழங்கும்

விசேட புலமைப் பரிசில் திட்டம்-2010




1. B.Sc. in Computer Science 30 மாதங்கள்
எமது மண்ணிலேயே பட்டதாரியாகும் வாய்ப்பு!

O/L தகமை

2. Diploma in Multimedia with IT 1 வருடம்
2ம்,3ம் வருடங்களை வெளிநாடு ஒன்றில் தொடரும் வாய்ப்பு!!

உயர் கல்விக்காக வெளிநாடு செல்ல குறைந்த கட்டணத்துடன் Visa மற்றும் Ticket, Part Time Job, Accommodation என்பன ஒழுங்குசெய்து தரப்படும்.

மேற்படி இரு கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன!!!

மேற்படி திட்டத்தில் இணைந்து கொள்ள....

- ✓ எமது நிறுவனத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்யவும்
- ✓ உங்கள் தகமைக்கேற்ப கட்டண விலக்களிக்கப்படும்
- ✓ புதிய மாணவர்கள் 8வது சர்வதேச பட்டமளிப்பு விழாவில் கற்கைநெறிக்கான அனுமதியை வழங்கி கௌரவிக்கப்படுவார்கள்.

ரூபா 25000 இருந்து 75000 வரை கட்டண விலக்களிக்கப்படும்

விசேட புதிய பிரிவு ஆரம்பம்!

முன்னுரிமை, தகமை அடிப்படையில் புலமைப் பரிசில்!!!
அனுமதிக்கு முந்துங்கள்!!! சர்வதேசதர பட்டதாரியாகுங்கள்!!!



முக்கிய அறிவித்தல்: –
8வது பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெறவுள்ள NORTH LANKA IIT பட்டதாரிகளுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று 28-06-2010 அன்று பி.ப 3:00 மணியளவில் எமது நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. அக் கலந்துரையாடலில் அனைத்து பட்டதாரி மாணவர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு: –
#113, Laxan Plaza, Navalar Road, Jaffna. Phone: 0213214305 , 0217390110


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவரை நற்பிரசையாக்கும் பணி அர்ப்பணிப்பு இன்றைய ஆசிரியரிடம் தேவை

## பெற்றோர் பிள்ளைகளின் ஆலோசகராக அன்புடன் வழிநடத்தி உதவுதல் அவசியம்

கல்வி என்பது அறிவு, நல்லொழுக்கம், நுட்பத்தகைமை என்பவற்றைக் கற்றலையும், கற்பித்தலையும் குறிக்கும். இந்த உலகில் ஒருவர் பெறுகின்ற அறிவு, அனுபவம், ஆற்றல் ஆகியவற்றின் தொகுப்பே கல்வி எனலாம். ஆளுமைக்கும் ஆற்றலுக்கும் அடித்தளமாக இருந்து அவரின் ஒவ்வொரு செயலையும் சிறப்பாகச் செய்ய வழியமைக்க வேண்டும். தரமான கல்வியைப் பெற்றவர்கள் மற்றவர்களிடமிருந்து மாறுபட்டவர்களாக, மற்றவர்களை வழிநடத்தும் சிறப்புடையவர்களாக இருக்க வேண்டும். நுட்பமாகச் செயற்படுகின்ற கூர்மையான அறிவுடையவர்களாக இருந்து தானும் நடந்து, மற்றவர்களையும் வழிநடத்த வேண்டும்.

பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர் கற்றவர்களைத் தேடிச்சென்று, கல்வி கற்று மக்கள் தங்களை உயர்த்திக் கொண்டார்கள். எழுத்தறிவு, எண்ணறிவு, பட்டறிவு, மருத்துவம், போர்த்திறன், கைவேலைத்திறன், இசை, கூத்து, நுண்கலைகள் எனப் பல்வேறு வகைகளில் கற்றுக் கொள்பவருக்குள் நுழையும் கருத்துக்கள் அவருக்குள் மாற்றங்களை ஏற்படுத்தி அவர்களை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்தியது, உயர்த்தியது.

ஆளுநரின் பிள்ளையாக இருந்தாலும், ஆசிரியருக்கு முன் அவர் ஒரு மாணவர்தான். ஆசிரியருக்குப் பணிவிடை செய்து, தான் கற்றுக் கொண்டார். பொருளைவிட மதிப்பும் மரியாதையும் மேலெழுந்து நின்றன. மக்களின் வணக்கத்துக்கு உரியவராக ஆசிரியர் இருந்தார். இன்று அறிவியல் கண்டுபிடிப்புகள், தொழில்நுட்பச் செறிவு, சுருங்கிப்போன உலகம், பொருளாதார வளர்ச்சிபோன்ற காரணிகள் கல்வி என்பதற்கான கருத்துக்களை வெகுவாக மாற்றி உள்ளன.

அறிவு நுட்பத்திற்கான அடித்தளமாக இருந்த கல்வி இன்றைய சூழலில் அந்த நிலையிலிருந்து மாறி, பொருள் ஈட்டுகின்ற, வணிகத்திற்கான படிக்கட்டுக்களாக மாறி உள்ளது. பெருகிவரும் மக்கள் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு கல்வி வடிவமைக்கப்பட்டு, பொருள் கொள்கின்ற வணிகப் பொருளாக மாற்றப்பட்டுள்ளது. ஆசிரியர்களும் விற்பனையாளராக மாறி அறிவை விற்பனை செய்து பொருளீட்டுகின்றனர். இடைத்தரகர்களும் ஆசிரியர்களைக் கவிக்கமர்த்தி விளம்பரம் செய்து விற்பனையைக் கூட்டுகின்றனர்.

இன்றைய இந்த நிலை உகந்ததா? பழையன கழிதல் புதியன புகுதல் என்பதில் பழையன எல்லாம் அல்லாதவையும் அல்ல. புதியன அனைத்துமே நல்லனவும் அல்ல. எனவே, அன்றைய வாழ்வில் கல்வி தந்த உயர் கருத்துக்களின் அடிப்படையிலே இன்றைய கல்வி இடம்பெற்றால் நாங்கள் ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்கலாம். நல்ல சமூகம் உருவாக அடிப்படைத் தேவை நல்ல கல்வி. இந்த நல்ல கல்வியை ஒவ்வொரு குழந்தையும் பெறக் காரணமாக இருப்பவர்கள் ஆசிரியர்களும் பெற்றோர்களுமாவர்.

கல்வி இருபெரும் குழுவினரின் தேவைகளை உள்ளடக்கியது. ஒன்று சமுதாயம். மற்றையது மாணவர். ஒரு சமுதாயம் அதன் வளர்ச்சிக்கு மாணவரின் கல்வி வளர்ச்சியையே எதிர்பார்க்கின்றது. ஒரு சமுதாயம் தனது உயர் கொள்கைகள், பெருமைகள் ஆகியவற்றுக்குள் இளம் பராயத்தினரை உள்வாங்குவதற்கு கல்வி நிலையங்கள் அவசியமாகின்றன. தங்களுக்குத் தேவையான அறிவையும், திறமைகளையும் போதித்து அதன் மூலம் தாங்கள் சமுதாயத்தில் உயர்வுபெற மாணவர்களுக்குப் பள்ளிக்கூடங்கள் அவசியமாகின்றன. அவர்கள் பெறும் கல்வி, அவர்களது சாத்தியமிக்க இலட்சியங்களை அடைய அவர்களுக்கு உதவுவதாக அமைய வேண்டும்.

இந்நிலையில் மாணவர்களினதும் சமுதாயத்தினதும் தேவைகளைப் புரிந்துகொண்டு செயலாற்றுவதில் ஆசிரியர்களது பங்கு மிக முக்கியமானதாகும்.

"ஒரு நல்ல ஞானாசிரியனால் தான் நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும்" என்பார் சுவாமி

**கடந்த வியாழக்கிழமை (24.06.2010) தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழாப் பரிசளிப்பு வைபவத்தின்போது, யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் த.பேரானந்தராசா, மாணவர் கல்வி மேம்பட ஆசிரியர், பெற்றோர், மாணவரிடையே ஒத்துணர்வு என்ற தலைப்பில் நிகழ்த்திய பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை நினைவுப் பேருரை இங்கு கட்டுரை வடிவில்.**

விவேகானந்தர். ஆசிரியர்கள் நிறைமொழி மாந்தராக விளங்க வேண்டும். வளர்ச்சியையும் நடத்தையையும் புறம்பேயிருந்து கட்டுப்படுத்தும் பலவித காரணிகளையே நாம் சூழல் என்போம். நமது பண்பாட்டின் மீது பலவிதத் தாக்கங்கள் நிகழ்வதால், பள்ளி, குடும்பச் சூழல் நலிவடைந்துள்ளன. ஒரு குழந்தைக்கு நற்பண்புகளை வளர்க்கும் பொறுப்பில் இச்சூழல்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. இச்சூழல்கள் பெறும் சீர்கேட்டால் குழந்தையின் வளர்ச்சியும் வாய்ப்பும் தடைப்படுகின்றன. அதனால் மாணவர்கள் நற்பண்புகளைப் பெற்று உயர்வடையும் நற்சூழல்களைப் பள்ளிகளே அமைத்துத்தர வேண்டும்.

குடும்பம், சுற்றுப்புறம், சமுதாயம், பள்ளி, அரசு முதலியனவற்றை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களின் வளர்ச்சி அமைகின்றது.

**வைத்திய நிபுணர்**
**த.பேரானந்தராசா**
**M.B.B.S., M.D. (Medicine)**



குடும்பமும் பள்ளியும் மாணவர்களுக்குத் தக்க சூழ்நிலைகளை உருவாக்கிக் கொடுக்கும் போதே மாணவர்கள் உயர்வடைய முடியும். ஒரு குழந்தையின் பண்பு, அதன், குடும்பத்தின் பண்பே, அதன் சமூகத்தின் பண்பு.

J.F.Brown எனும் அறிஞர் "ஒரு நாட்டின் பெருமை, அதன் பரப்பு, மலைகள்,காடுகள், கழனிகள், ஆயுதச்சாலைகள், கட்டடங்கள் ஆகியவற்றைப் பொறுத்ததன்று. ஆனால் அது அந்நாட்டின் பள்ளிகளின் நிலையையும் ஆசிரியர்களின் தன்மையையும் பொறுத்ததாகும்" என்றார்.

ஆசிரியர் திறம்படக் கற்பிக்கவும் மாணவர்கள் செம்மையுறக் கற்றிடவும் வகுப்பறையில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமிடையே நிலவும் நல்லிணக்கச் சூழலே ஆசிரியர், மாணவர் உறவு எனலாம்.

பண்டைக் காலத்தில் கல்வி வாழ்வோடு கற்பிக்கப்பட்டு வந்தது. செய்து கற்றல், [illegible] கற்றல், வாழ்ந்து கற்றல், [illegible] என்பதற்கு இணங்க கல்வி கற்றல் என்பது வாழ்வோடு இரண்டறக் கலந்து இருந்தது. அன்றைய கல்வி முறையில் ஆசிரியரும் மாணவனும் தந்தை மகன் உறவு என்ற நிலையில் ஒழுகினர்.

இன்று ஆசிரிய மாணவ உறவு குறைந்து வருகிறது. இதற்குத் தகவல் தொடர்பு சாதனங்களின் ஆளுமையும் ஒரு காரணம். இத்தகைய சூழலில் மாணவர்கள் அயல் மொழிப் பண்பாட்டுக் கலாசாரத்தால் ஈர்க்கப்பட்டு நமது பண்பாட்டை மறக்கின்றார்கள். இன்றைய நிலையில் ஆசிரியர் மாணவர் உறவு மேம்பட பின்வரும் வழிகளை மேற்கொள்ளலாம்.

### அன்பு

அன்பே உலகில் வலிமையானது. இயந்திர கதியில் இயங்கும் இன்றைய சூழலில் பள்ளிவரும் மாணவர்கள் உண்மையான அன்புக்காக ஏங்குகின்றனர். பெற்றோர் இருவரும் தொழில் புரிபவராயின் அக்குழந்தைக்கு இருவரது அன்பும் கிட்டாது போய்விட வாய்ப்புள்ளது. பள்ளிக்குவரும் மாணவனிடத்தில் ஆசிரியர் பரிவன்புடன் இருக்கவேண்டும். மாணவர்களது தவறுகளைச் சுட்டிக் காட்டி அன்பு வழியில் திருத்த வேண்டும். ஆசிரியர் தன்மீது அன்பு காட்டுகிறார் என்பதை உணரும் ஒரு மாணவன் நல்வழியில் செல்வான்.

### அறிவுத்திறன்

அறிவுத்திறன் குறைந்த மாணவர்களை ஆசிரியர்கள் உற்சாகப்படுத்த வேண்டும். அறிவுத்திறன் குறைந்தவர்களுக்கும் அறிவு புகட்டி அவர்களை உயர்வடையச் செய்வதே நல்லாசிரியர் கடமை. அறிவுத்திறன் குறைந்த மாணவர்களை மற்றவர்கள் முன்பு தரக்குறைவாக நடத்துதல்கூடாது.

### மாணவர்கள், ஆசிரியர் உறவு

மாணவர்கள், ஆசிரியர் இருவரும் நல்லுறவு பேண ஆசிரியர்கள் மாணவர்களது இன்பம், துன்பம் இரண்டிலும் பங்குகொள்ளல் அவசியம். மாணவர்கள் உடல் சோர்வோ, மனச்சோர்வோ அடையும்போது அவர்களுக்கு ஊன்றுகோலாக அமைந்து அவர்கள் நலம்நாட வேண்டும். அவர்கள் வெற்றிபெறும் போது அவர்களைப் பாராட்டி அவர்களது வெற்றியில் பங்குகொண்டு மகிழ வேண்டும்.

ஆசிரியர்கள் மாணவர்களை நன்கு விளங்கி, அவர்களது கல்வித்துறைசார் நாட்டங்களை அடையாளம் கண்டு, அவர்களது திறமைகளை வளர்க்க ஊக்கம் கொடுத்து, அவர்கள் குறைகளை நீக்க அவர்களோடு சேர்ந்து உழைக்கவேண்டும். அகல் விளக்கெனினும் தூண்டுகோல் வேண்டும். ஒவ்வொரு மாணவனிடத்திலும் ஒரு திறமை மறைந்திருக்கும். ஆசிரியர்கள் மாணவர்களுக்குச் சமமான வாய்ப்புக் கொடுத்து ஊக்குவித்தால் அவர்கள் திறன்கள் வெளிப்படும்.

தவறு செய்தல் மனித இயல்பு. பல்வேறு சூழல்களிலிருந்து மாணவர்கள் வருவதால் வகுப்பிலும் பள்ளிவளாகத்திலும் தவறுகள் செய்ய வாய்ப்புக்கள் உள்ளன. அவ்வாறு மாணவர்கள் தவறு செய்யும்போது அவர்கள் அதை உணரச் செய்து திருத்துதல் வேண்டும். அவர்கள் தவறுகளைச் சுட்டிக்காட்டி. மற்றவர்களுக்கு முன் விமர்சித்தலானது, இருவரது உறவிலும் தீய விளைவுகளை ஏற்படுத்தும். மாணவர்கள் தவறுகளை உணர்ந்து மீண்டும் அதுபோன்ற தவறுகளைச் செய்யாதவாறு அன்புடன் வழி நடத்தல் நலம் பயக்கும்.

முன்பெல்லாம் ஒரு வகுப்பில் அளவுடனேயே மாணவர்கள் இருந்தனர். அதனால் அனைத்து மாணவர்களையும் நன்கு கவனித்துக் கல்வியுடன் பண்பாட்டையும் அவர்களுக்கு ஆசிரியர்கள் போதித்தனர். இன்றோ ஆசிரியர் மாணவர் எண்ணிக்கை விகிதம் அதிகம். இன்று ஒரு வகுப்பில் குறைந்தது ஐம்பது மாணவர்கள் உள்ளனர். இவர்கள் பல்வேறு சூழல்களில் இருந்து வருவதால் பல்வேறுபட்ட மனநிலைகளில் உள்ளனர். ஆசிரியர்களால் அனைவரையும் நன்கு கவனிக்க இயலாமல் போகிறது. மாணவர்களுக்கு உரிய காலத்தில் பாடத்திட்டத்தை முடிக்க இயலாமல் மாணவர்கள் பல்வேறு வழிகளை நாடுகின்றனர். இதனால் ஆசிரிய, மாணவர் நல்லுறவில் விரிசல் ஏற்படுகின்றது. மாறாக ஆசிரியர், மாணவர் எண்ணிக்கையில் சரியாக இருந்தால் ஆசிரியர்களிடம் மாணவர்கள் நெருங்கிப் பழகும் வாய்ப்பு அதிகரித்து உறவும் மேம்படும்.

நாள்தோறும் புதிய செய்திகளையும் கருத்துக்களையும் கூறும் ஆசிரியர்களை மாணவர்கள் அனைவரும் விரும்புவர். தாம் உணர்ந்ததை மாணவருக்குக் கற்பிக்கும் திறம் உடையவராக ஆசிரியர்கள் விளங்குதல் வேண்டும். இவ்வாறான மேம்பட்ட கற்பித்தல் திறனும், மாணவர்கள் அனைவரையும் இன, மத,மொழி வேறுபாடு பாராது சமமாக நடத்துவதும் ஆசிரிய மாணவர் நல் உறவை வளர்க்கும்.

இனி, மாணவர்கள் நன் மாணவர்களாக, பெற்றோர் ஆசிரியர்களிடையே நல்உறவு வேண்டும். இவர்களின் நல்லுறவு மாணவர்கள் கல்விச் சூழ்நிலைச் சீர்கேடுகளை அகற்ற உதவும். ஒரு குழந்தைக்கு சிறந்த முதல் ஆசிரியர்கள் பெற்றோர்களே ஆவர். எனவே அடிப்படைப் பண்புகளை பெற்றோர்கள் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுத்தல் வேண்டும். குடும்பச் சூழல் அமைவாக இருந்து பெற்றோர்கள் தங்கள் இடையே சண்டை, சச்சரவு இன்றி (குழந்தைகள் முன்னால்) ஒழுகும் பொழுது குழந்தைகள் மனதில் பெற்றோர்கள் குறித்த நன்மதிப்பு ஏற்படும். நல்ல அன்புடனும் பாசத்துடனும் வளர்க்கப்படும் குழந்தைகள் நல்ல பண்பாளர்களாக உருவாகின்றனர்.

பெற்றோர்கள் குழந்தைகளைத் தனித்துச் செயற்பட விடுதல் வேண்டும். அவர்களுக்கு நல்ல அறிவுரைகளை வழங்கலாம். தங்கள் விருப்பு வெறுப்புக்களை குழந்தைகள் மீது திணித்தல் கூடாது.

*(வளரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுப் பிரார்த்தனை

சுழிபுரம்,ஜூன்27

சுழிபுரம், கம்பளை அம்பாள் ஆலயத்தில் செவ்வாய்க்கிழமை தோறும் மாலை 5 மணிக்கு கூட்டுப்பிரார்த்தனை அரை மணி நேரம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆலய கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நடைபெறும் கூட்டுப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளும் சிறுவர்களுக்கு பரிசுகள் வழங்க ஆலய பரிபாலன சபை முன்வந்துள்ளது. (ஒ-28)

## கண்ணீர் அஞ்சலி



இலங்கை மின்சாரசபை ஊழியரும் நலன்புரி சங்க அங்கத்தவருமான அமரர்

**பரமநாதன் திருச்செல்வம்**

அவர்கள் 25.06.2010 திடீர் மரணம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை மின்சார சபை ஊழியர்கள், இ.மி.ச.வடமாகாண நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கம்.

(சி/568700)

## கண்ணீர் அஞ்சலி



யா/ வண்ணை ஐயனார் கோயிலடி விசுவேச விநாயகர் ஆலயத்தின் பரிபாலன சபையின் தலைவராக, செயலாளராக, பொருளாளராக, முகாமையாளராக பலகாலம் தொண்டாற்றி 26.06.2010 சனிக்கிழமை இறைபதம் எய்திய

**தணிகாசலம் பத்மநாதன்**

அவர்களுடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விசுவேச விநாயகரை பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபை
விசுவேசப்பிள்ளையார் கோயில்,
ஐயனார் கோயிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(99980)

## பகிரங்கக் கேள்வி கோருதல்

பூநகரிப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கீழ்க்குறிப்பிடப்படும் பொதுச்சந்தை அமைந்துள்ள இடங்களில் மாடு, ஆடு மற்றும் கோழி இறைச்சிக்கடைகள் நடத்துவதற்கு பொருத்தமானவர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

பூநகரிப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பொதுச் சந்தை அமைந்துள்ள இடங்களில் மாடு, ஆடு மற்றும் கோழி இறைச்சிக் கடைகள் நடத்துவதற்குரிய அனுமதியானது 15.07.2010 தொடக்கம் 14.08.2010 வரையான ஒரு மாத காலப் பகுதிக்கு வழங்குவதற்கு பொருத்தமான கேள்விதாரர்களிடமிருந்து பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்வி கோரப்படும் இடங்கள்

| | |
|---|---|
| 01) வாடியடி | 02) முட்கொம்பன் |
| 03) பள்ளிக்குடா | 04) மண்ணித்தலை |
| 05) அரசபுரம் | 06) ஜெயபுரம் |
| 07) முழங்காவில் | 08) கரியாலைநாகபடுவான் |
| 09) வலைப்பாடு | 10) நாச்சிக்குடா |
| 11) கிராஞ்சி | |

இறைச்சிக்கடை நடத்துவதற்குரிய அனுமதிக்கான கேள்விப்பத்திரங்களினை பெற விரும்புவோர் பூநகரிப் பிரதேச சபை தலைமை அலுவலகத்தோடு (தம்பிராய்) நேரடியாகத் தொடர்புகொண்டு கேள்விப்பத்திரங்களினைப் பெற்று 01.07.2010 ஆம் திகதிக்கு முன்னர் பூரணப்படுத் தப்பட்ட கேள்விப்பத்திரத்தினை விசேட ஆணையாளர், பிர தேச சபை, பூநகரி என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைப்பதோடு அதன் பிரதி ஒன்றினை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் யாவும் 10.07.2010 ஆம் திகதியன்று பிரதேச சபை பூநகரியில் (தம்பிராய்) திறக்கப்படும் என்பதனையும் தங்களுக்கு அறியத்தருகின்றேன்.

கேள்வி தொடர்பான நிபந்தனைகள்:

1) பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இடங்களில் கொல்களங்கள் எவையும் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

2) இறைச்சியானது வெளி மாவட்டங்களிலிருந்து கொண்டுவருவதுடன் அவை உரிய முறையில் பொதிசெய்யப்பட்டு அந்த மாவட்ட பொதுச் சுகாதார பரிசோதகர் ஊடாக இலச்சினை பொறிக்கப்படுவதோடு அவை பின்னர் பூநகரிப் பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகரினால் மீள இலச்சினை பொறிக்கப்பட்ட பின்னர் விற்பனை செய்வதற்கு அனுமதிக்கப்படும்.

3) இறைச்சி விற்பனை செய்யப்படும் கடை சித்தி பெற்ற கேள்விதாரரினால் அமைக்கப்படவேண்டும்.

4) கடையானது பிரதேசசபை சட்டத்திட்டங்களுக்கும் சூழலியல் சட்டங்களிற்கும் உட்பட்டதாக அமைக்கப்பட வேண்டும்.

5) கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா 250.00 செலுத்தப்படவேண்டும். இத்தொகை மீளளிக்கப்படமாட்டாது.

6) கேள்வி வைப்புப் பணமாக ரூபா 5000.00 செலுத்தப் படவேண்டும் இத்தொகையானது கேள்விகள் திறக்கப்பட்ட பின்னர் வழங்கப்படும்.

திரு.க.தனபாலசிங்கம்
விசேட ஆணையாளர்,
பிரதேச சபை, பூநகரி.

(சி/568703)

# இன்று தேர்த்திருவிழா

கிளிநொச்சி,ஜூன்27

மல்லாவி, பாண்டியன்குளம் சித்தி விநாயகர் ஆலயத்தின் பெருந்திருவிழாவில் இன்று காலை 9 மணிக்கு தேர்த்திருவிழா இடமபெறவுள்ளது. நாளை காலை தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

(ஒ-1-405)

# ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்27

நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மாவட்டச் செயலகத்தில் நடைபெறவிருந்த யாழ்.மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துகின்ற வேலைத்திட்டங்கள் தொடர்பான இரண்டாம் காலாண்டுக்கான மீளாய்வுக் கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்றும் மீளாய்வுக்கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் யாழ்.அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஒ)

# கலைஞர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்27

நெருக்கடியான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து நாடகப் பாரம்பரியங்களைப் பாதுகாத்த நாடகக் கலைஞர்கள் மக்கள் களரி நாடகக் குழுவினரால் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு நல்லூர் செம்மணி வீதியில் உள்ள சி.சி.த.க. பாடசாலையில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் எஸ்.திருநாவுக்கரசு, பிரான்சிஸ் ஜூல்ஸ் ஜொலின், மரியாம்பிள்ளை, பொனிபஸ், தைரியநாதன், கேசுறி பிலிப் பேர்மினஸ், கந்தையா நாகப்பு, நவாலியூர் என்.செல்லத்துரை (நவாலியூரான்), சரவணமுத்து சந்திரா, முருகேசு சிவப்பிரகாசம் ஆகியோரையும் திருமுறைக் கலாமன்றம், செயற்திறன் அரங்க இயக்கம், வெறுவெளி அரங்கக் குழு(யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை) ஆகிய நிறுவனங்களும் கௌரவிக்கப்படவுள்ளன.

(ஒ-6)

# உதைபந்தாட்டம்; இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்27

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் 13 வயதுப் பிரிவினருக்கு நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டங்கள் இன்று காலை 9.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

இந்த ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

* பெண்கள் - நெல்லியடி ம.மகாவித்தியாலயம் எதிர் சாவகச்சேரி இந்து.
* ஆண்கள் - இளவாலை செண். ஹென்றீஸ் எதிர் யாழ். மத்திய கல்லூரி.(ஒ-1-86)

# நயினாதீவின் முக்கிய வீதிகளுக்கு மின் ஒளி

நயினாதீவு,ஜூன்27

நயினாதீவு சமூகக்கல்வி, பொருளாதார அபிவிருத்திச் சங்கம் அங்குள்ள பொது அமைப்புக்களுடன் இணைந்து முக்கிய வீதிகளுக்கு மின்சார வெளிச்சம் கிடைக்க உதவியுள்ளது.

வீதிகளின் முக்கிய பகுதிகளில் மின் ஒளி வழங்கக்கூடியதாக 82 மின் குமிழ்கள் உரிய இடங்களில் பொருத்தப்பட்டுள்ளன. இதனைப் பொதுமக்களும், வாகனங்களும் எவ்வித கஷ்டமும் இன்றிப் போக்குவரத்துச் செய்யக்கூடியதாக உள்ளது என நயினாதீவு மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். (ஒ-111)

# இணைய வழிக் கற்கை நெறி

யாழ்ப்பாணம்,ஜூன்27

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக கல்விபீடத்தால் நடத்தப்படும் 'ஆசிரிய கல்வியியலாளர் - ஒரு கல்வித் தொழில்நுட்பவியியலாளராக' எனும் இணையவழிக் கற்கை நெறிக்கான விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் விண்ணப்ப முடிவு நாள் நாளை 28ஆம் திகதி என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை ஆரம்ப அடிப்படை மற்றும் தொழில்சார் ஆங்கில பாடநெறிக்கான விண்ணப்பப் படிவங்கள் யாழ்.பிராந்திய நிலையத்தில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன என்றும் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம் என்றும் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ)

## யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச வருடாந்தப் பொதுக்கூட்டம்

25.07.2010

மேற்படி கூட்டம் 25.07.2010 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் சமாசத் தலைவர் சு.சிவசுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. கூட்ட அறிவித்தலும் பொதுச்சபைக் கூட்ட பிரதிநிதிக்கான அதிகாரக் கடிதமும் தொடர்புள்ள அங்கத்துவ சங்கங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. தற்போது எம்முடன் தொடர்பு இல்லாத அங்கத்துவ சங்கங்கள் இவற்றை சமாசக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*637, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.* (சி/568693)

செயலாளர் *(யாழ்.மாவட்ட சி.க.கூ.ச. சமாசம்)*

## கண்ணீர் அஞ்சலி



எமது மகாவித்தியாலய அதிபர் திரு.சி.மணியம் அவர்களின் மகள் மைதிலி சசிகரன் அவர்களின் மாமனார்

**சிவக்கொழுந்து காசிநாதன்**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

(99985)

யா/ஏழாலை மகா வித்தியாலயம் பாடசாலைச் சமூகம்.

## மரண அறிவித்தல்கள்

### *சிவக்கொழுந்து காசிநாதன்*



சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, மஞ்சவனப்பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து காசிநாதன் அவர்கள் கடந்த 23.06.2010 புதன் கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - வள்ளியம்மை தம்பதியினரின் புதல்வனும் காலஞ்சென்ற சுந்தரலிங்கத்தின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - கனகம்மா தம்பதியினரின் மருமகனும் செல்வராணியின் அன்புக் கணவரும் சுதர்சினி (லண்டன்), கெங்காகரன் (சுவிஸ்), சுதாகரன் (பண்டா - விளையாட்டு உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்), கிருபாகரன் (லண்டன்), பத்மலோஜினி (வவுனியா), மனோகரன் (கனடா), சசிகரன் (பிரதிப் பணிப்பாளர், கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை, வவுனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரபாகரன்(லண்டன்), சிவலிங்கம்(கட்டார்), சர்மிளா (சுவிஸ்), கோமதி (ஆசிரியை, வேலணை நடராசா வித்தியாலயம்), கயல்விழி(லண்டன்), இராஜகலா(கனடா), மைதிலி ஆகியோரின் மாமனும் பிரபிஷா, பிரசுஷா, பிரபீஷன், கஜனி, சகானி, ராகவி, வேனுஷன், சகீன், லக்சிகா, சிவமதுசன், அமரர் சிவயதுசன், விதுர்சன், சோபிசன், மிதுஷன், நர்மிதா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.06.2010) திங்கட்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கா.சுதாகரன்(மகன்)
(விளையாட்டு உத்தியோகத்தர் நல்லூர்)

*மஞ்சவனப்பதி வீதி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில். 021 3217061*

(99983)

### *சின்னையா சோமசுந்தரம்*

(ஓய்வுபெற்ற R.M.P.)



கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும் 138/3, கோயில் வீதி(நல்லூர் வடக்கு வீதி) நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சோமசுந்தரம் நேற்று(26.06.2010) சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் செல்வநாயகம், மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பத்மாவதியின் அன்புக் கணவரும் சியாமளா, Dr.முரளீதரன்(Lecturer of Malbourn University, Australia) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜயஈஸ்வரனின்(நீர்ப்பாசனத் திணைக்களம் - யாழ்ப்பாணம்) அன்பு மாமனாரும், யாழினி, ஜனகன்(Marsha P.C System), யசோதரன் (யாழ்.பரியோவான் கல்லூரி), ஜன்னி(யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான சிவகாமிப்பிள்ளை, செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும், புஷ்பா செல்வநாயகம்(ஓய்வுபெற்ற ஆசிரியை யாழ். இந்து மகளிர் கல்லூரி), வைத்திய கலாநிதி செல்வேந்திரா (ஆஸ்திரேலியா), ஹரிச்சந்திரன்(Accountant, Australia) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(27.06.2010) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பிற்பகல் 3.30 மணியளவில் தகனத்திற்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு.விஜயஈஸ்வரன்
(மருமகன், மகள், பேரப்பிள்ளைகள்)

*138/3, கோயில் வீதி,*
*நல்லூர்.*
*021 222 1440*
*0214590766*

(99981)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஆஸ்திரேலியாவின் புதிய பிரமதரும் ஈழத்தமிழ்ப் படகு அகதிகளும்

ஆஸ்திரேலியாவின் புதிய பிரதமராக ஜூலியா கில்லார்ட் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இவர் அந்த நாட்டின் முதலாவது பெண் பிரதமர். ஆளும் கட்சியான தொழிலாளர் கட்சியில் உண்டான பிரச்சினை காரணமாக முன்னாள் பிரதமர் கெவின் ரூட் பதவிவிலக, அந்த இடம் ஜூலியாவுக்குக் கிடைத்துள்ளது.

பதவி விலகியுள்ள கெவின் ரூட் அகதிகள் விடயத்தில் கடும்போக்கைக் கடைப்பிடித்தவர். அகதிகளாக ஏற்றுக்கொள்ளக்கூடிய பாதிப்புகள் உள்ள தகுதியானோரையும் நாட்டுக்குள்ளே அனுமதிக்கக்கூடாது என்ற கடும்போக்கைக் கொண்டிருந்தவர்.

புதிய பிரதமர் அவ்வாறு இல்லை என்றும், ஏற்றுக்கொள்ளக்கூடிய பாதிப்புக்கள்ள உடையவர்களை, அகதிகளாக ஏற்றுக்கொள்வதில் தவறில்லை என்ற கருத்துள்ளவர்.

ஆஸ்திரேலியா நீண்ட காலமாக நியாயமான முறையில் வெளிநாட்டு அகதிகளை உள்வாங்கி வந்தது. இன்னமும் சொல்வதானால் அந்த நாடு குடியேற்ற வாசிகளால் உருவானதே. அதுவும் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த கைதிகள் தப்பிச்சென்று அதிக எண்ணிக்கையில் ஆஸ்திரேலியாவில் குடியேறினர் என்று கூறப்படுவது உண்டு. பின்னர் பல நாடுகளில் இருந்தும் அகதிகளாகச் சென்ற குடியேற்றவாசிகளே அந்த நாட்டின் பெரும்பான்மையினராகினர் என்பது வரலாறு. அதனால் பூர்வீகக் குடிகள் எண்ணிக்கையில் குறைவாகவும் குடியேற்ற வாசிகளே அதிகரித்தனர் என்றும் கணிக்கப்படுவது உண்டு.

போர் மற்றும் இனக்கலவரங்கள் நடைபெற்ற நாடுகளில் இருந்து, ஆஸ்திரேலியாவுக்குப் படகு அகதிகளாகச் சென்று பலர் குடியேறியதும் ஆஸ்திரேலியாவின் சரித்திரத்தின் ஓர் அம்சம். இதனைத் தமக்குச் சாதகமாக்கிய போலிகளும் நீண்ட காலத்துக்கு ஆஸ்திரேலியத் தடுப்பு முகாம்களில் இருந்த பின்னர் உள்வாங்கப்பட்டதும் உண்டு. இதன்னைத் தக்கவாறு பயன்படுத்தி, குறிப்பாகத் தொழிலாக்கி, அதற்குரிய முகவர்களாகி படகு அகதிகளை - ஆஸ்திரேலியாவுக்குக் கூட்டிச்செல்லும் முதலாளிகள் - மனித கடத்தல்காரர்கள் இந்தோனேசியாவில் பெருகியமை மறைக்கக்கூடிய ஒன்றல்ல.

அதன் விளைவாக ஆஸ்திரேலியாவுக்குள் அகதிகளாக நுழைந்து வதிவிட உரிமை பெற்றவர்களின் - வெளிநாட்டவர்களின் - எண்ணிக்கை பல்கிப் பெருகியது. காலக்கிரமத்தில் அதன் விளைவு இனவெறித் தாக்குதல்களாக உருக்கொண்டன. குறிப்பிட்டுக் கூறுவதானால், இந்திய மாணவர்கள் மீதான இனவெறித் தாக்குதல்கள் அந்த நாட்டில் சமீப காலங்களில் அதிகரிக்கத் தொடங்கின.

ஆஸ்திரேலியாவின் வளத்தை பிறநாட்டவர்கள் சுரண்டிச் செல்வதாகவும், அந்த நாட்டின் அரச பணத்தில் பிறநாட்டு மாணவர்கள் கல்விகற்று உள்நாட்டவர்களின் வாய்ப்பைத் தட்டிப் பறிப்பதாலேயே இவ்வித தாக்குதல்கள் நடைபெற்றதாகவும், இப்போது அது அதிகரித்துள்ளதாகவும் தகவல்கள் வெளிவந்தன.

இத்தகைய கருத்து ஆஸ்திரேலியாவில் பலமடைந்து வந்ததால், படகு அகதிகளையும் ஏனைய பல தரப்பினரையும் ஏற்றுத் தஞ்சமளிக்கும் கொள்கையை முன்னாள் பிரதமர் கெவின் ரூட் இறுக்கமாக்கினார்.

அதனால் சட்டவிரோதமான முறையில் படகுகளிலும் கப்பல்களிலும் சென்று தஞ்சம் கோருவோரைக் கிறிஸ்மஸ் தீவுக்கு அனுப்பி நீண்டகாலத்துக்குத் தடுத்துவைக்கும் முறையை ஆஸ்திரேலிய அரசு கைக்கொண்டது. அத்தோடு அகதிகளாகத் தஞ்சம் கோரிச் செல்வோரை காலவரையறை இன்றித் தடுத்து வைக்கப்படுவதும் வழக்கமாயிற்று.

ஆஸியின் இத்தகைய நடவடிக்கைகளால், கெடுபிடிகளால், ஆஸ்திரேலியக் கடலில் படகுகள் கவிழ்ந்து தஞ்சம் கோரச் சென்ற இலங்கையர் பலர் பலியாகிய சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகரித்தன. அதனைத் தொடர்ந்து தமது நாட்டுக்கு அகதிகளாக வருவதை நிறுத்துமாறும், படகு அகதி வியாபாரம் செய்வோரிடம் மாட்டிக்கொண்டு பணத்தைச் செலவிட்டு உயிர் ஆபத்தை விலைக்கு வாங்க வேண்டாம் என்றும் ஆஸ்திரேலியா அரசு வலியுறுத்தி வருகிறது.

மனிதக் கடத்தல்காரர்களால் பிழையாக வழிநடத்தப்பட வேண்டாம் என்றும் ஆஸ்திரேலிய அரசு உத்தியோகபூர்வமாகக் கோரிக்கை விடுத்து வருகிறது.

இலங்கையரின் புகலிடக் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படுவதை ஆஸ்திரேலிய அரசு இடைநிறுத்தி உள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

கெவின் ரூட்டின் கடும்போக்கு ஆஸ்திரேலியாவிலும், மனித உரிமை அமைப்புகள் மட்டத்திலும் பல எதிர்ப்புகளை உண்டாக்கி இருந்தது.

இப்போது புதிய பிரதமராகப் பதவி ஏற்றுள்ள ஜூலியா கில்லார்ட், அகதிகள் விடயத்தில் கொள்கை மாற்றம் ஒன்றைக் கொண்டுவருவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. அது மெய்யாகும் விதத்தில், புதிய பிரதமராகப் பதவி ஏற்ற பின்னர் வழங்கிய செவ்வி ஒன்றில் ''அகதிகள் விவகாரத்தில் ஆஸ்திரேலியாவின் கொள்கைகளில் மாற்றம் கொண்டுவரப்படும்'' என்று அவர் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கையில் வன்னியில் நடைபெற்ற போரால் தமது உறவுகளை இழந்தும், தமது உடைமைகளை முற்றாக இழந்தும் எதிர்காலம் தொலைந்து போய்த் தவிக்கும் மக்களுக்கு அகதி வாழ்வாவது அளிக்க புதிய பிரதமரின் நிலைப்பாடு உதவட்டும்.

# புனிதத் தலங்களுக்கு அருகில் சமூகச் சீரழிவுச் செயல்கள்; சம்பந்தப்பட்டோர் மீது பொலிஸார் கடும் நடவடிக்கை

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 27

யாழ்.குடாநாட்டிலுள்ள கலாசார முக்கியத்துவம் வாய்ந்த புனிதத் தலங்களுக்கு அண்மையில் சமூகச் சீரழிவுச் செயல்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு எச்சரித்துள்ளார் யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவ.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

தற்போது வெளி இடங்களிலிருந்து யாழ்.குடாநாட்டுக்கு வரும் பொதுமக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இவ்வாறு வருபவர்களில் பலர் மதுபான வகைகளை உட்கொண்டு விட்டு ஆலயங்கள், விகாரைகள் போன்ற புனித இடங்களுக்கு அண்மையில் நடமாடுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.



எனவே இவ்வாறு நடமாடுபவர்கள் மற்றும் சட்டவிரோதமான முறையில் வீதிகளில் நின்று தகாத நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் உடனடியாகக் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அதுமட்டுமல்லாமல் சட்டவிரோதமான முறையில் மதுபான வகைகளை யாழ். குடாநாட்டுக்கு எடுத்து வருவோரும் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவர் - என்றார்.

(50-16)

# கோவை தமிழ் செம்மொழி மாநாட்டுக்கு உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம் வாழ்த்து

கொழும்பு, ஜூன் 27

தமிழ்நாடு - கோவையில் இடம்பெற்று வரும் தமிழ் செம்மொழி மாநாட்டுக்கு உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் தனது பாராட்டையும், வாழ்த்தையும் தெரிவித்துள்ளது.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் துணைத்தலைவர், காப்பாளர் மற்றும் செயலாளர் ஆகியோர் கூட்டாக விடுத்திருக்கும் வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

தமிழ்மொழிக்கு ''செம்மொழி'' என்ற அந்தஸ்தைப் பெற்றுத்தந்து, அகில உலக அடிப்படையில் மாநாடு நடத்தும் தமிழக முதல்வர் மு.கருணாநிதியின் முயற்சியை உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் வரவேற்றுப் பாராட்டுகின்றது.

உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களிடையே தமிழ்மொழியையும், தமிழ்ப் பண்பாட்டையும் பேணிப் பாதுகாக்கும் குறிக்கோளுடன் செயற்பட்டுவரும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தினர், செம்மொழி மாநாட்டின் குறிக்கோள் வெற்றிபெறவேண்டும் என்று வாழ்த்துகின்றனர்.

மொழி, பண்பாடு தொடர்பான அனைத்துச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அனைத்து மாநாட்டுக் குழு அமைப்பாளர்களையும் நாம் வாழ்த்துகிறோம்.

இந்த மாநாட்டின் மூலம் செம்மொழியாம் தமிழ்மொழி உலகெங்கும் நிலைத்து, நீடு வாழும் வழிவகைகளையும், அவற்றுக்கான ஆக்கப் பணிகளையும் இம்மாநாட்டில் திட்டமிடுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். அத்துடன் அத்தகைய பணியில் எமது இயக்கமும் இணைந்து செயற்படும் என்பதையும் அறியத்தருகிறோம் - இப்படி அந்த வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோட்டை அந்தோனியார் திருவிழா

கொழும்புத்துறை, ஜூன் 27

யாழ்.கோட்டை புனித அந்தோனியார் ஆலய வருடாந்த பெருவிழா இன்று மாலை நடைபெறவுள்ளது.

திருவிழாத் திருப்பலி இன்றுமாலை 5 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும். முன்னதாக மாலை 4 மணிக்கு நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் இருந்து புனித அந்தோனியாரின் திருச்சொரூபம் பவனியாகக் கோட்டை அந்தோனியார் ஆலயத்துக்கு எடுத்துவரப்படும். அதனைத் தொடர்ந்து திருப்பலியும் திருச்சொரூப ஆசீரும் இடம்பெறவுள்ளதாக பங்குத்தந்தை தெரிவித்தார்.

இவ்வாலயம் நாவாந்துறைப் பங்குத்தளத்தினால் நிர்வகிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(50-135)

# யாழ்.இந்து அணிகள் வெற்றி

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட துடுப்பாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 15 வயது மற்றும் 17 வயது அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

17 வயது அணியினருக்கான துடுப்பாட்டப் போட்டி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையில் கடந்த 22ஆம் திகதி இடம்பெற்றது. இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி இந்துக் கல்லூரியின் ஜஸ்மினின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் 116 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்குகளையும் இழந்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி பார்த்தீபனின் (68) அதிரடி அரைச்சதத்தின் உதவியுடன் 8 விக்கெட்டுக்குகளால் வெற்றியீட்டியது.

15 வயது அணியினருக்கான மற்றுமொரு போட்டி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணிக்கும் யாழ். மத்திய கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெற்றது. இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி சாரங்கனின் துல்லியமான பந்து வீச்சில் 85 ஓட்டங்களுக்குள் துவண்டது.பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி 7 விக்கெட்டுக்குகள் வித்தியாசத்தில் வெற்றிகொண்டது.

(50)

# நல்லூர் கோயிலில் தாலி திருடிய பெண்

கொழும்புத்துறை, ஜூன் 27

நல்லூர் கந்தசாமி ஆலயத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற பூசைகளில் கலந்து கொண்ட ஒரு பெண்ணிடமிருந்து தாலிக்கொடியை அறுத்த பெண்ணொருவர் வகையாக மாட்டிக் கொண்டார்.

இச்சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது;

கந்தனின் தரிசனத்தில் மூழ்கியிருந்த பெண் ஒருவர் தனது கழுத்தில் இருந்த தாலிக்கொடியை யாரோ எடுப்பதை உணர்ந்து கொண்டார். அருகில் நின்ற பெண் தாலிக்கொடியில் கை வைத்து இழுப்பதை கண்டுகொண்ட அவர் ஒரு கையால் தாலிக் கொடியையும் மறு கையால் பெண்ணின் தலை முடியையும் பற்றிக்கொண்டார்.

அந்தப் பெண் வகையாக மாட்டிக் கொள்ளவே அங்கிருந்தவர்கள் அவரைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தாகத் தெரிவிக்கப்பட்டது.

(50-135)

## இருநாட்டு கடற்றொழிலாளர்கள் பிணக்குகள் குறித்து

# அமைச்சர்கள் டக்ளஸ், ராஜிதவுடன் இந்திய மீனவர் பிரதிநிதிகள் பேச்சு

இந்தியக் கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகள் இருவர் நேற்றுமுன்தினம் கொழும்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கை-இந்திய மீனவர்கள் இடையே ஏற்படும் தொழில் ரீதியான பிரச்சினைகள் குறித்து இருதரப்பு பேச்சுவார்த்தைகளின் மூலம் சுமுகமாக தீர்க்கலாம் என்ற வகையில் இரு பிரதிநிதிகளும் அமைச்சர் தேவானந்தாவுடனான சந்திப்பின்போது குறிப்பிட்டனர்.

அதைத் தொடர்ந்து டக்ளஸ் தேவானந்தா, கடற்றொழில், நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரத்னவை அவரது அமைச்சில், இந்திய பிரதிநிதிகள் இருவரும் சந்தித்துப் பேசுவதற்கு ஏற்பாடு செய்தார்.

இருதரப்பு மீனவர்களின் தொழில் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் தமிழகத்தில் மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்வதென்றும் இதில் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, டாக்டர் ராஜிதசேனாரத்ன மற்றும் இலங்கை கடற்றொழிலாளர் பிரதிநிதிகளும் கலந்துகொள்ள ஏற்பாடு செய்யப்படும் என்றும் சந்திப்பின்போது தீர்மானிக்கப்பட்டது.

இம்மாநாட்டில் இந்திய மத்திய அரசினதும் தமிழக அரசினதும், கடற்றொழில் துறைசார்ந்த அமைச்சர்களும் கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளும் பங்குபற்றுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 14 | 28.06.2010 திங்கட்கிழமை |
| திதி | : துதியை மு.இ 07.52 வரை |
| நட்சத்திரம் | : உத்தராடம் பி.இ. 02.34 வரை |
| சுபநேரம் | : 11.55 - 01.25 |
| ராகுகாலம் | : 07.25 - 08.55 |

# இன்று மின்தடை

யாழ்ப்பாணம், ஜூன் 27

புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு மற்றும் வடமராட்சிப் பிரதேசம் முழுவதும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை மின்சாரம் தடைப்படும் என இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் மின்பொறியியலாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

பருத்தித்துறை பிரதான வீதியில் வீதி அகலமாக்கும் பணிகளுக்காக மின்சார விநியோகத் தூண்கள் இடமாற்றம் செய்ய வேண்டியுள்ளதனாலேயே மின்விநியோகம் துண்டிக்கப்பட வேண்டியுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

(50-14)

# நற்கருணைப் பெருவிழா

நவாலி,ஜூன் 27

நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தின் வருடாந்தப் பெருவிழா கடந்த 23 ஆம் திகதி ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற்றுவரும் இப் பெருவிழாவில் நாளை திங்கட்கிழமை மாலை நற்கருணை ஆராதனையும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு திருப்பலி பூசையும் திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும்.

(50-204-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் இம்முறை பெரும் போகத்தில் ஒரு லட்சம் ஏக்கர்களில் நெற்செய்கை

## இலவச விதை நெல், மானிய விலையில் உரம் வழங்க ஏற்பாடு

திருகோணமலை,ஜூன்27

வடக்கு மாகாண சபைக்குட்பட்ட பிரதேசங்களில் இந்த வருடம் பெரும்போகத்தில் ஒரு லட்சம் ஏக்கர்களில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது. இதற்கு பல்வேறு ஊக்குவிப்புக்களும் வழங்கப்படவிருக்கின்றன.

வடக்கு மாகாண விவசாய அமைச்சுச் செயலாளர் எஸ். பத்மநாதன் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

வடக்கில் மேற்கொள்ளப்படவுள்ள நெற்செய்கை தொடர்பாக அவர் மேலும் உதயனுக்குத் தெரிவித்தவை வருமாறு:-

யுத்தம் ஆரம்பிக்க முன்னர் 1999 ஆம் ஆண்டில் பெரும் போகத்தில் 97 ஆயிரம் ஏக்கர்களில் நெற்செய்கை மேற்கொள் ளப்பட்டு வந்தது. யுத்தம் தீவிரமான பின் நெற்செய்கை பாதிக்கப்பட்டு, யுத்தம் முடிவடைந்த பின்னர் கடந்த கால சிறுபோகத்தில் 5,800 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

அடுத்த பெரும் போகத்தில் ஒரு லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 3 ஆயிரம் ஏக்கர்களிலும் வவுனியாவில் 10 ஆயிரம் ஏக்கர்களிலும் மன்னாரில் 14 ஆயிரம் ஏக்கர்களிலும் முல்லைத்தீவில் 32 ஆயிரம் ஏக்கர்களிலும் கிளிநொச்சியில் 43 ஆயிரம் ஏக்கர்களிலும் நெற்செய்கை மேற்கொள்ளத் திட்ட மிடப்பட்டுள்ளது.

நெற்செய்கையை ஊக்குவிக்க இலவச விதை நெல் வழங்கப்படுவதுடன் உரம் மானிய அடிப்படையில் விநியோகிக்கப்படும்.

நிலத்தை இலவசமாக உழுது பண்படுத்த ஏற்பாடு செய்யப்படும். சொந்தமாக விவசாயிகள் உழுதால் ஏக்கருக்கு 4 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஒ- 1)

### பிரிட்டனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் அதிகாரிகளைச் சந்திக்கவிருக்கும் அவர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடவிருக்கிறார்.

பல்வேறு தரப்புகளைச் சந்தித்து குடா நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து அவர் விரிவாக ஆராயவிருக்கிறார். (ஒ-1)

### திடீரென...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக சுரேஷ் பிரேமச்சந்திரன் உதயனுக்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தக் கூட்டத்துக்கு இதுவரை எமக்கு உத்தியோகபூர்வமாக அழைப்பு எதுவும் கிடைக்கவில்லை. எம்முடன் என்ன விடயங்கள் குறித்து அவர்கள் (ஏனைய கட்சியினர்) பேச ஆர்வமாக உள்ளார்கள் என்ற விவரங்களை எமக்கு அறிவித்தால் அவை தொடர்பாக எமது கூட்டமைப்பு கூடி முடிவு செய்யும்.

கூட்டுக்கள் கொள்கை அடிப்படையில் ஏற்படவேண்டும். வெறும் சுயநலத்துக்காக கூட்டுக்கள் ஏற்படக்கூடாது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் புலம்பெயர்ந்த தமிழர்கள் தமிழ்க்கட்சிகளுக்கு இடையில் ஒற்றுமையை ஏற்படுத்த முயற்சி எடுத்தனர்.

இதற்காக சுவிஸில் சகல தமிழ்க் கட்சிகளின் தலைவர்களையும் ஒன்று கூட்டினர். அக்கூட்டத்தில் கலந்துகொண்ட ஈ.பி.டி.பி. சுயநிர்ணயத்தை ஏற்கமுடியாது என்று உறுதிபடக்கூறிவிட்டது.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட டக்ளஸ் தேவானந்தா, சுயநிர்ணயம் பற்றித் தெரியாது என்று கூறிவிட்டார். அப்படி, ஏன், என்ன காரணத்துக்காகக் கூறினார் என்பது எமக்குத் தெரியாது - என்றார் சுரேஷ். (ஒ-1)

4 மாடிக் கட்டடம், சத்திரசிகிச்சைக் கூடம் உட்பட

## யாழ்.ஆஸ்பத்திரி அபிவிருத்திப் பணிகளுக்கு ஜப்பான் அரசு ரூபா 3 கோடி நிதியுதவி

கொழும்பு, ஜூன் 27

யாழ். போதனா வைத்தியசாலையைத் தரம் உயர்த்துவதற்கும் - அபிவிருத்தி செய்வதற்கும் ஜப்பான் அரசு மூன்று கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தம் நேற்று முன்தினம் கொழும்பில் கைச்சாத்தானது.

சுகாதார அமைச்சு செயலாளர் டாக்டர் ரவீந்திர ருபேரூவும் ஜப்பான் அரசின் பிரதிநிதிகளும் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டனர்.

''வடக்கின் வசந்தம்'' திட்டத்தின் கீழ் சுகாதார அமைச்சு இந்தத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.

ஜப்பான் அரசின் ''ஜெசிக்கா'' என்ற அரச உதவி நிறுவனம் இந்த உதவியை வழங்கவிருக்கிறது.

இந்த உதவியின் கீழ் புதிய நான்கு மாடிக் கட்டடங்கள், புதிய சத்திரசிகிச்சை கூடம், அதிதீவிர சிகிச்சைப் பிரிவு, புதிய ஆய்வுகூடம் ஆகியவையுட்பட பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்றன. (ஒ-1)

### ஐ.நா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விடயத்தை ஐ.நாவின் பொதுச் சபையுடன் ஆலோசிப்பதற்கு முன்னர் செயலாளர் நாயகம் இப்படி ஒரு முடிவு எடுத்திருக்கக்கூடாது என்று ரஷ்யா தெரிவிக்கிறது.

ஐ.நா. செயலாளர் நாயகத்தின் முடிவு குறித்து சீனாவும் தனது ஆட்சேபனையைத் தெரிவித்திருப்பதாக கொழும்பில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுத் தெரிவித்தது.

இதேவேளை, இலங்கை விவகாரம் தொடர்பில் விசேட நிபுணர்கள் ஆலோசனைக் குழு நியமிக்கும் உத்தேசத்தை அணிசேரா நாடுகள் இயக்கம் எதிர்ப்பதாக கடந்த மார்ச் மாதத்திலேயே தெரிவித்து விட்டதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

### எந்தவிடயத்திலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாகவும் உறுதியான பதில் ஏதும் அரச தரப்பால் வழங்கப்படவில்லை.

1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த முள்ளிப் பிரதேச மக்களின் மீள்குடியமர்வு தொடர்பாக எடுத்துக் கூறினோம். அந்தப் பிரதேசம் அதிஉயர் பாதுகாப்பு வலயமாக இருப்பதால் உடனடியாக மீள்குடிய மர்வு சாத்தியம் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

மின்விநியோகம், தொண்டர் ஆசிரியர் நியமனம் ஆகிய விடயங்கள் குறித்தும் பிரஸ்தாபித்தோம். அவற்றுக்கும் சரியாக - தகுந்த பதில் ஏதும் தரப்படவில்லை.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் எமது வளங்கள் சூறையாடப்படுவதாகத் தெரிவித்தோம். அதற்கும் சரியான பதில் கிடைக்கவில்லை.

மொத்தத்தில் எந்த ஒரு விடயம் தொடர்பாகவும் உறுதியான - ஆக்கபூர்வமான பதில் அரச தரப்பில் இருந்து தரப்படவில்லை - என்றார் செல்வம் அடைக்கலநாதன். (ஒ-1)

### வடக்கு கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொசன் பண்டிகையை முன்னிட்டு இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய, மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடங்களுக்குச் சென்று விசேட பூஜை வழிபாடுகளில் பங்குபற்றினார்.

அடுத்து தலதா மாளிகையில் புனித சின்னத்தைத் தரிசித்து விசேட பூசைகளில் பங்குபற்றினார்.

முதலில் அஸ்கிரிய மகாநாயக்கர் அதி வணக்கத்துக்குரிய உடுகம ஸ்ரீ புத்திரகித்த மகாநாயக்க தேரரையும், அதன் பின்னர் மல்வத்த மகாநாயக்க தேரர் அதி வண. திபொட்டுவேவ ஸ்ரீ சுமங்கல மகா நாயக் கரையும் தனித்தனியே சந்தித்து ஆசிபெற் றார்.

இலங்கை இராணுவம் சவாலையும் எதிர்கொள்ளும் பலமும் தகுதியும் பெற்றிருக்கிறது. அதனால் நாட்டின் அபிவிருத்திப் பணிகளில் இராணுவத்தினரை ஈடுபடுத்தலாம். அவ்வாறு செய்வதன் மூலம் நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை விரைந்து அடையலாம் - என்று இரண்டு மகா நாயக்கர்களும் இராணுவத் தளபதியிடம் கருத்து வெளியிட்டனர்.

அதற்குப் பதிலளிக்கையில் இராணுவத் தளபதி தெரிவித்தவை யாவது:-

வடக்கு, கிழக்கில் உள்ள சகல மதங்களினதும் வழிபாட்டுத் தலங்களை புனர்நிர்மாணம் செய்வதில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர். அந்தப் பணிகளுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

அதேவேளை வடக்கு, கிழக்கில் இராணுவக் குடியிருப்புகளை அமைப்பதிலும் அவர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

வடக்கு, கிழக்கில் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடும் பொருட்டு அங்கு கடமைக்குச் செல்லும் இராணுவத்தினருக்கு நிரந்தர வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவுள்ளன. அவர்கள் விரும்பினால் நெல் உற்பத்தி உட்பட விவசாயத்திலும் ஈடுபட அனுமதிக்கப்படுவர்.

அந்த இரண்டு மாகாணங்களிலும் பொறியியல் வேலைகள் உட்பட நெடுஞ்சாலைகள், பாலங்கள், தொழிற்சாலைகள், வீடுகள் ஆகியவற்றை நிர்மாணிப்பதில் இராணுவத்தினரை ஈடுபடுத்தினால், அர சாங்கத்துக்கு பெருந் தொகை பணத்தை மிச்சம் பிடிக்கலாம், சேமிக்கலாம் - என்று இராணுவத் தளபதி , இரண்டு மகா நாயக்க தேரர்களிடமும் எடுத்துச் சொன்னார். (அ)

**வீடு வாடகைக்குண்டு**

இந்து மகளிர் ஒழுங்கையில் அமைந்துள்ள வீடு ஒன்று வருடாந்த வாடகைக்கு. நிறுவனங்களுக்கு மட்டும் கொடுக்கப்படும். T.P.: 0776093341

**வீடு / அறைகள் வாடகைக்குண்டு**

யாழ். பல்கலைக்கழக சுற்றாடலில் அமைதியான சூழலில் பல்கலைக்கழக மாணவிகளுக்கு / வேலை செய்யும் பெண் களுக்கு சகல வசதியுடன் கூடிய அறைகள் வாடகைக்குண்டு.
T.P.: 0777061892-பகல் / 0213210124 இரவு

**தேவை**

யாழ். நகரிலுள்ள நிறுவனம் ஒன்றிற்கு கணனிரைப் செற்றிங் செய்யக் கூடியவர் தேவை. (பெண்கள்)
(முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு : 0718474325, 0770366123

**தவறிவிட்டது**

புத்தூர் சந்திக்கும் சிறுப்பிட்டிக்கும் இடையில் வைத்திய உபகரணங்களுடன் மற்றும் முக்கிய ஆவணங்களுடன் வைத்திய பாக் (Medical Bag) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு : Dr.T. புவிராசன், நவீன வைத்திய நிலையம், [மத்திய கல்லூரி அருகில்], அச்சுவேலி. தொ.பே.: 0774424440

**இறைச்சி கோழி விற்பனை**

நிறை கூடிய புறொயிலர், கல்பேட்ஸ் என்பன மிக மலிவான விலையில் சுத்தம் செய்து எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம்.
சுத்தம் செய்த புறொயிலர் 1 Kg 450 ரூபா மட்டும்.
மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும்.
தொடர்பு : மல்ரி பாம் சென்ரர், 61, இராமநாதன் வீதி, (நாச்சிமார் கோயிலடி)

**கார் விற்பனைக்கு**

11 Sri XXXX தொடர் இலக்கமுடைய மிகவும் நல்ல நிலையிலுள்ள மிற்சுபிசி லான்சர் (Shoe model) கார் ஒறிஜினல் வளங்களுடன் A/C உட்பட அனைத்தும்இயங்கும் நிலையில் விற்பனைக்குண்டு. [illegible]4528818 / 0215673818
148, கோயில் வீதி, (யுனிசெவ் முன்பாக) யாழ்ப்பாணம்.

**மக்லியோட் வைத்தியசாலை, இணுவில்,**
**Mc Leod Hospital, Inuvil ஸ்தாபிதம்-1898ஆம்**

**வாய், பல் சிகிச்சைப் பகுதி**

**முக்கிய அறிவித்தல்**

இணுவில் மக்லியோட் வைத்தியசாலையின் வாய், பல் சிகிச்சைப் பகுதி திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று நாள்களில் மாலை 4 மணிக்கு பல் வைத்தியரால் நடத்தப்படுகின்றது என்பதை அறியத் தருகின்றேன்.
தொலைபேசி : 0212227669, 0776171451, 0772132517, 0213211522
வைத்திய மேலதிகாரி
Medical Superintendent
(99972)

**Deutsch, Dutch, French, Italian**

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
**Vivekananda Academy**
**(Centre for International language Studies)**
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
[illegible]
வகுப்புக்கள் தற்பொழுது ஆரம்பமாகின்றன.
GOV. Reg. No W/A 76795
T.P : 077 4842464, 021 3216928, 0779927117

உங்களுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளதா! உடன் விரையுங்கள்
**மதிகலர்ஸ் பிறிண்டர்ஸ்**
**திருமண அழைப்பிதழ் காட்சியறை**
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 300க்கு மேற்பட்ட பல வர்ண புத்தம்புதிய டிசைன்களுடன் எமது காட்சியறையில் பிறிண்டிங் வசதியுடன் உங்களுக்காக...
15/2B, முருகேசர் லேன், நல்லூர், [முத்திரைச்சந்தி]
WEDDiNG CARD SHOW ROOM
தொ.இல : 021 2229285, 0777 222524
இணையத்தளம் : www.mathicolours.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் லிமிட்டட். கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்று - 2009/10

## வருமானக்கூற்று

| | நிறுவனம் 01.01.09-31.03.10 (15 மாத காலம்) குறிப்புகள் 2009/10 ரூ. | நிறுவனம் 2008 ரூ. | குழுமம் 01.01.09-31.03.10 (15 மாத காலம்) 2009/10 ரூ. | குழுமம் 2008 ரூ. |
|---|---|---|---|---|
| வருமானம் | 1,898,899,386 | 1,638,454,558 | 1,900,439,911 | 1,638,973,113 |
| வட்டி வருமானம் | 1,794,819,119 | 1,496,219,576 | 1,796,359,644 | 1,496,726,731 |
| கழிக்குக : வட்டிச் செலவு | 1,190,634,646 | 1,092,348,424 | 1,190,634,646 | 1,092,348,424 |
| தேறிய வட்டி வருமானம் | 604,184,473 | 403,871,152 | 605,724,998 | 404,378,307 |
| ஏனைய வருமானம் | 104,080,267 | 142,234,982 | 104,080,267 | 142,246,382 |
| | 708,264,740 | 546,106,134 | 709,805,265 | 546,624,689 |
| கழிக்குக: நிர்வாகச் செலவுகள் | | | | |
| ஆளணிச் செலவுகள் | 163,536,615 | 121,024,590 | 163,536,615 | 121,024,590 |
| பொறி, ஆதனம் மற்றும் நிர்வாக செலவுகள் | 209,693,315 | 159,818,765 | 209,773,314 | 159,948,017 |
| சந்தைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் செலவுகள் | 131,905,123 | 113,948,015 | 131,905,123 | 113,987,866 |
| நிதியியல் கட்டணங்கள் | 10,586,865 | 11,718,259 | 10,587,365 | 11,727,259 |
| | 515,721,918 | 406,509,629 | 515,802,417 | 406,687,732 |
| கடன் இழப்பு ஏற்பாட்டுக்கு முன்னரான இலாபம் | 192,542,822 | 139,596,505 | 194,002,848 | 139,936,957 |
| அறவிட முடியாத மற்றும் ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு | 91,282,709 | 55,923,046 | 91,657,709 | 55,923,046 |
| சாதாரண நடவடிக்கைகளிலிருந்தான வரிக்கு முந்திய தொழிற்பாட்டு இலாபம் | 101,260,113 | 83,679,459 | 102,345,139 | 84,013,911 |
| நிதிச்சேவைகளிலான பெறுமதி சேர் வரி | 12,520,412 | 12,436,285 | 12,520,412 | 12,436,285 |
| வருமான வரிக்கு முந்திய இலாபம் | 88,739,701 | 71,237,174 | 89,824,727 | 71,577,626 |
| வருமான வரிச்செலவுகள் | 9,163,093 | 5,947,671 | 9,548,548 | 6,068,332 |
| வருமான வரிக்குப்பிந்திய இலாபம் | 79,576,608 | 65,289,503 | 80,276,179 | 65,509,294 |
| பங்குதாரர்களுக்கான ஒதுக்கம் | | | | |
| சாதாரண பங்குதாரர்களுக்கான ஒதுக்கம் | | | | |
| முன்னுரிமைபங்குதாரர்களுக்கான ஒதுக்கம் | | | 80,276,179 | 65,509,294 |
| காலப்பகுதிக்கான தேறிய இலாபம் | 79,576,608 | 65,289,503 | 80,276,179 | 65,509,294 |
| பங்கொன்றின் விகித இலாபம் (ரூ.) | 1.60 | 2.51 | 1.62 | 2.51 |

மேற்தரப்பட்ட நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட வங்கியின் கணக்குகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன. இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமத்துக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

## ஐந்தொகை

| | நிறுவனம் 31.03.2010 ரூ. | நிறுவனம் 31.12.2008 ரூ. | குழுமம் 31.03.2010 ரூ. | குழுமம் 31.12.2008 ரூ. |
|---|---|---|---|---|
| சொத்துக்கள். | | | | |
| காசும் காசுக்கு சமனானவையும் | 7,165,259 | 10,617,132 | 7,467,653 | 10,619,530 |
| அரச பிணைகளிலான் முதலீடுகள் | 549,962,183 | | 549,962,183 | |
| அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிலான முதலீடுகள் | 144,047,575 | 518,592,354 | 144,047,575 | 518,592,354 |
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணைகள் | 150,102,605 | | 150,102,605 | |
| வட்டியில்லா கடன்களும் முற்பணங்களும் | | 1,541,626 | | |
| கடன்களும் முற்பணங்களும் | 1,210,855,151 | 1,285,880,114 | 1,214,900,628 | 1,292,914,188 |
| குத்தகைகளிலான நிகர முதலீடுகள் | 2,949,261,028 | 3,555,556,342 | 2,949,261,028 | 3,555,556,342 |
| வாடகை கொள்வனவிலான நிகர முதலீடுகள் | 874,967,565 | 791,322,113 | 874,967,565 | 791,322,113 |
| ஏனைய பிணைகளிலான முதலீடு | 100,909,075 | 125,909,075 | 100,909,075 | 125,909,075 |
| உப மற்றும் துணை நிறுவனங்களிலான முதலீடுகள் | 5,000,000 | 5,000,000 | | |
| வருவாய்கள் | 259,449,645 | 130,019,550 | 259,449,645 | 130,019,550 |
| ஏனைய சொத்துக்கள் | 203,215,974 | 172,044,544 | 203,215,974 | 172,044,544 |
| முதலீட்டு ஆதனங்கள் | 20,197,977 | | 20,197,977 | |
| நிலையான சொத்துக்கள் | 200,669,868 | 198,647,455 | 200,669,868 | 198,647,455 |
| மொத்தச் சொத்துக்கள் | 6,675,803,905 | 6,795,130,305 | 6,675,151,776 | 6,795,625,151 |
| பொறுப்புக்கள் | | | | |
| வாடிக்கையாளர் வைப்புக்கள் | 4,837,875,995 | | 4,837,875,995 | |
| கடன்பாடுகள் | 755,046,204 | 5,435,743,862 | 755,046,204 | 5,435,743,862 |
| திபெஞ்சர்கள் | 73,880,000 | 248,954,700 | 73,880,000 | 248,954,700 |
| சிறுபான்மையினர் நலன்கள் உரிமையாண்மையும் | 11,146,870 | 6,482,049 | 11,146,870 | 6,482,049 |
| ஏனைய பொறுப்புக்கள் | 484,639,791 | 670,311,257 | 483,068,300 | 670,586,312 |
| மொத்தப் பொறுப்புக்கள் | 6,162,588,860 | 6,361,491,868 | 6,161,017,369 | 6,361,766,923 |
| பங்குதாரர் நிதியம் | | | | |
| சாதாரண மூலதனம் | 396,850,480 | 396,850,480 | 396,850,480 | 396,850,480 |
| நியதிச்சட்ட ஒதுக்கு நிதியம் | 46,288,304 | 6,500,000 | 46,288,304 | 6,500,000 |
| மீள்மதிப்பிடப்பட்ட ஒதுக்கங்கள் | 15,082,857 | 15,082,857 | 15,082,857 | 15,082,857 |
| வருமான ஒதுக்கம் | 54,993,404 | 15,205,100 | 55,912,766 | 15,424,891 |
| சாதாரண பங்குதாரருக்கான வட்டி | | | | |
| பங்குதாரர் நிதியம் | 513,215,045 | 433,638,437 | 514,134,407 | 433,858,228 |
| மொத்த பொறுப்புக்கள், பங்குதாரர் நிதியங்கள் மற்றும் சாதாரண பங்குதாரருக்கான வட்டி | 6,675,803,905 | 6,795,130,305 | 6,675,151,776 | 6,795,625,151 |
| சாதாரண பங்கு ஒன்றிற்கான மொத்தச்சொத்து வீதம் | 2.93 | 10.93 | 12.96 | 10.93 |

## தெரிவு செய்யப்பட்ட செயற்பாட்டு குறிகாட்டிகள்

| குறிகாட்டி | 31/03/2010 இல் உள்ளபடி | 31/12/2008 இல் உள்ளபடி |
|---|---|---|
| சொத்துக்களின் தரம் | | |
| மொத்தக்கடன் (நிறுத்தி வைக்கப்பட்ட வட்டி நீங்கலாக) | 5,234,608,116 | 5,751,458,713 |
| தேறிய மொத்தக்கடன் (நிறுத்தி வைக்கப்பட்ட வட்டி மற்றும் ஏற்பாடு என்பவற்றின் தேறியது) | 5,035,083,744 | 5,632,758,569 |
| செயற்படா கடன் (நிறுத்தி வைக்கப்பட்ட வட்டி நீங்கலாக) | 396,290,688 | 295,688,159 |
| ஒழுங்குபடுத்தும் திரவத் தன்மை | | |
| தேவையான ஆகக் குறைந்த திரவச் சொத்து | 566,680,220 | |
| கைவசமுள்ள திரவச் சொத்து | 851,277,622 | 529,209,486 |
| தேவையான ஆகக் குறைந்த அரச பிணைகள் | 425,010,165 | |
| கைவசமுள்ள அரச பிணைகள் | 700,064,788 | |
| மூலதன போதுமை | | |
| இடர்நேர்வு நிறைவேற்றப்பட்ட சொத்துக்களின் வீதம் (குறைந்தது 5%) | 9.17% | |
| மொத்த நிறைவேற்றப்பட்ட சொத்துக்களின் வீதம் (குறைந்தது 10%) | 9.17% | |
| மொத்த வைப்புப்பொறுப்பானது மூலதனத்தின் வீதம் (குறைந்தது 15%) | 8.91% | |
| இலாப இயலுமை | | |
| சொத்துக்களின் மீதான வருவாய் | 1.18% | 1.18% |
| உரிமை மீதான வருவாய் | 16.80% | 23.10% |

மேற்தரப்பட்ட நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட வங்கியின் கணக்குகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன. இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமத்துக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன. மேலே தரப்பட்டுள்ள நிதியியல் தரவுகள் 2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிச் சட்டம் மற்றும் 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிச் சட்டம் என்பவற்றுக்கு அமைவானவை என உறுதிப்படுத்துகிறேன்.

(ஒப்பம்)
தமித் தென்னகோன்
உதவிப்பொது முகாமையாளர் - நிதி

மேற்தரப்பட்ட நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட வங்கியின் கணக்குகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன. இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமத்துக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன. இந்நிதிக்கூற்று தயாரிக்கப்பட்டமை மற்றும் வழங்கப்பட்டமை தொடர்பில் பணிப்பாளர்சபை பொறுப்பு கூறுகிறது.

பணிப்பாளர் சபைக்காக அல்லது அதற்கு பதிலாக கையொப்பம் இடப்பட்டுள்ளது.

(ஒப்பம்)
ஆர். ரெங்கநாதன்
தலைவர்

(ஒப்பம்)
சி.எம்.நாணாயக்கார
பணிப்பாளர்/பொது முகாமையாளர்/பி.நி.அ.

04 ஜுன் 2010
கொழும்பு

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் லிமிட்டட்,
தலைமையகம்: இல.18, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ.பே: 0117 388388
இலங்கை மத்திய வங்கி நாணயச்சபையின் 1988ம் ஆண்டு 78ம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

www.cdb.lk எனும் இணையத்தளத்திலும் 2009/10 ஆண்டறிக்கையை பெறமுடியும்.

CDB
சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட்
உங்கள் நண்பன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org